

ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிட்டட்
ஆண்டறிக்கை 2022

உள்ளடக்கங்கள்

நிதி சிறப்பம்சங்கள்	2
செயற்பாட்டு சிறப்பம்சங்கள்	3
தலைவரின் ஆய்வுரை	4
பணிப்பாளர் சுயவிபரங்கள்	6
கூட்டிணைந்த ஆளுகை	9
இடர் முகாமைத்துவம்	12
முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு	15
நிலைத்தன்மை அறிக்கை	16
கம்பனியின் விவகாரங்கள் தொடர்பான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை	20
கணக்காய்வுக் குழு அறிக்கை	22

நிதிக்கூற்றுக்கள்

சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை	25
விரிவான வருமானக் கூற்று	28
நிதி நிலைமைக் கூற்று	29
உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று	30
காசுப்பாய்ச்சல் கூற்று	31
நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள்	32
ஐந்து ஆண்டு நிதிப் பொழிப்பு மற்றும் பிரதான குறிகாட்டிக்கள்	54
நிறுவன தகவல்கள்	பின் அட்டையின் உட்புறம்











நிதி சிறப்பம்சங்கள்

	2022	2021
அறை வருமானம் இலங்கை ரூபா '000	666,637	236,944
F&B வருமானம் இலங்கை ரூபா '000	2,185,005	925,077
ஏனைய வருமானம் இலங்கை ரூபா '000	35,625	16,360
மொத்த வருமானம் இலங்கை ரூபா '000	2,887,267	1,178,381
மொத்தலாபம் இலங்கை ரூபா '000	1,061,770	255,686
மொத்தலாப எல்லை %	36.77%	21.70
வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்) இலங்கை ரூபா '000	(632,764)	(976,415)
வரிக்குப் பின்னரான இலாபம் இலங்கை ரூபா '000	(885,123)	(957,225)
காலப்பகுதிக்கான மொத்த விரிவான வருமானம் இலங்கை ரூபா '000	(882,153)	(934,595)
பங்கொன்றிற்கான சம்பாதிப்பது/(நட்டம்) இலங்கை ரூபா	(0.43)	(0.46)
சராசரி அறை விலைவிகிதம் இலங்கை ரூபா	29,776	16,754
குடியிருத்தல் %	19.45%	9.50%
நீண்டகால வட்டியை கொண்ட கடன்கள் இலங்கை ரூபா '000	2,000,000	1,098,372
குறுகிய காலக் கடன்	1,148,746	1,348,928
மொத்த மூலதனம் இலங்கை ரூபா '000	12,282,767	13,164,918
கடன்/உரிமை மூலதனம் %	25.64%	18.59%
மொத்த சொத்துக்கள் இலங்கை ரூபா '000	17,229,775	16,768,381
கடன்/ மொத்த சொத்துக்கள் %	18.28%	14.59%
நடைமுறைச் சொத்துக்கள் இலங்கை ரூபா '000	1,438,197	941,469
நடைமுறைப் பொறுப்புக்கள் இலங்கை ரூபா '000	2,235,648	2,006,163
நடைமுறை விகிதம் (தடவைகள்)	0.64	0.47
விரைவுச் சொத்து விகிதம் (தடவைகள்)	0.58	0.44

செயற்பாட்டு சிறப்பம்சங்கள்

எமது குழு

எமது குழு
603 ஊழியர்கள (2021: 557)

பயிற்சி மற்றும் அபிவிருத்தி மணித்தியாலங்கள்
19,261 வருடாந்த பயிற்சி மணித்தியாலங்கள் (2021: 18,909)

ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள்
ரூபா 731 மில்லியன் (2021: ரூபா 506 மில்)

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சான்றிதழ்கள்

உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள்:

- ISO 22000: 2018 உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள்
- HACCP

ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பு சான்றளித்தல்
லங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை மூலம் - 2022

விருதுகள் பாராட்டுக்கள

Travelers' Choice 2022

WORLD MICE AWARDS NOMINEE 2022

SLIM KANTAR PEOPLES AWARDS 2022 The true voice of Sri Lanka

SLIM KANTAR Sri Lanka Institute of Marketing

2022 WINNER WORLD LUXURY TRAVEL AWARDS

தலைவரின் ஆய்வுரை

ஹில்டன் கொழும்பு 2023 ஆம் ஆண்டின் போது அதன் அறையின் புனரமைப்பின் பெரும்பகுதியை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கிறது, இது அதன் சாப்பாட்டு சலுகைகளின் பிரபல்யத்துடன் அறையின் வருமானத்தை விரிவுபடுத்துவதற்கு உதவும். புதிதாக புதுப்பிக்கப்பட்ட அறைகள் மற்றும் பொது இடங்கள் ஹில்டன் வியாபாரக் குறியின் தரத்திற்கு இணையாக சொத்துக்களை வைத்திருக்கும். 273 விருந்தினர் அறைகள் பூர்த்தி செய்யப்படுதல் ஒரு புதிய விலை மூலோபாயத்தின் ஒரு பகுதியாக உயர் வருமானத்தை விளைவிக்க வேண்டும். இது ஒரு பிரீமியம் தர தயாரிப்பு மீதான இலாபத்தை ஊடுருவுவதற்கும், மேலும் நகரத்தில் உள்ள ஏனைய சர்வதேச ஹோட்டல் சங்கிலிகளை விட முன்னேறுவதற்கும் பின்பற்றப்படும். மேலும், தொழிற்துறையின் மீட்சியானது இலங்கையில் நடைபெறவுள்ள பிராந்திய (MICE) நிகழ்வுகளுக்கான கதவுகளைத் திறக்க வேண்டும். இதில் ஹில்டன் கொழும்பு சந்தை முன்னணியில் இருந்த ஒரு பிரிவாகும். இந்த நிலையை ஒருங்கிணைப்பது குறுக்கு விற்பனை வாய்ப்புக்களையும் அதிகரிக்கும்.

2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிட்டட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை உங்களுக்கு வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கடந்த ஆண்டறிக்கையில் தொற்றுநோயிலிருந்து சுற்றுலாத்துறையை மீட்பதற்கு நான் வெளிப்படுத்திய நம்பிக்கை 2022 இல் வெளிப்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியால் பலவீனமடைந்தது. உலகளாவிய தொற்றுநோயின் பின்னர் மிக விரைவாக வந்த அதனுடன் இணைந்த சீர்குலைக்கும் எல்லை மூடுதல்கள் மற்றும் பூட்டுதல்கள் இலங்கையின் பயணம் மற்றும் சுற்றுலாத் துறைக்கு பெரும் அடியாக இருந்தது. 2021 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 2022 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் காணப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகையின் அதிகரிப்பு பொருளாதார நெருக்கடி வெளிப்பட்டதால் கொஞ்சம் கொஞ்சமாக குறைவடைந்துள்ளது.

தொழில்துறை கண்ணோட்டம்

குறிப்பிட்ட மாதங்களில் ஏற்ற இறக்கங்களுடன், ஆண்டு முழுவதும் வருகை அதிகரிக்கும் போக்கு காணப்பட்ட போதிலும், பொருளாதார நெருக்கடி 2022 இல் எதிர்பார்க்கப்பட்ட சுற்றுலா மீட்புக்கு தடையாக இருந்தது.

எனினும், ஓமிக்ரோன் மாறுபாட்டின் பரவல், உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு, சவாலான பொருளாதார நிலைமைகள், அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் உற்பத்தி தேக்கமுற்று பணவீக்கம் ஏற்படுதல் என்பன சுற்றுலாப் பயணிகளின் வருகையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. நிலைமைகள் மேம்பட்டு வந்த போதிலும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் உணவு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடும் உலக தலைப்புச் செய்தியாக அமைந்தது, சுற்றுலாப் பயணிகளை ஊக்கப்படுத்தவில்லை.

செயலாற்றல்

வெளிப்புற நிலைமைகள் ஹில்டன் கொழும்பின் ஒட்டுமொத்த செயற்பாடுகளை கடுமையாக பாதித்தது, இது இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையின்மை மற்றும் ஹில்டன் கொழும்பில் நடைபெற்று வரும் அறைகளை புதுப்பிக்கும் செயற்திட்டத்தினால் உள்ளூர் F&B நடவடிக்கைகளில் பிரதானமாக தங்கியிருக்க வேண்டியிருந்தது. இது தேவையை பூர்த்தி செய்வதற்கு ஹோட்டலில் இருக்கும் அறைகளின் இருப்பைக் குறைத்தது.

மீளாய்வாண்டில், ஹில்டன் கொழும்புச் செயற்பாடுகள் மொத்தமாக கிடைக்கக்கூடிய 382 இற்கு எதிராக 153 அறைகளின் மட்டுப்படுத்தப்பட்ட அறை விசைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. இந்த வரம்பு மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், 2 ஆண்டுகள் கடந்த பின்னர் 2022 இல் ரூபா 110 மில்லியன் பெறுமானத்தேய்விற்கு முன்னரான செயற்பாட்டு இலாபத்தைப் பதிவு செய்வதன் மூலம் கம்பனி தொழிற்துறைக்கான கடினமான காலத்தை முன்னோக்கி இயக்க மீண்டு வந்தது. இது அடுத்த நிதியாண்டில் - வருகை தரவின் முன்னேற்றத்தின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் தொழில்துறையின் முற்போக்கான மீட்சியுடன் வலுவான செயலாற்றலுக்கு தேவையான வேகம் மற்றும் போதுமான நம்பிக்கையை வழங்குகிறது

பொருளாதார நெருக்கடி மற்றும் தொழில்துறை பின்னடைவின் தாக்கத்தை இல்லாதாக்குவதற்கு கிரயக் குறைப்பு மற்றும் இடர் குறைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் கம்பனி சில முக்கிய சாதனைகளை இந்த ஆண்டில் பதிவு செய்துள்ளது. மறுசீரமைப்பு செயற்திட்டம் மற்றும் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை விரைவுபடுத்துவதற்கு தற்போதுள்ள ரூபா 2 பில்லியன் காலக் கடன் நீடிக்கப்பட்ட திருப்பிச் செலுத்தும் திட்டம் மற்றும் மேலும் ரூபா 3 பில்லியனால் வசதியின் அதிகரிப்புடன் மறுசீரமைக்கப்பட்டது. விவேகமான நிதி முகாமைத்துவம் மற்றும் ஹில்டன் கொழும்பின் செயற்பாடுகளுக்கான நிலையான அணுகுமுறை என்பன கொந்தளிப்பான வெளிப்புற பொருளாதார மற்றும் தொழில்துறை சூழ்நிலைகள் காணப்பட்ட போதிலும் கம்பனி நிலைத்துநிற்பதற்கு உதவியது.

ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையிலான வருமானத்துடன் ஹோட்டல் செயலாற்றலில் ஒரு நிலையான வளர்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது - 2021 ஆம் ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 97% அதிகரிப்பை பதிவு செய்துள்ளது, பொருளாதாரத்தில் படிப்படியான முன்னேற்றத்துடன் தொழில் மீட்பிற்கு உதவுகின்றது. ஒட்டுமொத்தமாக, தொலைநோக்கு சபை (visionary board) உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் ஆதரவுடன் ஒட்டுமொத்த குழுவின் விதிவிலக்கான முயற்சிகள், நாட்டின் வரலாற்றில் மிகவும் சவாலான ஆண்டுகளில் ஒரு வலுவான செயலாற்றலை வழங்குவதற்கு கம்பனியை வழிநடாத்தியது. 2022 இல் சவால்களை எதிர்கொண்ட போதிலும் ஆண்டுக்கு ஆண்டு வருமானம் 145% ஆல் ரூபா 2,887 மில்லியன் வரை அதிகரித்தது, அதே நேரம் சந்தை வட்டி விகிதங்கள் காரணமாக நிதிக் கிரயம் ரூபா 255 மில்லியனால் அதிகரித்த போதிலும் வலுவான வணிகம் மற்றும் கிரயக் குறைப்பு உத்திகள் மூலம் வரிக்கு முன்னரான நட்டம் ரூபா 344 மில்லியனால் ரூபா 632 மில்லியன் வரை குறைவடைந்தது.

எதிர்கால கண்ணோட்டம்

நாட்டின் பொருளாதார மீட்சியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) ஏற்பாட்டிற்கு இலங்கையின் பொருளாதாரத்திற்கான வாய்ப்புக்கள் மிகவும் நம்பிக்கைக்குரியதாக காணப்பட்டு நன்றி கூறுகின்றன. ஏற்கனவே, தீவுக்குள் சுற்றுலா வரவுகளில் ஒரு நிலையான முன்னேற்றம் உள்ளது, இது சுற்றுலா அதிகாரிகள் வளமூல சந்தைகளில் சந்தைப்படுத்தல் முயற்சிகளை மேற்கொள்வதால் வேகத்தை கூட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிக சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையுடன், ஒரு இலக்காக இலங்கையின் திறனை சிறப்பாக பிரதிபலிக்கும் வருமானத்தை பதிவு செய்வதற்கு தொழில்துறை தயாராக உள்ளது.

இலங்கைக்கு உள்வரும் சுற்றுலாப் பயணிகளின் தொழில்துறை போக்கு வரவிருக்கும் ஒரு சிறந்த ஆண்டிற்கான போதுமான நம்பிக்கையை அளிக்கிறது. இலங்கை சுற்றுலாத்துறை 2023 ஆம் ஆண்டிற்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை எதிர்வுகூறலை சீனாவின் பயணக் கட்டுப்பாடுகளை நீக்கியதுடன் சேர்த்து 2023 மார்ச்சில் சுற்றுலாப் பயணிகளின் கூர்மையான உயர்வின் அடிப்படையில் 1.55 மில்லியனில் இருந்து 2 மில்லியன் இலட்சிய இலக்கு வரை மேல்நோக்கி திருத்தியுள்ளது, இது சீன சுற்றுலாப் பயணிகளிடையே நிலவும் தேவை தொற்றுநோய் பரவிய பின்னர் முதல் முறையாக. அவர்கள் அதிக எண்ணிக்கையில் பயணிப்பதைக் குறிக்கிறது. சுற்றுலாத்துறை 2023 இல் வலுவான மறுபிரவேசம் செய்ய தயாராக உள்ளது, இது அதிகரித்து வரும் எண்ணிக்கையால் நிரூபிக்கப்பட்டுள்ளது. 2023.'.24 இன் முதல் காலாண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகையின் வளர்ச்சி கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 18% ஆகும், ஆனால் 2018 ஆம் அளவுகோல் ஆண்டின் முதல் காலாண்டை விட 53% குறைவாக உள்ளது.

ஹில்டன் கொழும்பு 2023 ஆம் ஆண்டின் போது அதனது அறையின் புனரமைப்பின் பெரும்பகுதியை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கிறது, இது அதன் சாப்பாட்டு சலுகைகளின் பிரபல்யத்துடன் அறை வருமானத்தை விரிவுபடுத்துவதற்கு உதவும். புதிதாக புதுப்பிக்கப்பட்ட அறைகள் மற்றும் பொது இடங்கள் ஹில்டன் வியாபாரக் குறியின் தரத்திற்கு இணையாக சொத்துக்களை வைத்திருக்கும். 273 விருந்தினர் அறைகள் பூர்த்தி செய்யப்படுதல் ஒரு புதிய விலை மூலோபாயத்தின் ஒரு பகுதியாக உயர் வருமானத்தை விளைவிக்க வேண்டும். இது ஒரு பிரீமியம் தர தயாரிப்பு மீதான இலாபத்தை ஊடுருவுவதற்கும், மேலும் நகரத்தில் உள்ள ஏனைய சர்வதேச ஹோட்டல் சங்கிலிகளை விட முன்னேறுவதற்கும் பின்பற்றப்படும். மேலும், தொழிற்துறையின் மீட்சியானது இலங்கையில் நடைபெறவுள்ள பிராந்திய MICE நிகழ்வுகளுக்கான கதவுகளைத் திறக்க வேண்டும். இதில் ஹில்டன் கொழும்பு சந்தை முன்னணியில் இருந்த ஒரு பிரிவாகும். இந்த நிலையை ஒருங்கிணைப்பது குறுக்கு விற்பனை வாய்ப்புக்களையும் அதிகரிக்கும்.

புதிதாகப் புதுப்பிக்கப்பட்ட தயாரிப்பு மற்றும் உலகளவில் புகழ்பெற்ற ஹில்டன் வியாபாரக் குறியுடன் கூடிய இந்த ஹோட்டல், உயர் நிகர மதிப்புள்ள உலகளாவிய கூட்டிணைந்த பயணிகளை ஈர்க்கும் வகையில், அதன் தனித்துவமான வணிகத் தொகுப்பு தயாரிப்புடன் கற்பனை செய்யக்கூடிய அனைத்து சந்தை வசாதிகளையும் பெருமைப்படுத்தும் புதிய சந்தைப் பிரிவுகளை ஆராய்ந்து இனங்காணும்.

நன்றி நவில்தல்கள்

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் கௌரவ பிரசன ரன்துங்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ அருந்திக பெர்னாண்டோ மற்றும் பணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் ஆகியோர் மிகவும் சவாலான ஆண்டின் போது அவர்களது அயராத முயற்சிகள் மற்றும் பங்களிப்புகளுக்காக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். ஹில்டன் கொழும்பின் பொது முகாமையாளர் மற்றும் பணியாளர்கள் வெளிப்புற சவால்களுக்கு மத்தியிலும் இடையூறுகள் இன்றி செயற்பாடுகளை நிலைநிறுத்துவதற்கு விதிவிலக்கான முயற்சியையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளனர். ஹில்டன் சர்வதேச முகாமைத்துவ கூட்டுத்தாபனதின் முகாமைத்துவத்திற்கு சவாலான ஆண்டு முழுவதும் கம்பனியுடனான அவர்களது மிகுந்த ஆதரவு மற்றும் ஒற்றுமைக்காக நன்றி தெரிவிக்க நான் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறேன்



உபுல் தர்மதாச
தலைவர்
2023 யூன் 28

பணிப்பாளர் சுயவிபரங்கள்

திரு. உபுல் தர்மதாச

தலைவர்

ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா பிறைவேட் லிமிட்டட்டின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், உபுல் தர்மதாச ஒரு விமானப் போக்குவரத்து, விருந்தோம்பல் மற்றும் பயண நிபுணராவார். மேலும் தற்போது 190 நாடுகளில் இயங்குகின்ற அமெரிக்காவை தளமாகக் கொண்ட சர்வதேச முன்பதிவு இயந்திரம் - Utravel.com ஐ கொண்ட ஒரே இலங்கையர் ஆவார். இவர் 2021 சனவரி முதல் 2023 சனவரி வரை இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் உடனடி கடந்த தலைவராகவும் உள்ளார்.

அவரது தொழில் முனைவோர் மனப்பாண்மைக்கு பெயர்பெற்றவர், அவரது நிறுவனம், Utravels.com தேசிய விமான நிறுவனமான ஸ்ரீ லங்கன் ஏயார்லைன்ஸிற்கு ஐ.அ.டொலர் 300 மில்லியனிற்கு மேல் வருமானத்தை ஈட்டியுள்ளது. அவர் அமெரிக்கன் ஏயார்லைன் பயிற்சிப் பாடசாலை, DFW, ரெக்ஸ்சாஸ், அமெரிக்காவில் விளைச்சல் முகாமைத்துவம், சரக்கிருப்புக் கட்டுப்பாடு, சர்வதேச விமானச் செயற்பாடுகள் போன்ற பயணத் துறைகளில் பயிற்சி பெற்றவராவார். மேலும் இவர் சப்ரி எயார்லைன் (Sabre Airline) கணனி முறைமை பற்றிய விரிவான அறிவைப் பெற்றுள்ளார்.

இவர் Teesside பல்கலைக்கழகம், Middleborough, Tees Valley, ஐக்கிய இராச்சியத்தில் MBA படித்துள்ளார் அமெரிக்காவின் பசடேனா கல்லூரியில் உணவு மற்றும் ஊட்டச்சத்தில் கலைப் பட்டத்தின் இணை உறுப்பினராவார். மேலும் 1975 இல் சிலோன் ஹோட்டல் பாடசாலையால் நடாத்தப்பட்ட ஹோட்டல் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை பூர்த்தி செய்துள்ளார். அமெரிக்காவில், அவர் ஒரு தொழில்துறை வளம்மிக்க அக்கடமியான மசாசூசெட்ஸின் சான்றளிக்கப்பட்ட பயண முகவர்கள் நிறுவனத்தில் இருந்து பயண முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தையும் பூர்த்தி செய்துள்ளதுடன் CTC (சான்றளிக்கப்பட்ட பயண ஆலோசகர்) பதவியை வழங்கினார்.

செல்வி டி.எஸ். அமரசேகர

பணிப்பாளர்

செல்வி அமரசேகர, வாஷிங்டன் DC – ஐக்கிய அமெரிக்காவில் உள்ள அமெரிக்கன் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் (சர்வதேச சந்தைப்படுத்தலில் நிபுணத்துவம்) விஞ்ஞானமானி பட்டத்தையும் ஐக்கிய அமெரிக்கா, ஹவாய் பல்கலைக்கழகத்தில் இருந்து பயணத் தொழில் முகாமைத்துவத்தில் (ஹோட்டல் முகாமைத்துவத்தில் நிபுணத்துவம்) விஞ்ஞானமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். அவரது தொழில்முறை வேலை ஹோட்டல் பணியாளராக உள்ளது.

இவர் இலங்கையின் கண்டியில் உள்ள விருது பெற்ற பூட்டிகியூ ஹோட்டல் - தேவா குடியிருப்பு மற்றும் விருது பெற்ற உணவகம் - தேவா சமையல் ஆகியவற்றின் முகாமைத்துவப் பணிப்பாளராவார். தேவா குடியிருப்பு மற்றும் தேவா சமையல் என்பன அவை செயற்படும் 14 ஆண்டுகளாக தொடர்ந்து பல சர்வதேச விருதுகளை வென்றுள்ளன. "பயணிப்பவர்களின் தெரிவு பயண ஆலோசகர் 2023", தெற்காசிய பயண விருதுகள் 2022 - முன்னணி பூட்டிக் ஹோட்டல் மற்றும் காதல் உணர்வுமிக்க ஹோட்டல் என்பன மிகச் சமீபத்திய விருதுகளாகும்.

அவர் ஜெப்ரி பாவா அறக்கட்டளையில் பணியாற்றுகிறார் - கொழும்பு - இலக்கம் 11 மற்றும் டி சாரம் இல்லத்தில் உள்ள பாவா சொத்துக்களின் செயற்பாடுகளை முகாமை செய்கிறார்

கலாநிதி அமிலா கங்கணம்கே

பணிப்பாளர்

கலாநிதி அமிலா கங்கணம்கே கல்வித்துறை, கூட்டுறவுத் தலைமைத்துவம் மற்றும் பொதுச் சேவை ஆகியவற்றில் ஈர்க்கக்கூடிய பின்னணியைக் கொண்டவர், பல்வேறு கூட்டுறவு மற்றும் அரசாங்க நிறுவனங்களில் செல்வாக்குமிக்க பதவிகளை வகித்து, இரு துறைகளிலும் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளார்.

குறிப்பிடத்தக்க வகையில், அவர் மொபிட்டல் (பிறைவேட்) லிமிட்டட்டின் சபை உறுப்பினராக வேவையாற்றினார், அங்கு அவரது நிபுணத்துவம் மற்றும் மூலோபாய நுண்ணறிவு கம்பனியின் வளர்ச்சி மற்றும் வெற்றியில் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்தது. மேலும், கலாநிதி. கங்கணம்கே சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் சபையில் சேவையாற்றினார். அவரது தொழில் முனைவோர் புத்திசாலித்தனத்திற்காக இனங்காணப்பட்ட கலாநிதி கங்கணம்கே E3X குழும கம்பனிகளின் ஸ்தாபக பணிப்பாளராக இருந்தார். அவரது தொலைநோக்கு தலைமைத்துவத்தின் கீழ், குழுமம் குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடைந்ததுடன் வணிக நிலப்பரப்பில் மரியாதைக்குரிய வீரராக மாறினார். அவரது தொழில் முனைவோர் பயணம் அவரது புதுமையான சிந்தனையையும், யோசனைகளை வெற்றிகரமான முயற்சிகளாக மாற்றும் திறனையும் வெளிப்படுத்துகிறது.

கலாநிதி கங்கணம்கே பல்வேறு வர்த்தக மற்றும் தொழில் சங்கங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அவர் சார்க் வர்த்தக சபையின் பொதுச் சபை உறுப்பினராக பணியாற்றினார். இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் பணிப்பாளராவார். மேலும் கொழும்பு வர்த்தக சம்மேளனத்தின் ஸ்தாபகத் தலைவராக நியமிக்கப்பட்டார், அங்கு அவர் வர்த்தகம், முதலீடு மற்றும் வணிகங்களிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தார். இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மத்திய ஆளுகைச் சபையில் சபை உறுப்பினராக அவரது தற்போதைய கடமையில் பொதுச் சேவைக்கான அவரது அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்படுகிறது.

கலாநிதி கங்கணம்கே டிஎஸ். சேனநாயக்கா கல்லூரியில் பயின்றார், அங்கு அவர் தனது மிகச்சிறந்த கல்விப் பயணத்திற்கு அடித்தளமிட்டார், இறுதியில் இளம் வயதில் Ph.D. ஐப் பெற்றார்.

திரு. மாதவ வத்தேகம

பணிப்பாளர்

திரு. மாதவ வத்தேகம அவர்கள் அரசாங்க அலுவல்கள், சர்வதேச உறவுகள் மற்றும் கணனிக் கற்கைகள் ஆகியவற்றில் பல்வேறு பின்னணியைக் கொண்ட ஒரு உயர் திறமையான நிபுணராவார். தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சரின் செயலாளராகப் பணியாற்றி வரும் அவர், அரச மற்றும் தனியார் துறைகளில் செல்வாக்குமிக்க பதவிகளை வகித்துள்ளார்.

தனியார் துறையில், இன்டிபெண்டன்ஸ் ஹோல்டிங்ஸ், சில்வர்பேர்ட் இன்டர்நேஷனல் மற்றும் ட்ரானிக் என்டர்டெயின்மென்ட் ஆகியவற்றின் தலைவராக அவர் செயற்பட்டுள்ளார், அங்கு இந்த நிறுவனங்களின் வெற்றிக்கு உந்துதலில் மிகச்சிறந்த தலைமைத்துவத்தையும் மூலோபாய தூரநோக்கையும் வெளிப்படுத்தியுள்ளார்.

அரசாங்கத் துறையில், அவர் தேசிய அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருந்த முக்கிய பதவிகளை வகித்துள்ளார், சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத விவகாரங்கள் பிரதி அமைச்சரின் ஆலோசகராக பணியாற்றினார் இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தின் உப தலைவர் மத்திய கலாச்சார நிதியத்தின் (CCF) சபை உறுப்பினர் மற்றும் வேலைப் பணிப்பாளர் கலாச்சார அலுவல்கள் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் என்பன ஏனைய வகிபங்குகளுக்குள் உள்ளடங்குகிறது. சுற்றாடல் பாதுகாப்பு, தொழிலாளர் உறவுகள் மற்றும் பதிப்புரை நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அவரது நிபுணத்துவம் விரிவடைந்துள்ளது.

அவர் இலங்கையின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவித்தல், உலகெங்கிலும் உள்ள வர்த்தக பிரதிநிதிகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகளில் தீவிரமாக பங்கேற்றார், மேலும் சுவிற்சர்லாந்து, அமெரிக்கா, புருனே, பிரான்ஸ், ஜேர்மனி, ஓமான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கான பிரதிநிதிகளின் ஒரு பகுதியாக இருந்தார்.

கொரியா, மலேசியா, ஜோர்தான், லெபனான் மற்றும் துபாய் போன்ற நாடுகளுக்கு தொழிலாளர்களை வழங்குவதற்காக, இலங்கை தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலனுக்காக வாதிடும் அவர், வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கான பணி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை நிவர்த்தி செய்தார். முன்னர் அவர் ஓமான் மற்றும் அவுஸ்திரேலியாவில் பெறுமதிமிக்க சர்வதேச அனுபவத்தைப் பெற்று பணிபுரிந்திருந்தார், அவர் மதிப்பிற்குரிய கழகங்கள் மற்றும் அமைப்புகளில் செயற்படு உறுப்பினராக இருக்கிறார்.

திரு. பி.ஏ. ஜெயகாந்த

பணிப்பாளர்

விமானப் போக்குவரத்துத் துறையில் அனுபவம் வாய்ந்தவர். மேலும் இலங்கையின் முதல் மற்றும் ஒரே ICAO (சர்வதேச சிவில் விமான சேவைகள் நிறுவனம்) தராதர அங்கீகாரம் பெற்ற சர்வதேச கணக்காய்வாளர், திரு. பி.ஏ. ஜெயகாந்த, சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகமாகவும், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் (CAASL) பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் 2022 ஆகஸ்ட் 5 இல் அமைச்சரவையின் அங்கீகாரத்துடனும், அதிமேதகு ஜனாதிபதியின் இணக்கப்பாட்டுடனும் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அவர் இலங்கை விமானப்படையில் (SLAF) ஆணையிடப்பட்ட அதிகாரியாக தனது தொழில் வாழ்க்கையைத் தொடங்கினார், அதன் பின்னர் எயார்லங்கா லிமிட்டட்டில் இணைந்தார். 2004 ஆம் ஆண்டில், அவர் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் சிவில் விமானப் போக்குவரத்து காவல்துறை மேலாளர் அலுவலகத்தில் சேர்ந்து விமானப் போக்குவரத்து ஒழுங்குமுறைப் பிரிவில் இணைக்கப்பட்டார். 2020 ஆம் ஆண்டில் மேலதிக பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் விமான போக்குவரத்து பாதுகாப்பு பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஆகிய முக்கிய பதவிகளை வகித்துள்ளார். ICAO யுனிவர்சல் செக்கியூரிட்டி கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கான ICAO தராதர அங்கீகாரம் பெற்ற சர்வதேச கணக்காய்வாளராகவும் உள்ளார். மேலும் அதன் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றுகிறார், 2010 முதல் வெளிநாடுகளில் அரச கணக்காய்வுகளை நடாத்துகிறார். பப்புவா நியூ கினியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், தாய்லாந்து, மியான்மர், பங்களாதேஷ், வியட்நாம், பூட்டான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் மலேசியாவில் இடம்பெற்ற சர்வதேச கணக்காய்வுகளில் நிபுணத்துவ கணக்காய்வு பரீட்சகராக பங்கேற்றுள்ளார் 2012 இல், சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனம் (ICAO) நடாத்திய சிவில் விமானப் பாதுகாப்பு கணக்காய்வுக்காக சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் (ICAO) தேசிய ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டதன் மூலம் இலங்கைக்கு புகழைக் கொண்டுவந்தார்.

பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து, இவர் விமானங்கள் கடத்தப்பட்டால் பணயக் கைதிகளை மீட்பதற்காக பயிற்சி பெற்ற அதிகாரிகளின் குழுவை சான்றளிப்பதற்கும் முன்னோடியாக இருந்துள்ளார். மேலும் சிவில் விமானப் பாதுகாப்பு தொடர்பான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரிப்பதில் அவர் முன்னோடியாக இருப்பதிலும் முக்கிய பங்கு வகித்திருந்தார்.

மீரிகம டி.எஸ். சேனநாயக்க மத்திய கல்லூரியின் மாணவரான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் (சிறப்பு) இளங்கலைப் பட்டத்தையும் களனிப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். அவரது சிறந்த சேவையைப் பாராட்டி, அவருக்கு தேச பந்து மற்றும் தேச கீர்த்தி ஆகிய பெறுமதிமிக்க தேசிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. கீர்த்தி வீரசிங்க

பணிப்பாளர்

திரு. கீர்த்தி வீரசிங்க, சர்வதேச விவகாரங்கள், முதலீட்டு ஊக்குவிப்பு, பெருந்தோட்டங்கள் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் 20 ஆண்டுகளுக்கும் மேலான விரிவான அனுபவத்தைப் பெற்றவராவார், இலங்கை மற்றும் ஜப்பானில் அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் பல உயர் பதவிகளில் பணியாற்றியுள்ளார். தற்போது அவர் கிசல்க எக்ஸ்போர்ட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் பணிப்பாளராகவும், வொண்டர் ஹோட்டல் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டட்டின் நிறைவேற்று பணிப்பாளராகவும், ரக்சர் ஜெம் (பிறைவேட் லிமிட்டட் மற்றும் லக்சர் ரீ (பிறைவேட்) லிமிட்டட்டின் பணிப்பாளர்/CEO ஆகவும் செயற்படுகின்றார்.

தெங்கு அபிவிருத்திச் சபையின் உடனடி கடந்த தலைவராக இருந்த இவர், தற்போதுள்ள முறைமைகளை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றினார். மேலும் அந்நியச் செலாவணி வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் தொழில்துறைக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தினார். அவரது பதவிக் காலத்தில், தொற்றுநோய் மற்றும் அதன் விளைவாக எதிர்மறையான பொருளாதார நிலைமைகள் இருந்த போதிலும், அவர் இலங்கையின் தெங்கு தொழில்துறை வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட மிக உயர்ந்த ஏற்றுமதி வருமானத்திற்கு பொறுப்பாக இருந்தார். மாண்புமிகு ஒருங்கிணைப்புச் செயலாளரான பிரதமர் டி.எம். ஜயரத்ன, அவர் ஒட்டுமொத்த முகாமைத்துவம் மற்றும் சர்வதேச விவகாரங்களில் ஈடுபட்டு, உலகின் ஏனைய நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்தினார்.

இதற்கு முன்னர் புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராக இருந்துள்ளார் பணிப்பாளர் - கடற்றொழில் அமைச்சின் கீழுள்ள இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் மற்றும் ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை 2007-2009 வேலைப் பணிப்பாளர் - பெருந்தோட்ட அமைச்சின் கீழுள்ள இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் 2006-2008 நிறைவேற்று பணிப்பாளர் - பெருந்தோட்ட அமைச்சின் கீழுள்ள அல்கடுவ பிளான்டேஷன்ஸ் லிமிட்டட் 2008-2009 மற்றும் CEO - பொறியியல் மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள புஜியாமா அரச கூட்டுத்தாபனம், சிலவற்றைக் குறிப்பிடலாம்.

இவர் களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் கல்வி பயின்றார், பின்னர் கலாநிதி ஆதர் சீ கிளார்க் நிலையத்தில் இருந்து தகவல் தொழில்நுட்பம் மற்றும் நவீன தொழில்நுட்பத்திற்கான உயர் தேசிய டிப்ளோமாவைப் பெற்றார். இவர் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சரின் ஆலோசகராகவும் உள்ளார்.

திரு. பி.ஏ.எஸ்.ஏ. குமார

பணிப்பாளர்

திரு. குமார, 1991 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தில் கணக்காய்வுப் பரீட்சகராக பொதுச் சேவையில் சேர்ந்ததுடன் 2007 ஆம் ஆண்டு நிதி அமைச்சின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் சேர்ந்தார். தற்போது, அவர் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாக உள்ளார்.

கொழும்பு கொமர்சியல் பேர்ட்டிலைசர், மாந்தை சோல்ட் லிமிட்டட், கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம், சிலோன் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டட், லங்கா ஹைட்ராலிக் லிமிட்டட் மற்றும் இலங்கை பீங்கான கூட்டுத்தாபனம் உட்பட பல நியதிச்சட்ட நிறுவனங்களின் பணிப்பாளர்.். சபை உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் B.Sc முகாமைத்துவம் (பொது நிர்வாகம்) (சிறப்பு) பட்டம் பெற்றவராவார். மேலும் 2015 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகக் கற்கைகளில் முதுகலைப் பட்டத்தைப் பெற்றார். இவர் இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு 1 உத்தியோகத்தராகவும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் பட்டய பொது கணக்காளர்களின் உறுப்பினராகவும் உள்ளார்.

பணிப்பாளர் சுயவிபரங்கள்

திரு. பி.எச்.பி. தெனியாய

பணிப்பாளர்

2000 ஆம் ஆண்டு முதல் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் குற்றவியல் சட்டத்தரணிகள் சங்கத்தில் ஒரு சட்டத்தரணியாக, ஒரு குற்றவியல் ஆலோசகராக கடமையாற்றி வருகின்ற திரு.தெனியாய, பாதுகாப்பு ஆலோசனையில் நிபுணத்துவம் பெற்றவராவார்.

அவரது பிரசன்னங்கள் நீதவான் நீதிமன்றம், உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்திற்கு மட்டும் அல்ல. மேலும் பல்வேறு அடிப்படை உரிமை வழக்குகளில் மனுதாரர்கள் மற்றும் பிரதிவாதிகள் இருவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தனித்துவமான அடையாள வழக்குகளில் வெற்றிகரமாக தோன்றி அதன் சட்டச் சலுகையைப் பெற்றவராவார்.

இவர் 2016 மார்ச் முதல் இலங்கை நிலைபெறுதகு எரிசக்தி அதிகாரசபையின் சட்ட ஆலோசகராக பணியாற்றியதுடன் இலங்கையில் பசுமை எரிசக்தி துறையை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள சட்டத்தில் திருத்தம் செய்யும் நோக்கில் சட்ட வரைஞரிடம் சமர்ப்பிப்பதற்கு வரைவு சட்டத்தை தயாரிக்கும் கடமைக்கு முக்கியமாக நியமிக்கப்பட்டார்.

திரு. ராஜீவ் சூரியாராச்சி

பணிப்பாளர்

திரு. ராஜீவ் சூரியாராச்சி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவராக கடமையாற்றுகின்றார். அவர் தன்னுடன் 30 ஆண்டுகளுக்கும் மேலான மிகுதியான அனுபவத்தையும், காப்புறுதி மற்றும் நுகர்வோர் இலத்திரனியல் மற்றும் சர்வதேச வணிக நிர்வாகம் ஆகிய தொழில்துறையிலும் விரிவான அறிவைக் கொண்டு வருகிறார். நகர அபிவிருத்தி அதிகாரசபை, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி, ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிட்டட் மற்றும் தேயிலை இறப்பர் மற்றும் தெங்கு தோட்ட சபை ஆகியவற்றில் பணிப்பாளராகவும் உள்ளார்.

இவர் 2019 திசெம்பரில் எயர்போர்ட் அன்ட் ஏவியேஷன் சேர்விஸஸ் (ஸ்ரீலங்கா) (பிறைவேட்) லிமிட்டட்டின் உப தலைவராக நியமிக்கப்பட்டார். AASL இன் கீழ் உள்ள அனைத்து விமான நிலையங்களின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு தொழிற்பாடுகளை மேற்பார்வையிடுவதில் இவர் முக்கிய பங்கு வகித்து உள்ளூர் மற்றும் சர்வதேச தொழில்துறை முக்கிய பங்குதாரர்களுடன் நெருக்கமாக பணியாற்றுகிறார், அதே நேரம் தலைவர் தவிர AASL இன் முழுநேர நிறைவேற்றுப் பணிப்பாளராக மாத்திரமே இவர் செயற்பட்டதால் ஊடக நிறுவனங்களைக் கையாள்வதில் AASL இன் முக்கிய செய்தித் தொடர்பாளராக செயற்படுகிறார். இவர் AASL இல் மனித வள மற்றும் ஊதிய சபையின் உப குழுவின் தலைவராகவும் பணியாற்றினார்.

முன்னர், அவர் 2010-2015 காலப்பகுதியில் புத்தளம் சோல்ட் லிமிட்டட்டின் தலைவராக செயற்பட்டுள்ளார் கோப்பரேட்டிவ் றூறல் பாங் யூனியன் லிமிட்டட் - கம்பஹாவின் தலைவர் 2011-2015 2022 முதல் கோப்லைவ் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட்டின் உப தலைவர் என ஏனையவற்றிற்குள் காணப்பட்டார்.

திரு. அவிந்த பெர்னாண்டோ

பணிப்பாளர்

அவிந்த பெர்னாண்டோ சிலோஸ்கோப் இண்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்ற ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி நிறுவனத்தின் நிறுவுநர் மற்றும் நிறைவேற்றுத் தலைவர் ஆவார். அவர் ஒரு வலைத்தள அபிவிருத்தி கம்பனியான இயூடோர் (பிறைவேட்) லிமிட்டட்டின் நிறுவுநர் மற்றும் தலைவர் ஆவார். இவர் சிண்டிகல் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் பணிப்பாளர் சபையிலும் பணியாற்றுகிறார். அதிசிறந்த தொழில் முனைவோர் திறன்களுடன், அவிந்த பல்வேறு தொழில்களில் புதுமையான நிறுவனங்களை உருவாக்குவதில் முன்னோடியாக இருந்து வருகிறார்.

அவிந்த ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பர்மிங்காம் நகர பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் இளங்கலை பட்டம் பெற்றார். அவர் தற்போது இலண்டன் பல்கலைக்கழகத்தில் சட்டமானி படித்து வருகிறார். அவர் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள அரச விமானப் படை கல்லூரியில் ஆரம்ப அதிகாரி பயிற்சியை பூர்த்தி செய்துள்ளதுடன் 2020 இல் பைலட் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவோர் மீதான அவரது ஆர்வம் அவரை விருந்தோம்பல் துறை உள்ளிட்ட தொழில்களில் முதலீடு செய்ய தூண்டியதுடன் அவற்றில் புதுமைகளைக் கொண்டுவருகிறது.

கூட்டிணைந்த ஆளுகை

ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிட்டட்டின் பணிப்பாளர் சபை, சிறந்த கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகளைப் பின்பற்றுவதில் அதிக முக்கியத்துவத்தை அளிக்கிறதுடன் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட கூட்டிணைந்த ஆளுகைக்கான சிறந்த நடைமுறைகளின் நெறிமுறை மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் சுற்றறிக்கையின் மூலம் நிதி அமைச்சால் சுற்றறிவிக்கப்பட்ட பொது திறைசேரியின் பொதுமுயற்சிகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களிற்கான கூட்டிணைந்த ஆளுகை தொடர்பான வழிகாட்டுதல்கள் மூலம் வழிநடாத்தப்படும் நிறுவனத்தினுள் உயர்தர நியம கூட்டிணைந்த ஆளுகைக்கு உறுதிபூண்டுள்ளது.

பணிப்பாளர் சபை

கம்பனியின் பணிப்பாளர் சபையானது பங்குதாரர்கள் மீதான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை எதிர்கொள்வதற்கு அறிக்கையிடலில் உயர்மட்ட கூட்டிணைந்த ஆளுகை மற்றும் வெளிப்படைத்தன்மையைக் கடைப்பிடிப்பதை உறுதிசெய்வதற்கு கூட்டிணைந்த மூலோபாய இலக்குகள், மதிப்புக்கள் மற்றும் நியமங்களை உருவாக்குதல் மற்றும் செயலாற்றலை கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகிய பொறுப்பைச் சுமக்கும் மிக உயர்ந்த அமைப்பாக தலைமைத்துவத்தை வழங்குகிறது.

சபையின் தொகுப்பு

சபையானது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 7 பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது, மேலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கம்பனியால் மேற்கொள்ளப்படும் வணிகத்திற்கு பொருத்தமான திறன்கள் மற்றும் அனுபவத்தின் சமநிலையுடன் நிறைவேற்றுத் தரமல்லாதவர்களை உருவாக்குகிறது.

திரு. பி ஏ ஐ எஸ் பெரேரா	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது [2023.2.15 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்]
திருமதி. டி எஸ். அமரசேகர	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது
திரு. வி. கனகசபாபதி	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது [2023.4.6 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி முடிவுறுத்தப்பட்டது]
திரு. பி எச் பி தெனியாய	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது
திரு. எல் ஆர் எஸ் வீரசிங்க	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது [2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி முடிவுறுத்தப்பட்டது]
திரு. பி ஏ எஸ் ஏ. குமார	சுயாதீனமற்ற நிறைவேற்றுத் தரமல்லாதது
கலாநிதி எம் கே சி. சேனாநாயக்க	சுயாதீனமற்ற நிறைவேற்றுத் தரமல்லாதது [2022.3.24 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டு 2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி முடிவுறுத்தப்பட்டது]

இந்த அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சபையின் அமைப்பு பின்வருமாறுள்ளது.

திரு. யூ ஜீ தர்மதாச	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது [2023.2.16 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது]
செல்வி டி எஸ். அமரசேகர	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது
திரு. பி எச் பி. தெனியாய	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது
திரு. பி ஏ எஸ் ஏ. குமார	சுயாதீனமற்ற நிறைவேற்றுத் தரமல்லாதது
திரு. கே எஸ் வீரசிங்க	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது [2023.4.6 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது]
திரு. பி ஏ ஜெயகாந்த	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது [2023.4.6 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது]
திரு. கே ஏ ஆர் ஜே பெர்னாண்டோ	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது [2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது]
கலாநிதி. ஐ ஏ கங்கணம்கே	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது [2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது]
திரு. எம் எஸ் வத்தேகம	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது [2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது]
திரு. ஆர் சூரியாராச்சிகே	சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது [2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது]

பணிப்பாளர்களின் நியமனம்

கம்பனியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம் திறைசேரியின் செயலாளர் பெரும்பாண்மையான பங்குகளை வைத்திருக்கும் வரை, திறைசேரியின் செயலாளருக்கு பதவியேற்பதற்கு பெரும்பாலான பணிப்பாளர்களை பரிந்துரைக்கவும் நியமிக்கவும் உரிமை உண்டு.

திறைசேரி செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள், அவ்வாறு நியமிக்கப்பட்ட எந்தவொரு நபரையும் நீக்குவதற்கும், அவ்வாறு நீக்கப்பட்ட எந்தவொரு நபருக்குப் பதிலாக அல்லது முன்னர் நியமிக்கப்பட்ட எந்தவொரு நபரின் இடத்திலும் எந்தவொரு காரணத்திற்காகவும் பணிப்பாளராக நிறுத்தப்படும் நபருக்குப் பதிலாக வேறொருவரை நியமிப்பதற்கான உரிமையை உள்ளடக்கியதாகக் கருதப்படுகிறது. திறைசேரி செயலாளரால் அவ்வாறு பரிந்துரைக்கப்படும் பணிப்பாளர் சுழற்சி முறையில் ஓய்வு பெறுவதற்கு உட்பட்டவர் அல்ல.

70 வயதுக்கு மேற்பட்ட பணிப்பாளர்கள், 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 210 மற்றும் 211 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளிற்கு உட்பட்டு, அவர்கள் 70 வயதை அடைந்த பின்னர் அல்லது கம்பனிகள் சட்டத்தின் 211 ஆம் பிரிவின் பிரகாரம் மீண்டும் நியமிக்கப்பட்டவர்கள் கம்பனிகள் சட்டத்தின் 210 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 70 வயது வரம்பு அத்தகைய பணிப்பாளரிற்கு பொருந்தாது என்று விசேடமாக அறிவிக்கும் கூட்டங்களில் அவர்கள் மீண்டும் நியமிக்கப்படாவிட்டால் அடுத்த ஆண்டு பொதுக் கூட்டம் வரை மாத்திரமே பதவியில் இருப்பார்கள்.

70 வயதுக்கு மேற்பட்ட தலைவர் திரு.யூ.ஜீ.தர்மதாச அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நியமிக்கப்பட்டார், மேலும் வரவிருக்கும் வருடாந்த பொதுக்கூட்டத்தில் அவரது மீள்நியமனத்திற்கான பங்குதாரரின் தீர்மானம் ஒன்று முன்வைக்கப்படும்.

மீளாய்வாண்டில் கம்பனியின் பணிப்பாளர் நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டன.

அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து இந்த அறிக்கைத் திகதி வரை, கம்பனியின் பணிப்பாளர் நிலையில் பின்வரும் மாற்றங்கள் நிகழ்ந்தன.

(1)	திரு. பி ஏ ஐ எஸ் பெரேரா	2023.2.15 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்.
(2)	கலாநிதி எம் கே சி சேனாநாயக்க	2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி முடிவுறுத்தப்பட்டது

கூட்டிணைந்த ஆளுகை

(3)	திரு. எல் ஆர் எஸ் வீரசிங்க	2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி முடிவுறுத்தப்பட்டது
(4)	திரு. வி கனகசபாபதி	2023.4.6 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி முடிவுறுத்தப்பட்டது
(5)	திரு. யூ ஜி தர்மதாச	2023.2.16 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது
(6)	திரு. கே எஸ் வீரசிங்க	2023.4.6 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது
(7)	திரு. பி ஏ ஜெயகாந்த	2023.4.6 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது
(8)	திரு. கே ஏ ஆர் ஜே பெர்னாண்டோ	2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது
(9)	கலாநிதி ஐ ஏ கங்கணம்கே	2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது
(10)	திரு. எம் எஸ் வத்தேகம	2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது
(11)	திரு. ஆர் சூரியாராச்சிகே	2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டது

சபைக் கூட்டங்கள்

கம்பனியின் முடிவுகள் சபைக் கூட்டங்களில் பாதீடுகளுக்கு எதிராகத் தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன, இதில் சபையின் கவனம் தேவைப்படும் ஏனைய விடயங்களுடன் ஒரு நிலையான நிகழ்ச்சி நிரல் கலந்துரையாடப்படுகிறது. சபை ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 6 முறை கூடுகிறதுடன் தேவையான இடங்களில் சபையின் விசேட கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில், சபையின் ஒன்பது (9) கூட்டங்கள் நடைபெற்றன. கூட்டங்களில் கலந்து கொண்டவர்கள் பின்வருமாறு.

பணிப்பாளரின் பெயர்கள்	பணிப்பாளர் நியமனத் திகதி	2022 இல் கலந்துகொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. பி ஏ ஐ எஸ் பெரேரா	24.01.2020	9/9
திருமதி டி எஸ் அமரசேகர	07.04.2015	8/9
திரு. ஐ பி தண்டநாராயணா 2022.7.12 இல் பதவி விலகினார்	14.01.2020	5/5
திரு. வி. கனகசபாபதி	24.01.2020	7/9
திரு. பி எச் பி தெனியாய	24.01.2020	8/9
திரு. எல் ஆர் எஸ் வீரசிங்க	28.02.2020	9/9
செல்வி எம் ரீ ஐ வீ அமரசேகர [2022.03.24 இல் பதவி முடிவுறுத்தப்பட்டது]	03.07.2020	3/3
திரு. பி ஏ எஸ் ஏ குமார	24.08.2020	9/9
கலாநிதி எம் கே சீ சேனநாயகி	14.03.2022	4/6

பணிப்பாளர்களுக்கு மாதாந்த கணக்குகள் மற்றும் நியதிச்சட்ட இணங்குதல் கூற்றுக்கள் வழங்கப்படுகின்றன, மேலும் அனைத்து முக்கியமான விடயங்களும் சபைக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. மேலும், சபையின் குறிப்பிட்ட அங்கீகாரம் தேவைப்படும் பிரச்சனைகள் குறித்து சபைப் பத்திரங்கள் முன்கூட்டியே சமர்ப்பிக்கப்படுகின்றன. அனைத்து கூட்டக் குறிப்புக்களும் கம்பனி செயலாளர்களால் முறையாகப் பதிவு செய்யப்பட்டு பேணப்படுகின்றன.

தலைவர்

2023 பெப்ரவரி 15 வரை, பணிப்பாளர் சபையின் தலைவராக திரு. பி ஏ ஐ சிறினிமால் பெரேரா இருந்தார். நிதி முகாமைத்துவம், கணக்கீடு, உள்ளக கணக்காய்வு மற்றும் பொது முகாமைத்துவம் ஆகிய துறைகளில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தை கொண்டுள்ளதுடன் பல தனியார் மற்றும் பொது கம்பனிகளின் பணிப்பாளராக உள்ளார். அவர் கூட்டங்களில் சபையை வழிநடாத்தினார். மேலும் அனைத்து பணிப்பாளர்களும் அவர்களின் திறன்களுக்கு ஏற்ப கம்பனியின் செயலாற்றலுக்கு பங்களிப்பதை உறுதி செய்தார்.

2023 பெப்ரவரி 16 முதல் அமுலுக்கு வரும் வகையில் திரு உபுல் கங்கநாத் தர்மதாச பணிப்பாளர் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

திரு. உபுல் தர்மதாச, ஐக்கிய இராச்சியம், ரீஸ் வல்லே, மிடில்பரோவில் உள்ள ரீஸ்சைட் பல்கலைக்கழகத்தில் MBA பட்டம் பெற்றிருந்ததுடன் ஐக்கிய அமெரிக்காவின் பசடேனா கல்லூரியில் 1986 இல் உணவு மற்றும் போசாக்கில் கலைப் பட்டம் பெற்றவராவார். இவர் 2021 சனவரி முதல் 2023 சனவரி வரை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவராக இருந்தார்.

முகாமைத்துவம்

கம்பனியின் அன்றாடச் செயற்பாடுகள் பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர் தலைமையிலான பெருநிறுவன மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்திடம் ஒப்படைக்கப்படுகின்றன. அபாயங்கள் மற்றும் வாய்ப்புக்கள் இனங்காணப்படுவதையும், வரையறுக்கப்பட்ட காலக்கெடு மற்றும் வரவு செலவுத் திட்டங்களுக்குள் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதையும் அவர்கள் உறுதி செய்கின்றனர்.

உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம்

பங்குதாரர் முதலீடுகள் மற்றும் கம்பனியின் சொத்துக்கள் என்பவற்றை பாதுகாப்பதற்கு போதுமான உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ முறைமைகளை சபை அறிமுகப்படுத்தியிருந்தது. உள்ளக கட்டுப்பாடுகள் உள்ளார்ந்த வரம்புகளைக் கொண்டிருப்பதையும், மோசடி மற்றும் தவறுகளுக்கு எதிராக முழுமையான உத்தரவாதத்தை வழங்குவதில்லை என்பதையும் சபை முழுமையாக அறிந்திருக்கிறது.

சபை பணிப்பாளர்கள் ஒழுங்கான அடிப்படையில் கம்பனியின் மாதாந்த கணக்குகள் மற்றும் செயலாற்றலை அங்கீகரிக்கப்பட்ட பாதீடுகளிற்கு எதிராக மதிப்பாய்வு செய்கின்றனர்.

கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 22 மற்றும் 25 ஆம் பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டின் போது கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறுள்ளனர்:-

திரு. வி கனகசபாபதி	தலைவர் (சுயாதீனமான நிறைவேற்று தரமல்லாதது) [2023 ஏப்ரல் 6 வரை]
திரு. பி ஏ எஸ் ஏ குமார	உறுப்பினர் (சுயாதீனமற்ற நிறைவேற்று தரமல்லாதது)
திரு. பி.எச்.பி தெனியாய	உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்று தரமல்லாதது)

ஹோட்டல் செயற்பாடுகள் மற்றும் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பான அறிக்கைகளை கணக்காய்வுக் குழு மதிப்பாய்வு செய்து பகுப்பாய்வு செய்கிறது. அத்தகைய அறிக்கைகள் மற்றும் ஹோட்டல்.'. கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளிற்கான மேம்பாடுகளைக் கண்டறிதல்

ஆகியவற்றின் அடிப்படையில் தேவையான.். பொருத்தமான நடவடிக்கைகள் குறித்து கணக்காய்வுக் குழு சபைக்கு பரிந்துரை செய்கிறது.

கம்பனி பட்டியலிடப்பட்ட கம்பனியாக இருந்த போது இடைக்கால நிதிக்கூற்றுக்களை மதிப்பாய்வு செய்வதை உள்ளடக்கிய வருடாந்த நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு வழங்குவதற்கு முன்பு அதனை கணக்காய்வுக் குழுவும் மதிப்பாய்வு செய்கிறது.

2023 யூன் 28 இல் உள்ளவாறு கணக்காய்வுக் குழு மறுசீரமைக்கப்பட்டதுடன் திரு மாதவ வத்தேகம ஒரு உறுப்பினராகவும் திரு பி ஏ எஸ் ஏ குமார குழுவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டனர்.

2023 ஏப்ரலில், கம்பனியின் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் திரு வி கனகசபாபதி கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்.

சம்பளக் குழு

மீளாய்வாண்டில் சம்பளக் குழுவின் தற்போதைய அமைப்பு பின்வருமாறுள்ளது:

திரு. பி ஏ ஐ எஸ் பெரேரா	தலைவர் [2023.2.15 வரை]
திரு வி கனகசபாபதி	உறுப்பினர் [2023.4.6 வரை]
திரு ஐ பி தண்டநாராயணா	உறுப்பினர் [2022.7.12 வரை]
திரு பி எச் பி தெனியாயா	உறுப்பினர்

ஊதியக் குழு தற்போது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது:

திரு. யூ ஜி. தர்மதாஸ	தலைவர் (சுயாதீனமான நிறைவேற்று தரமல்லாதது) [2023.4.20 முதல் அமுலுக்கு வரும் வகையில்]
திரு. ஆர் சூரியராச்சிகே	உறுப்பினர் (சுயாதீனமான நிறைவேற்று தரமல்லாதது) [2023.4.20 முதல் அமுலுக்கு வரும் வகையில்]
திரு பி எச் பி தெனியாயா	உறுப்பினர்

சம்பளக் குழு, சம்பளம் தொடர்பான விடயங்களில் சபைக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளுகிறது.

கம்பனியின் செயலாளர்கள்

சபை மற்றும் அதன் குழுக்களால் சிறந்த நிர்வாக நடைமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்காக, கம்பனிச் சட்டம் தொடர்பான விடயங்களில், கம்பனியின் செயலாளர்கள் சபைக்கு ஆலோசனை வழங்குகின்றனர்.

தற்போது, கம்பனிச் சட்டத்தின் கீழ் தகுதியான செயலாளர்களாக இருக்கின்ற பி டபிள்யூ கோப்பரேட் செக்ரட்டரியல் (பிறைவேட்) லிமிட்டட்டானது கம்பனியின் செயலாளராக உள்ளது.

சட்டத் தேவைப்பாடுகளுடன் இணங்குதல்

அனைத்து பணிப்பாளர்களும் கம்பனியின் நிதி மற்றும் நிர்வாகத் தகவல்களை அணுகியுள்ளனர். கம்பனி சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குவதை உறுதி செய்வதற்கும், கம்பனியின் விவகாரங்களை முகாமை செய்வதில் உரிய கவனத்துடன் செயற்படுவதற்கும் பணிப்பாளர்கள் ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொள்கின்றனர். மேலும், சபையின் கொள்கைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக பாசீலனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் உள்ளன.

நிதி வெளிப்படுத்தல்கள் மற்றும் வெளிப்படைத்தன்மை

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

அரசியலமைப்பின் 154வது உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட்டும் அரசியலமைப்பின் 19வது மற்றும் 20வது திருத்தங்களின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி தொடர்ந்து கம்பனியின் கணக்காய்வாளராக இருப்பார்.

கணக்காய்வாளர்கள் சுயாதீனமாகவும் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தை தெரிவிப்பதற்கு கம்பனியின் முகாமைத்துவம் அல்லது சபையின் தலையீடு இல்லாமலும் செயற்பட அனுமதிக்கப்படுகிறார்கள். கணக்காய்வாளர்களுக்கு பரீட்சிப்பிற்கு தேவையான அனைத்து தகவல்களும் வழங்கப்படுகின்றன.

நெறிமுறை நியமங்கள்

கம்பனி அதன் அனைத்து ஊழியர்களும் அவர்களது கடமைகளின் செயலாற்றலிலும் கம்பனியின் சார்பான கொடுக்கல் வாங்கல்களிலும் ஒருமைப்பாட்டின் மிக உயர்ந்த தரத்தை பேணுவதை தேவைப்படுத்துகிறது.

கம்பனி அதன் பணிக்கூற்று, தூரநோக்கு, இலக்குகள் மற்றும் மதிப்புக்களுக்கு ஏற்ப கம்பனியை உயர் மட்ட சாதனைகளுக்கு இட்டுச் செல்லும், அதிகாரம் பெற்ற மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்களின் குழுவை உருவாக்குவதற்கு ஊழியர்களின் பயிற்சி மற்றும் தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது.

சட்டரீதியான கொடுப்பனவுகள்

அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும், செலுத்தப்பட வேண்டியவை, அல்லது உரிய இடத்தில் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS - 19, ஊழியர் நலன்களின் பிரகாரம் ஓய்வூதிய பணிக்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன.

கணக்களிப்பொறுப்பு மற்றும் வெளிப்படுத்தல்கள்


2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில், பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் கம்பனியின் விவகாரங்களில் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை முன்வைக்கிறார்கள் என்று தங்களைத் திருப்திப்படுத்திக்கொள்வதற்கு மாதாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்களை விரிவாக மதிப்பாய்வு செய்கிறார்கள். மேலும் கூட்டிணைந்த ஆளுகைக்கான சிறந்த நடைமுறை விதிக்கோவை மற்றும் அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்களின் பிரகாரம் இந்த நடைமுறைகள் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

சுதந்திரமான தொழில்முறை ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளல்

சபை அதனது கடமைகளை நிறைவேற்றுவதில் கம்பனியின் செலவினத்தில் தேவைப்படும் போது வெளித் தரப்பினரிடமிருந்து சுயாதீனமான தொழில்முறை ஆலோசனையை நாடுகிறது.

சபைக் கட்டளையின் படி

ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிட்டட்



பி டபிள்யூ கோப்பரேட் செக்ரட்டரியல் (பிறைவேட்) லிமிட்டட்
பணிப்பாளர் ∴ செயலாளர்கள்

2023 யூன் 28

இடர் முகாமைத்துவம்

பல சவால்களுக்கு மத்தியில் பன்முகப்படுத்தப்பட்ட சந்தைகளை ஈர்க்கும் மற்றும் தக்கவைத்துக்கொள்ளும் கோரிக்கையுடன் எதிரொலிக்கும் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த தொழிற்துறையில் முன்னணியில் இருப்பதால், நீண்ட கால பங்குதாரர் மதிப்பை வழங்குவதில் அதன் நோக்கத்தில் இடர் முகாமைத்துவத்தை ஒரு ஒருங்கிணைந்த செயன்முறையாக கம்பனி கருதுகிறது. அதன் தற்போதைய வணிகச் சூழலில், விதிவிலக்குக்கு பதிலாக மாற்றம் என்பது வழக்கமாகிவிட்ட நிலையில், வணிகச் செயற்பாடு மற்றும் இணக்கத்துடன் மூலோபாயத் திட்டமிடலை சமநிலைப்படுத்துவதில் ஹோட்டல் வகிக்கும் முக்கிய வகிபங்கை அது தொடர்ந்து இனங்கண்டுள்ளது. இது தகவலறிந்த தீர்மானம் எடுத்தலை எளிதாக்குகிறதுடன் முக்கிய சொத்துக்களை சரியான முறையில் பாதுகாக்க அல்லது மேம்படுத்த ஹோட்டலை செயற்படுத்துதல் போன்ற வாய்ப்புக்கள் மற்றும் அவற்றின் உள்ளார்ந்த அபாயங்கள் பற்றிய நனவான மதிப்பீட்டிற்கு உதவுகிறது,

எமது இடர் முகாமைத்துவ இயங்குதளமானது கம்பனியினுள் உள்ள இடர் வெளிப்பாட்டின் வகைகளைக் கண்டறிவதிலும், அந்த சாத்தியமான அபாயங்களை அளவிடுவதிலும், அதைத் தணித்து கட்டுப்படுத்துவதற்கான உத்திகளை உருவாக்குவதிலும் உதவுகிறது. இடர் முகாமைத்துவம் என்பது எமது கூட்டிணைந்த ஆளுகை கட்டமைப்பு மற்றும் மூலோபாய அபிவிருத்தி செயன்முறையின் இன்றியமையாத கூறாகும், மேலும் ஹோட்டல் வெற்றிகரமாகவும், மூலோபாய ரீதியாகவும் அனைத்து செயற்பாட்டு பகுதிகளிலும் காலரீதியான மதிப்பாய்வுடன் போதுமான தன்மை மற்றும் பின்பற்றுதலை உறுதிசெய்வதற்கு பொருத்தமான முறைமைகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை கட்டமைத்துள்ளது.

எமது இடர் முகாமைத்துவ கட்டமைப்பானது இயங்கும் சூழலில் மாறிவரும் இயக்கவியலை தொடர்ந்து பிரதிபலிக்கிறதுடன் எமது கொள்கை கட்டமைப்புக்கள் மற்றும் பொருந்தக்கூடிய சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப பிணைக்கப்பட்டுள்ளது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட இடர் முகாமைத்துவ கட்டமைப்பிற்கான இறுதிப் பொறுப்பை முகாமைத்துவம் மேற்பார்வையிட்டு தக்க வைத்துக் கொள்கிறது. சபை அங்கீகரித்த இடர் முகாமைத்துவக் கொள்கையை ஒட்டுமொத்தமாக அமுல்ப்படுத்துவதற்கு இடர் முகாமைத்துவக் குழு பொறுப்பாகும்.

இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு

இடர் முகாமைத்துவக் குழுவானது ஹோட்டலின் பொது முகாமையாளரால் வழிநடாத்தப்படுகிறது, அவரிற்கு நன்கு வடிவமைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ கட்டமைப்பிற்குள் அதன் சட்டரீதியான, நம்பிக்கைக்குரிய மற்றும் ஒழுங்குமுறை பொறுப்புக்களை நிறைவேற்றுவதில், முதன்மையான ஹில்டன் உலகளாவிய பிராந்திய அலுவலகத்துடன் கலந்தாலோசித்து, இடர் உத்திகளைச் செயற்படுத்துவதற்கான பொறுப்பு வழங்கப்படுகிறதுடன் கம்பனி சபைக்கு அறிக்கையிடப்படுகிறது. ஹோட்டலின் செயற்பாட்டுத் தலைவர்கள் பொது முகாமையாளருடன் இணைந்து இடர் முகாமைத்துவக் குழுவை உருவாக்குகின்றனர். நுண்ணறிவு சேகரிப்பு, தர கணக்காய்வுகள், பாதுகாப்பு கணக்காய்வுகள், உள்ளக கணக்காய்வுகள் மற்றும் வாடிக்கையாளர் கருத்து மற்றும் சம்பவங்கள் போன்ற அனைத்து தொடர்புடைய உள்ளக மற்றும் வெளிப்புற அபாயங்கள் அடையாளம் காணப்படுவதை ஒரு வழிமுறை செயன்முறை உறுதி செய்கிறது. இந்த அடையாளம் காணப்பட்ட அபாயங்கள் பின்னர் வணிக பாதிப்பு, நிகழ்வின் சாத்தியம் மற்றும் வேகம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. அபாயங்கள் தாக்கம் மற்றும் நிகழ்தகவு ஆகியவற்றின் அடிப்படையில் வரைபடமாக்கப்படுகின்றன, இது முக்கிய இடர் வெளிப்பாடுகளின் முன்னுரிமையை செயற்படுத்துகிறது.

இந்த இடர் தரவரிசைகளின் முடிவு, அபாயக் கட்டத்தில் "அதிகம் முதல் முக்கியமற்றது" என்ற அளவில் மதிப்பிடும் இடர் கட்டத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டுகிறது, இது ஹோட்டல் அபாயங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கும், தடுப்பு, துப்பறிதல் மற்றும் சீர்செய்தல் நடவடிக்கை திட்டமிடல்களின் வகைப்பாட்டின் கீழ் ஆபத்துக் குறைப்பு உத்திகளைத் திட்டமிடுவதற்கும் உதவுகிறது.

ஹோட்டலின் இடர் முகாமைத்துவக் குழு அடையாளம் காணப்பட்ட இடர்களை மாதாந்த அடிப்படையில் மதிப்பாய்வு செய்கிறது ஒதுக்கப்பட்ட இடர் உரிமையாளர்கள் எந்தவொரு தணிப்பு நடவடிக்கையையும் அமுல்ப்படுத்துவதற்கு பொறுப்பாவார்கள். மேலும் பொது முகாமையாளர் மூலம் சபைக்கு அறிக்கையிடுகிற்கிறார்கள். ஒருங்கிணைந்த நிதி மற்றும் செயற்பாட்டு இணக்க அறிக்கை முகாமைத்துவத்தால் பெறப்படுகிறது. இடர் முகாமைத்துவக் குழு, இடர் முகாமைத்துவக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலில் இடர் மதிப்பாய்வையும் சேர்த்துள்ளது.

இடர் வகை மற்றும் விபரம்	இடரை குறைப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டங்கள்
தொழில்நுட்ப மற்றும் தகவல் இடர் இலத்திரனியல் முறைமைகளின் தோல்வி மற்றும் தகவல் முறைமைகளின் போதாமை இடர்	முழுமையான ஒருங்கிணைவு, சொத்து முகாமைத்துவம், பொருள் முகாமைத்துவம், விற்பனைப் புள்ளி மற்றும் நிதித் தகவல் முறைமை ஆகியவற்றை செயற்படுத்துதல், தகவல் மற்றும் செயற்பாட்டு வினைத்திறன்களின் தடையற்ற ஓட்டத்தை உறுதி செயதல். முறைமையில் செயலிழப்பு ஏற்பட்டால் அனர்த்த மீட்புத் திட்டத்தின் இருக்கும்தன்மை மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றம். ஹோட்டலின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு, ஹோட்டலின் கணனி நிறுவல்களைப் பாதுகாப்பதற்கும், வேலையில்லா நேரத்தைக் குறைப்பதற்கும், செயற்பாட்டின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கும் கட்டுப்பாடுகளை அமுல்ப்படுத்தியுள்ளது. தகவல் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு வலையமைப்பு பாதுகாப்பு செயன்முறையில் தொடர்ச்சியான மீளாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இடர் வகை மற்றும் விபரம்	இடரை குறைப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டங்கள்
உள்ளக செயன்முறை மற்றும் நடைமுறைகள் நிதி நட்டம் மற்றும் வணிகத்திற்கு இடையூறு ஏற்படும் ஆபத்து மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளில் முறிவு	தெளிவாக வரையறுக்கப்பட்ட முறைமைகள் மற்றும் நடைமுறைகள் அவற்றின் தொடர்ச்சியான செயற்திறனுக்காக அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படும் உள்ளக கட்டுப்பாடுகளுடன் இணங்குவதை உறுதிசெய்வதற்காக உள்ளன. சபையால் நியமிக்கப்பட்ட கணக்காய்வுக் குழுவிற்கு நேரடியாகத் அறிக்கையிடுகின்ற கம்பனியால் காலரீதியாக உள்ளக கணக்காய்வு செயன்முறை மேற்கொள்ளப்படுகிறது. இந்த முறைமைகளின் போதுமான தன்மை மற்றும் செயற்திறன் மற்றும் இணக்கத்தின் அளவு தொடர்பான காலரீதியான அறிக்கைகள் மதிப்பாய்வு மற்றும் திருத்த நடவடிக்கைகளுக்காக கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன.
பாதுகாப்பு ஆபத்து	ஹோட்டல் தொழில்துறையின் சர்வதேச தரத்திற்கு ஏற்ப பயனுள்ள கண்காணிப்பு அவதானிப்பு முறைமைகள் நிறுவப்பட்டுள்ளன. விருந்தினர் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் அவதானிப்பு முறைமைகளை அதிகரிப்பதற்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற திறமையான பாதுகாப்பு பதவியணியினர் நியமிக்கப்பட்டு பாதுகாப்பு திறம்பட பேணப்படுவதை உறுதி செய்வதற்காக தொடர்ச்சியான பயிற்சி அளிக்கப்படுகிறது.

இடர் வகை மற்றும் விபரம்	இடரை குறைப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டங்கள்
இயற்கை அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்கள் சொத்து மற்றும் உபகரணங்களின் இழப்பு குறிப்பிடத்தக்க இழப்புகளுக்கு வழிவகுக்கும்	காப்புறுதி மேவுகைகளின் போதுமான அளவு தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்பட்டு தேவைப்படும்போது புதுப்பிக்கப்படுகிறது. நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் வணிக மீட்புத் திட்டங்கள் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் விரைவான மீட்பதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவை அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன. தீ அபாயத்தைக் குறைப்பதற்கு ஹோட்டலின் மேல்தள வீடு மட்டத்தில் ஒரு புதிய தெளிப்பான் முறைமை வைக்கப்பட்டுள்ளது.
கடன் இடர் கடன்பட்டோர் தீர்ப்பனவு செய்ய தவறுவதன் காரணமாக வெளிப்படுதல் மற்றும் நட்டங்கள	தவணை தவறும் தாக்கத்தைத் தணிப்பதற்கு கடன் கொள்கை மற்றும் கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன. புதிய கடன்பட்டோரிற்கான கடன் வரம்புகள் மற்றும் அங்கீகார செயன்முறைகள் வழக்கமான அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. மாதாந்த கண்காணிப்பு மற்றும் கடன்பட்டோர் வயது தொடர்பான அறிக்கைகளை உடனடி நடவடிக்கைகளுக்காக முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடுதல்.
திரவத்தன்மை இடர் உரிய திகதிகளில் நிதிப் பொறுப்புக்களை நிறைவேற்ற இயலாமை.	காசு முகாமைத்துவம் மற்றும் வழங்குநர்களிடமிருந்தான கடன் வசதிகளை உன்னிப்பாகக் கண்காணிக்கும் முறைமைகள் உள்ளன. தொழிற்பாட்டு காசிற்கான வங்கி வசதிகள், கம்பனிக்கு நிதியளிக்கும் திறனை உறுதி செய்வதற்காக, நெருக்கமான மதிப்பாய்வு மற்றும் அங்கீகார செயன்முறை மூலம் பெறப்படுகின்றன. மூலதன முதலீடுகள் முகாமைத்துவத்தால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, நிலையான தன்மைக்காக உண்மையான காசு எதிர்வுகூறல்களுடன் நிதியளிப்பதற்காக போதுமான காசுப்பாய்ச்சல்களின் கிடைப்பனவின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

ஹோட்டல்களை முகாமை செய்வதற்கான அமெரிக்காவின் ஹில்டன் உலகளாவியது வகுத்துள்ள வழிகாட்டுதல்களின் பிரகாரம் ஆண்டு முழுவதும் செயற்பாடுகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் குறிப்பிடத்தக்க இடர்களை அடையாளம் கண்டு, மதிப்பீடு செய்து, முகாமை செய்வதற்கு ஹோட்டல் அமுல்ப்படுத்தும் செயன்முறைகளை கம்பனி தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இடர் முகாமைத்துவத்தை கவனிக்காமல் பிராந்திய அலுவலகத்தால் அவ்வப்போது மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு திருத்த நடவடிக்கைகளுக்காக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2022 திசெம்பர் 31 இல் முடிவடையும் நிதியாண்டிற்காக, ஒவ்வொன்றின் நிலை மற்றும் தணிப்பு உத்திகளுடன் சேர்த்து இடர் பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கிய உருப்படிகள் கீழே உள்ளன.

இடர் முகாமைத்துவம்

இடர் வகை மற்றும் விபரம்	இடரை குறைப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டங்கள்
செயற்பாட்டு இடர்கள்	
போட்டி இடர் சந்தைப் பங்கைக் குறைத்தல், மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் காரணமாக குறைந்த குடியிருப்பு மற்றும் அறை விகிதங்களின் விளைவாக போட்டித்தன்மையில் தோல்வி	சேவையை வழங்குவதில் சிறந்த தரம் மற்றும் பணத்திற்கான மதிப்பை உறுதி செய்வதற்காக சேவை தரங்களை கண்டிப்பாக பின்பற்றுதல் வசதிகள் மற்றும் சேவைகளை தரமுயர்த்துதல் மற்றும் மேம்படுத்துதல். வியாபாரக்குறி நியமங்கள் மற்றும் நிலையான செயற்பாட்டு நடைமுறைகளை (SOP) மதிப்பாய்வு செய்து கண்காணித்தலை பின்பற்றுதல் போட்டியாளர் உத்திகள் மற்றும் சந்தைக்கு புதிதாக வருபவர்களை எதிர்பார்த்து அதற்கேற்ப உத்திகளை வகுத்தல். தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் நிலையான படைப்பாற்றல் மற்றும் புதுமை. விருந்தினர்களின் கருத்துக்களைத் தொடர்ந்து மதிப்பாய்வு செய்தல் மற்றும் வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சியை உருவாக்குவதற்காக சிக்கல்களுக்கு உடனடியாக பதிலளித்தல்.
வியாபாரக் குறி உருவம் மற்றும் நற்பெயர் இடர் கம்பனியின் வியாபாரக் குறி மற்றும் நற்பெயருக்கு பொருள் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடு	வசதிகள் மற்றும் சேவைகள் இரண்டையும் உள்ளடக்கிய விருந்தினர்களின் கருத்துக்கு வழக்கமான வியாபாரக குறி கணக்காய்வுகள் மற்றும் மர்ம கணக்காய்வுகளை நடாத்துதல். HACCP மற்றும் ஏனைய தரச் சான்றிதழ் நியமங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் சுற்றாடல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சிறந்த நடைமுறைகளுடன் இணங்குதல். உலகளாவிய ஹில்டன் உலகளாவிய நியமங்களின் பிரகாரம் உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தரங்களைக் கண்காணித்து முகாமை செய்வதற்கான உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமையாளர் குடிநீர், நீச்சல் குள நீர், குளிரூட்டும் கோபுர நீர், விருந்தினர் அறை நீர் மற்றும் உணவு செயன்முறைப்படுத்தும் நீர் ஆகியவற்றின் வழக்கமான நுண்ணுயிரியல் மற்றும் இரசாயன பகுப்பாய்வானது பாதுகாப்பு நிலைகள் மற்றும் தேவைப்பாடுகளை கண்காணிப்பதற்கான தராதர அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூடத்தால் மேற்கொள்ளப்படுகிறது. உட்புற காற்றின் தர (IAQ) அளவுருக்களுக்காக ஹோட்டலில் உள்ள காற்றின் தரம் தொடர்ந்து பரிசோதிக்கப்படுகிறது. அனைத்து உணவு பதப்படுத்துதல்.ஃ. சேமிப்பு உபகரணங்களும் உகந்த அளவில் செயற்படுவதை உறுதி செய்வதற்காக தடுப்பு பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்து திட்டமிடப்பட்டு, மிக உயர்ந்த தரத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. தயாரிப்பு மற்றும் சேவை இரண்டின் அடிப்படையில் பெஞ்ச்மார்க் (Benchmark) தொழில் சிறந்த நடைமுறைகள். ஹோட்டல் துறையில் போதிய அனுபவமுள்ள ருத்தமான தகுதியும் பயிற்சியும் பெற்ற ஊழியர்களால் முக்கிய முகாமைத்துவ பதவிநிலைகள் இடம்பெறுவதை உறுதி செய்தல். வியாபாரக்குறி வாக்குறுதிக்கு ஏற்ப புதுமையான சேவை வழங்குதல். CSR முயற்சிகள் மூலம் பொறுப்பான கூட்டிணைந்த குடியுரிமை.
மனித வளங்கள் இடர் முக்கிய ஆளணியினர் மற்றும் திறமையான பதவியணியினர்களை இழக்கும் ஆபத்து பொருத்தமற்ற தொழிலாளர் நடவடிக்கை அபாயகரமான பணிச்சூழல்/ இரசாயனங்களுக்கு வெளிப்படும் ஊழியர்கள் காரணமாக காயங்கள்/ உடல்நலக் கேடுகளின் ஆபத்து	கட்டமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலாற்றல் மதிப்பீட்டு செயன்முறையிலிருந்து எழும் குறுக்கு வெளிக்கொணர்தல் பயிற்சி வாய்ப்புக்கள். நல்ல தொழில்தருநர்-பணியாளர் உறவுகள், பணியாளர் நலன் மற்றும் வெற்றி-வெற்றி விளைவை அடைந்துகொள்வதற்கு தொழிலாளர் சங்கத்துடன் பயனுள்ள மற்றும் திறந்த தொடர்பாடல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தல். கூட்டுக் கூட்டங்கள், உல்லாசப் பயணங்கள், குடும்பச் சந்திப்புக்கள் மற்றும் மத நிகழ்வுகள் மூலம் நிறுவனம் முழுவதும் ஒற்றுமை மற்றும் சுயம் சார்ந்த உணர்வை வளர்த்தல். சந்தையில் அதிக போட்டித்தன்மையுடன் இருப்பதற்கு முக்கிய குழு உறுப்பினர்களின் சம்பள அளவை சீர்செய்தல். வகுக்கப்பட்ட பாதுகாப்பு நியமங்கள் மற்றும் நடைமுறைகளை கண்டிப்பாக கடைபிடித்தல்.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

உலகளாவிய சுற்றுலா கண்ணோட்டம்

உலகளாவிய தொற்றுநோயின் நிழலில் இருந்து வெளிப்படுகின்ற, சர்வதேச சுற்றுலா 2022 இல் அதிக தேவை மற்றும் அதிக எண்ணிக்கையிலான நாடுகளில் பயணக் கட்டுப்பாடுகளை நீக்குதல் அல்லது தளர்த்துதல் ஆகியவற்றின் ஆதரவுடன் எதிர்பார்த்ததை விட வலுவான முடிவுகளைக் கண்டது, 2022 ஆம் ஆண்டில் 900 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் சர்வதேச அளவில் பயணம் செய்தனர், 2019 ஐ விட தற்போது 37% குறைவான போதிலும் 2021 இல் அவை இரு மடங்காகும்,

உலகின் மிகப்பெரிய இலக்குப் பகுதியான ஐரோப்பா, கிட்டத்தட்ட 80% தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளை (2019 ஐ விட -21%) எட்டுவதற்கு 2022 இல் 585 மில்லியன் வருகைகளைப் பதிவுசெய்தது, 2022 ஆம் ஆண்டில் மத்திய கிழக்கு பிராந்தியங்கள் முழுவதும் தொற்றுநோய்க்கு முன்னரான எண்ணிக்கையில் 83% (-17% எதிர் 2019) அதிகரிக்கும் வருகையுடன் வலுவான ஒப்பீட்டளவில் அதிகரிப்பை அனுபவித்தது. ஆபிரிக்கா மற்றும் அமெரிக்கா ஆகிய இரண்டும் அதன் தொற்றுநோய்க்கு முந்தைய பார்வையாளர்களில் ஏறத்தாழ 65% மீண்டு வந்தன, அதே நேரம் ஆசியா மற்றும் பசுபிக் வலுவான தொற்றுநோய் தொடர்பான கட்டுப்பாடுகள் காரணமாக 23% ஐ மாத்திரமே அடைந்தன,

குறிப்பாக பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் தொடர்பில் முக்கியமான அபாயங்கள் முன்னால் உள்ள போதிலும் இடங்கள் மற்றும் சந்தைகள் திறக்கப்படுவதால் சர்வதேச சுற்றுலாவானது குறிப்பாக ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளில் இருந்து வரும் அதிகரித்த தேவையின் ஆதரவுடன், 2023 ஆம் ஆண்டில் அதன் மீட்சியை ஒருங்கிணைக்க உள்ளது,

இலங்கையில் பேரினப் பொருளாதார நிலைமைகள்

2021 ஆம் ஆண்டின் இறுதியில் அவதானிக்கப்பட்ட உள்ளுர் பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகம் சீரழிந்ததுடன் 2022 இன் முதல் பாதியில் பொருளாதாரம் சுருங்கியதானது எரிபொருள் தட்டுப்பாடுகள், மின்வெட்டு, முக்கிய இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் பரவலான தட்டுப்பாடு மற்றும் ஏனைய காரணிகளுக்கிடையில் அதிகரித்து வரும் உற்பத்திக் கிரயம் போன்ற பல துறைகளில் ஏற்பட்ட முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியின் கசிவு விளைவுகளால் உந்தப்பட்டது. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் கூர்மையான வீழ்ச்சி மற்றும் பணவியல் இறுக்கமான நடவடிக்கைகள் மற்றும் தொடர்ந்து இறுக்கமான பணச் சந்தை திரவத்தன்மை நிலைமைகள் ஆகியன சந்தை வட்டி விகிதங்களில் கூர்மையான மேல்நோக்கிய மாற்றங்களுக்கு வழிவகுத்தன.

இந்த ஆண்டில், வெளிநாட்டுக் கடன் சேவை அதிகரிக்கும் வகையில் சவாலாக மாறியது, தொடர்ச்சியான இறையாண்மைக் குறைப்புக்களால் சர்வதேச சந்தைகளுக்கான அணுகல் இல்லாமை மற்றும் மந்தமான அந்நியச் செலாவணி உட்பாய்ச்சல்களுக்கு மத்தியில் பெரிய வெளிநாட்டுக் கடன் சேவைக் கொடுப்பனவுகள் குவிந்தன.

இந்த சவாலான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, 2022 ஏப்ரல் முதல் இடைக்காலத்திற்கு இருதரப்பு மற்றும் வணிகக் கடன்களின் அடிப்படையில் வெளிநாட்டுக் கடன் சேவையை நிறுத்துவதாக அரசாங்கம் அறிவித்தது. அதன் பின்னர் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) நிதி உதவி பெறத் தீர்மானித்தது. அதேநேரம் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட 2021 உடன் ஒப்பிடும் போது சுற்றுலா வருமானம் இந்த ஆண்டில் ஒரு திருப்புமுனையை பதிவு செய்துள்ளது.

தொழில்துறை செயலாற்றல் 2022

2022 ஆம் ஆண்டின் இறுதியிலும் 2023 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் இலங்கையின் பொருளாதார நிலைமைகளில் ஏற்பட்ட ஒரு சிறிய முன்னேற்றம், நாட்டிற்கு சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஆண்டிற்காக பதிவுசெய்யப்பட்ட 719,978 வருகையாளர்களுடன் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு வழி வகுத்தது. இது 2021 இல் வருகை தந்த 194,495 சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடும் போது 270.2% அதிகரிப்பாக இருந்தது. சேருமிடத்தின் மீதான நுகர்வோர் நம்பிக்கையை அதிகரித்தல் மற்றும் இலங்கைக்கான விமானத் தொடர்பை மேம்படுத்துதல் மற்றும் கப்பல் சுற்றுலாவை மீண்டும் தொடங்குதல் ஆகியன வருகையாளர்களின் வளர்ச்சியில் சாதகமான பங்கைக் கொண்டிருந்தன.

2022 சனவரி முதல் திசெம்பர் வரையிலான காலப்பகுதியில், இந்தியா, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகியன இலங்கையின் சிறந்த ஐந்து சர்வதேச சுற்றுலா சந்தைகளாக இருந்தன. மொத்தப் போக்குவரத்தில் 17.1% பங்களிப்பைக் கொண்டு, சுற்றுலாப் பயணிகளின் மிகப்பெரிய பங்களிப்பில் இந்தியா இருந்தது. ரஷ்யா 12.7% உடன் நெருக்கமாக உள்ளது, அதே நேரம் ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகியன முறையே 11.8%, 7.7% மற்றும் 4.9% ஆகும். குறிப்பிடத்தக்க வகையில், கனடா மற்றும் போலந்து ஆகியன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சிறந்த வளமூல சந்தைகளில் தோன்றின.

ஒட்டுமொத்தமாக, உலகளாவிய சுற்றுலாத்துறையில் கொவிட்-19 தாக்கம் மற்றும் சுற்றுலாத்துறையை உருவாக்கும் முக்கிய சந்தைகளில் ஏற்பட்டுள்ள உலகளாவிய மந்தநிலை ஆகியன உலக சுற்றுலாத் துறையிலும், குறிப்பாக இலங்கையிலும் 2022 இல் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலையின் காரணமாக பாதிப்பை ஏற்படுத்தியது.

கம்பனியின் செயலாற்றல்

நாட்டின் முதன்மையான உலகளாவிய விருந்தோம்பல் வர்த்தக நாமமாக, ஹில்டன் கொழும்பு, நாட்டில் முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நிலைமையை எதிர்கொண்டு ஆண்டு முழுவதும் நிலைத்து நிற்கிறது. உள்ளுர் பயண மற்றும் சுற்றுலாத் துறையில் உலகளாவிய தொற்றுநோயின் எதிர்மறையான தாக்கம் 2022 இல் வெளிப்பட்ட பொருளாதார நெருக்கடியால் மேலும் தீவிரமடைந்தது, இது தொழில்துறை மற்றும் ஹோட்டலின் ஒட்டுமொத்த செயற்பாடுகளில் டொமினோ விளைவை ஏற்படுத்தியது.

மேலும், ஹோட்டலின் செயற்பாடு தற்போதைய மறுசீரமைப்பு காரணமாக மொத்தம் 382 ஆக இருந்த அறை சாவிகளிற்கு எதிராக 153 என்ற வரையறுக்கப்பட்ட அறை சாவிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது, புதுப்பிக்கப்பட்ட போதிலும், அறைகள் மூலமான வருமானம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 237 மில்லியனிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 667 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. விருந்தோம்பல் துறையில் குறைந்த தேவையில் பளுவில்லாது அறைகளை புதுப்பிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது, ஆனால் புதுப்பித்தல் பூர்த்தியடைந்ததும் வெளிப்புற நிலைமைகள் மேம்படுவதால், ஹோட்டல் தேவை வளர்ச்சியில் கூர்மையான மீள் எழுச்சியை அனுபவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், இந்த சவால்களுக்கு மத்தியிலும், சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்ததால், 2022 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையான மாதங்களில் ஹோட்டல் வருமானத்தில் முன்னேற்றம் காணப்பட்டது. ஹோட்டல் அதற்கு நேரொத்த முன்னைய காலத்திற்காக 2021 இல் ரூபா 530 மில்லியன் வருமானத்தை அடைந்ததுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் ரூபா 1,049 மில்லியன் வருமானத்தை பதிவுசெய்தது. அதே நேரம் F&B செயற்பாடுகள் முன்னைய ஆண்டில் அடைந்துகொள்ளப்பட்ட ரூபா 925 மில்லியனிலிருந்து 2022 இல் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்து 2022 இல் ரூபா 2.185 மில்லியனை பதிவுசெய்தது. மீளாய்வு காலப்பகுதியில் மோசமான பொருளாதார சூழ்நிலைகள் இருந்த போதிலும் வளர்ச்சி வேகத்தை தக்கவைப்பதற்கு ஹோட்டல் F&B செயற்பாடுகளை பயன்படுத்தியது.

மேலும், கிரயக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் விளைவாக மொத்த வருமானத்துடன் ஒப்பிடும் போது மொத்த செலவு ஆண்டுக்கு ஆண்டு குறைவடைந்தது. எனினும், மின் கட்டண உயர்வின் நேரடி விளைவொன்றாக எரிசக்தி கிரய அதிகரிப்பு காரணமாக ஆண்டுக்கு ஆண்டு மேந்தலைக் கிரயங்கள் அதிகரித்தன. இதற்கு மேலதிகமாக, விருந்தோம்பல் தொழில்துறைக்கான வருமான வரி விகிதங்களும் 2022 இல் 14% இலிருந்து 30% வரை அதிகரித்துள்ளன. இதன் விளைவாக, அந்தக் காலப்பகுதிக்கான வரி வழங்கலில் கடுமையான அதிகரிப்பு ஏற்பட்டது, இது அதிக இலாபத்தை மேலும் பாதித்தது. ஒட்டுமொத்தமாக, நிலவும் வெளிப்புற பொருளாதார மற்றும் தொழில்துறை நிலைமைகளின் நிலையற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு, கம்பனி ஒரு வலுவான செயலாற்றலை வழங்கியது.

எதிர்கால கண்ணோட்டம்

ஹில்டன் கொழும்பு, நாட்டின் வரலாற்றில் ஒரு சவாலான காலப்பகுதியில் அரவணைப்பு மற்றும் சிறப்பான சேவையுடன் சுற்றுலாப் பயணிகளை தொடர்ந்து வரவேற்றது. உள்வரும் சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பு, வரவிருக்கும் நிதியாண்டில் ஹோட்டலுக்கான வாய்ப்புகள் பற்றிய நம்பிக்கையான பார்வையை ஊக்குவிக்கிறது. ஹில்டன் கொழும்பில் தற்போது நடைபெற்று வரும் விருந்தினர் அறைகளின் மறுசீரமைப்பு அறை வருமானத்தை அதிகரிப்பதுடன் பொருளாதாரம் மற்றும் சுற்றுலாத் துறையின் பார்வை மேம்படுவதால் F&B வருமானத்தை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேம்படுத்தப்பட்ட 273 விருந்தினர் அறைகள், நகரத்தில் உள்ள ஏனைய சர்வதேச ஹோட்டல் சங்கிலிகளுக்கு இணையாக சொத்துக்களை வைத்திருக்கிற பிரீமியம் தர தயாரிப்பில் இருந்து பயனடைவதற்கு புதிய விலை உத்தியை ஊக்குவிக்கும். விருது பெற்ற விருந்தினர் விசுவாச நிகழ்ச்சித்திட்டமான ஹில்டன் உறுப்பினர் கௌரவங்களுக்கு விருப்பமான இடமாக ஹோட்டல் தனது நிலையை உயர்த்த முடியும்.

மேலும், ஒட்டுமொத்த மதிப்பு முன்மொழிவின் இந்த மேம்பாடு, அதன் தனித்துவமான வணிகத் தொகுப்புக்களுடன் ஹில்டன் பல தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்தும் ஒரு பிரிவான பிராந்திய MICE போக்குவரத்தை ஈர்ப்பதற்கு கம்பனியை வலுவூட்டுகிறது. தொழில்துறையின் எப்பொழுதும் வளர்ச்சியடைந்து வரும் தன்மையைக் கருத்தில் கொண்டு, சவால்களுக்கு மத்தியில் ஊக்கமளிக்கும் செயற்திறனை வழங்கிய ஒரு தொழில்முறை குழுவினால் ஆதரிக்கப்பட்டு புதிய போக்குகள் மற்றும் சந்தைப் பிரிவுகளை அடையாளம் காண்பதில் ஹில்டன் கொழும்பு பதிலளித்து செயலில் இருக்கும்.

நிலைத்தன்மை அறிக்கை

நிலைத்தன்மை என்பது எதிர்கால சந்ததியினர் தங்கள் சொந்த தேவைகளை பூர்த்தி செய்யும் திறனை சமரசம் செய்யாமல் தற்போதைய தலைமுறையினரின் தேவைகளை பூர்த்தி செய்வதாகும். மக்கள், கிரகம் மற்றும் இலாபம் ஆகிய மூன்று நிலைத்தன்மைத் தூண்களுக்கு இடையில் சமநிலையைப் பேணுவதற்கான மூன்று அடிப்படைக் கொள்கைக்கு கம்பனி உறுதிபூண்டுள்ளது.

சுற்றாடல்

சுற்றாடல் ரீதியாக நிலையான அமைப்பாக, கம்பனி அதன் செயற்பாடுகள் முழுவதிலும் வள நுகர்வு மற்றும் கழிவுகளை குறைப்பதன் மூலம் கிரகத்தில் அதன் செயற்பாடுகளின் தாக்கத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறது. ஒவ்வொரு ஆண்டும், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து உள்ளக மற்றும் வெளியக பங்குதாரர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் அதே வேளையில் சுற்றாடல் நிலைத்தன்மைக்கான பங்களிப்பை மேம்படுத்துவதற்காக பல செயற்பாடுகள் நடாத்தப்படுகின்றன.

உலக பூமி தினம்

உலக பூமி தினம் வளர்ந்து வரும் சுற்றாடல் உணர்வுக்கு குரல் கொடுக்கிறது. இந்த நிகழ்வைக் கொண்டாடும் வகையில், ஆதனங்கள் முழுவதும் சுவரொட்டிகள் மற்றும் நிகழ்படங்களை பகிர்வதன் மூலம் சுற்றாடல் கவலைகளை மைய மேடையில் வைத்து அனைத்து பங்குதாரர்களையும் அவர்களது கார்பன் தடயத்தை குறைப்பதில் பங்களிக்க தூண்டுவதற்கு "பூமியை பாதுகாத்தல்" என்ற தலைப்பில் ஹில்டன் கொழும்பின் குழு உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு அமர்வு நடாத்தப்பட்டது.

நிலையான உணவு வளர்ச்சி

உள்ளூர் உணவு உற்பத்தியை வலுப்படுத்துதல் மற்றும் வீட்டு மற்றும் சமூக மட்டங்களில் உணவுக்கான எளிதான அணுகலை மேம்படுத்துதல் மூலம் ஹில்டன் கொழும்பு, வீட்டுத்தோட்டம் மற்றும் நகர்ப்புற விவசாயத்தை உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய உத்தியாக 2022 இல் ஊக்குவித்தது. இந்த சிறிய நடவடிக்கை ஹில்டன் கொழும்பு குடும்ப உறுப்பினர்களின் முக்கியமான முதலீடாகும்.

"பசுமை அங்குலங்கள்" நகர்ப்புற தோட்ட செயற்திட்டம்

உணவுப் பற்றாக்குறை மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வரும் சூழலில், நகர்ப்புற தோட்ட செயற்திட்டம் இரண்டாவது வருமானத்தை உருவாக்குவதற்காக வீட்டில் காய்கறிகளை வளர்ப்பதற்கு குழு உறுப்பினர்களை ஊக்குவிக்கும் ஒரு முழுமையான அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலம் தொடங்கப்பட்டது. இலங்கையர்களை ஊக்குவிப்பதற்கும், ஒவ்வொரு பிரச்சனைக்கும் எப்போதும் தீர்வு இருப்பதாக அவர்களை நம்பவைப்பதற்கும் சிறிய இடங்கள் மற்றும் நகர்ப்புற சூழல்களுக்காக பானைகளுக்கு சிறந்த மாற்றீடாக பயிரிடல் பைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஹில்டன் குழு உறுப்பினர்கள் மற்றும் சில ஊழியர்களுக்கு விதைப் பக்கற்றுக்கள் விநியோகிக்கப்பட்டன. மிகுதியான காய்கறி அறுவடைகளை அடைந்த போதிலும் அதை அவர்கள் உணவிற்காக ஹோட்டலுக்கு நன்கொடையாக வழங்கினர்.

நகர்ப்புற தோட்டக்கலை முன்முயற்சியில், ஹில்டன் கொழும்பு ஹோட்டலை ஒட்டிய அதன் மரவள்ளிக்கிழங்கு தோட்டத்தில் அடுத்த தொகுதி மரவள்ளிக்கிழங்கை பயிரிட்டு சூவசயஎநடறவைரிசழளந வாரச் செயற்பாட்டைக் கொண்டாடியது. இது நகரத்தின் மிகப் பெரிய வீட்டுத் தோட்டம் ஆகும், இது தோட்ட இடத்துடன் அல்லது இல்லாமலேயே வீட்டுத் தோட்டக்கலைக்கு ஊக்கமளிக்கும் வகையில் தொடங்கப்பட்ட மாதிரியாகும்.

கடற்கரை சுத்தம்

ஹில்டன் கொழும்பின் 35வது ஆண்டு நிறைவு மற்றும் சர்வதேச கரையோர சுத்திகரிப்பு தினத்தை நினைவுகூரும் வகையில், ஹில்டனின் நோக்கத்துடன் பயணித்தல் வீரரான சமேந்திர ஜெயதிலக மற்றும் குழுவினர் 2022 செப்தெம்பர் 17 இல் காக்கை தீவில் கடற்கரையை சுத்தப்படுத்தும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

ஹில்டன் கொழும்பு விருந்தினர் அறைகளில் இருந்து பயன்படுத்திய சோப்புகளை சேகரித்து அவற்றை மீள்சுழற்சி நோக்கங்களுக்காக ஹில்டன் கொழும்பு குடியிருப்புக்களில் ஒப்படைத்தது.

பாதுகாப்பு வளங்கள்

உலக தண்ணீர் தினத்தன்று, குழு உறுப்பினர்கள் தண்ணீரைச் சேமிப்பதற்கான யோசனைகளை உருவாக்கி பங்களித்தனர். ஹில்டன் கொழும்பின் குழு உறுப்பினர்களுக்கு ஹோட்டல் முழுவதும் சுவரொட்டிகள் மற்றும் நிகழ்படங்கள் உதவியுடன் நீர் விரயம் தொடர்பான விழிப்புணர்வு அமர்வு நடைபெற்றது.

சமூகம்

அதன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள செயற்பாடுகளுக்குள் சரியானதைச் செய்வதன் மூலம், நிறுவனம் நிலையான செயல்களையும் நடத்தையையும் மாதிரியாகக் கொள்ள முடிந்தது. இந்தச் செய்தியை பரவலாகப் பரப்பி, தகுதியான காரணங்களை ஆதரிப்பதற்கும், நம்பிக்கை மற்றும் ஒற்றுமை உணர்வைப் பரப்புவதற்கு சிறப்பு சந்தர்ப்பத்தைக் கொண்டாடுவதற்கும் சமூகத்துடன் நெருக்கமாக ஈடுபடுகிறது. ஹில்டனின் குழுவால் 2022 இல் மேற்கொள்ளப்பட்ட சில சமூக முயற்சிகளாவன:

நிகழ்வு	செயல்பாடு
கிறிஸ்துமஸ் 2022	■ கிறிஸ்துமஸ் பருவகாலம் நீண்ட காலமாக நீங்கள் மிகவும் அக்கறை கொண்டவர்களுடன் உங்களைச் சுற்றிக் கொள்ளும் ஒரு பாரம்பரியமாக இருந்து வருகிறது. ஹில்டன் கொழும்பின் மனித வளக் குழு, சென் மேரிஸ் முதியோர் இல்லத்தில் கிறிஸ்துமஸ்ஸிற்காக இருப்பதற்கு தெரிவுசெய்தது, ஏனெனில் வீட்டில் வசிப்பவர்கள் ஹோட்டல் குழு உறுப்பினர்களின் கரோல் சேவையான "அது கிறிஸ்துமஸ்ஸாக இருக்கட்டும்" உடன் இணைந்து, அவர்களுக்காக பிரத்தியேகமாக நடாத்தப்பட்ட பாரம்பரிய கிறிஸ்துமஸ் விருந்தில் ஈடுபட்டனர். ■ ஹில்டன் கொழும்பு மக்கள், குறிப்பாக குழந்தைகளின் சமத்துவம் மற்றும் கண்ணியத்தை ஆதரிக்கும் மற்றும் உறுதி செய்யும் சேவை செய்,ஒரு ஒரு NGO ஆல் நடாத்தப்படும் மரக்கன்று முன்பள்ளியில் இருந்து 30 சிறிய விசேட நண்பர்களுடன் பண்டிகைக் காலத்தை ஆரம்பித்தது. தரம், பங்கேற்பு, படைப்பாற்றல் மற்றும் விஞ்ஞானவியல் செயன்முறை மூலம் மக்கள், குறிப்பாக குழந்தைகள் மற்றும் பெண்களை வலுவூட்டுவதை எளிதாக்குவதே அவர்களின் நோக்கமாகும். மரத்தின் பாரம்பரிய விளக்கேற்றலை நடாத்துவதற்கு குழந்தைகள் அழைக்கப்பட்டு மஜிக் ஷோ மற்றும் கிறிஸ்துமஸ் தின்பண்டங்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது.

நிகழ்வு	செயல்பாடு
சர்வதேச மகளிர் தினம்	■ ஹில்டன் கொழும்புக்கான பயணத்துடன் இணைந்து மகளிர் குழு உறுப்பினர் வளக் குழு ஸ்ரான்லி திலகரத்ன வித்தியாலய மாணவர்களுக்கு காலை உணவுப் பொதிகளை விநியோகித்தது. அந்த பாடசாலை 50 மாணவர்கள் மற்றும் மிகவும் வரையறுக்கப்பட்ட வளங்களை மாத்திரமே கொண்டுள்ளது. ■ கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதுடன் சேர்த்து தெமட்டகொட வேலுவனாராமய ஆலயத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான மதிய உணவுப் பொதிகளையும் குழு உறுப்பினர்கள் விநியோகித்தனர்.
உணவு மற்றும் பான வாரம் 2022	■ F&B பிரிவு நோயாளிகளுக்காக புற்றுநோய் மருத்துவமனைக்கு உலர் உணவுகளை அன்பளிப்பு செய்தது.
துணை பாடசாலைகள்	■ கம்பஹா கோதமி கனிஷ்ட பாடசாலையின் பதவியணியினர் மற்றும் மாணவர்கள் சிறப்பு மதிய உணவு மற்றும் ஹோட்டலின் சுற்றுப்பயணத்துடன் பகல் நேர விஜயத்தின் போது L&D, F&B மற்றும் சமையலறை குழுக்களுடன் சிறிது நேரம் செலவிடுவதற்கு ஹோட்டலுக்கு விஜயம் செய்தனர். உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான பயிற்சி அடிப்படை அட்டவணை ஆச்சாரம் மற்றும் ஹில்டன் தொழில்களும் வழங்கப்பட்டது
வாழ்க்கைக்கான புன்னகை செயற்திட்டம்	■ கொட்டிகாவத்தை சோமாதேவி பெண்கள் பாடசாலை மாணவர்களுக்கு 30 பயிற்சிப் புத்தகப் பொதிகள் மற்றும் எழுதுபொருட்களை மகளிர் குழு உறுப்பினர் வளக் குழு அன்பளிப்பு செய்தது.
ஒவ்வொன்றும் ஒரு உதவி	■ ஹில்டன் கொழும்பு குழு இலங்கை மற்றும் மாலைதீவிற்கான தொடர்பு மாவட்ட மான்றம் 3220 இன் கோரிக்கையின் பேரில் நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு எழுதுபொருள் பொதிக்கு பங்களிப்புகளை வழங்கியது, இது நாட்டின் கிராமப்புற பாடசாலைக்கு வழங்கப்படும்.
குழந்தைகளுக்கான லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை	■ நோக்கத்துடன் பயணம் செய்வதன் மூலம், எங்கள் செயற்பாடுகள், விநியோகச் சங்கிலி மற்றும் சமூகங்கள் முழுவதும் நேர்மறையான சுற்றாடல் மற்றும் சமூக தாக்கத்தை உருவாக்குவதற்கு முயல்கிறோம். அதைக் கருத்தில் கொண்டு, உலகளாவிய சேவை வாரம் கொண்டாடப்பட்டது. ஹில்டன் இலங்கை குழு, இலங்கையின் மிகப்பெரிய இலவச குழந்தைகள் மருத்துவமனையான குழந்தைகளுக்கான லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் போஷாக்குக் குறைபாட்டு சிகிச்சை நிலையத்துடன் இணைந்ததுள்ளது.

தொழில் நிறுவனங்கள் மற்றும் ஹோட்டல் பாசாலைகளை ஆதரிப்பதன் மூலமும், பயிற்சியை வழங்குதல் மற்றும் அறிவைப் பகிர்வதன் மூலமும் இளைஞர்களை விருந்தோம்பல் துறையில் சேர ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு தொழில்துறை சார்ந்த நிகழ்வுகளும் நடாத்தப்படுகின்றன. 2022 இல் சவால்கள் இருந்த போதிலும், பல நிகழ்வுகள் நடாத்தப்பட்டன:

தொழில்@ஹில்டன் (CAREERS@HILTON)

இந்த முன்முயற்சி வருடாந்தம் ஒவ்வொரு மே மாதத்தில் உலகெங்கிலும் உள்ள அனைத்து ஹில்டன் ஹோட்டல்கள் மற்றும் அலுவலகங்களால் உள்ளூர் இளைஞர்கள் மற்றும் ஏனைய வேலை தேடுபவர்களை ஊக்குவிக்கவும், விருந்தோம்பல் தொழிலின் சாத்தியமான வாய்ப்புக்கள் மற்றும் நலன்களைப் பற்றி கற்பிக்கவும் நடாத்தப்படுகிறது. 2014 ஆம் ஆண்டு ஹில்டன் CEO கிறிஸ் நசெற்றாவால் முதன்முதலில் தொடங்கப்பட்ட Careers@Hilton அனைத்து ஹில்டன் சொத்துக்களிலிருந்தும் உலகளாவிய ஆதரவைப் பெற்று ஒரு மில்லியன் இளைஞர்களை இணைத்து, தயார் செய்து, வேலைக்கு அமர்த்தவும் ஹில்டனின் உறுதிப்பாட்டை ஆதரிக்கும் ஒரு விலைமதிப்பற்ற வாய்ப்பாக சேவையாற்றுவதற்கு தொடர்கிறது.

நேர்முகப்பரீட்சைகளுக்கு முன்னறிவிப்பின்றி வருகை தருதல்

தொழில்துறை பயிற்சி என்பது ஹோட்டல் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களில் ஒரு முக்கிய கூறாகும். ஹில்டன் கொழும்பு, 60+ இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு ஆண்டுக்கு இருமுறை அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும், அவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு தளத்தை வழங்குவதற்கும் அவர்களுக்கு ஒரு தொழில்முறை சூழலை வழங்குவதன் மூலம் இந்தப் பயிற்சியை விரிவுபடுத்துவதற்கு உறுதியளித்துள்ளது, சமீபத்தில் முடிவடைந்த தகவல் தொழில்நுட்ப ஆட்சேர்ப்பு இயக்கத்தில் 400 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். ஹில்டன் கொழும்பு இலங்கையில் தொழில் வாய்ப்புகளுக்கான முதல் தெரிவாக விளங்குகிறது!

இளைஞர்களுக்கு வழிகாட்டுதல்

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்துடன் (கண்டி கிளை) இணைக்கப்பட்ட ஐந்து மாணவர்கள் குழு ஹோட்டலுக்கு விஜயம் செய்து வியாபார நாமம் -குறிப்பிட்ட இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் ஹோட்டலில் பயன்படுத்தப்படும் பொறியியல் கருத்துக்கள் மற்றும் கோட்பாடுகள் பற்றி அறிந்து கொண்டனர்.

ஹோட்டல் பாடசாலைகளுக்கு இடையேயான கொக்ரெய்ல் போட்டி 2022

ஹோட்டல் பாடசாலைகளுக்கிடையேயான கலவை நிபுணர்கள் மற்றும் காபி தயாரிப்பாளர் சவால் ஹில்டன் கொழும்பு F&B மாஸ்டர்களுடன் ஹில்டன் கொழும்பில் நடைபெற்றது. இதுபோன்ற நிகழ்வுகளை நடாத்துதல் வியாபார நாமத்தின் மதிப்பையும், ஹோட்டலின் நிலையை வேலை செய்வதற்கான சிறந்த இடமாக உயர்த்தியது.

ஹில்டன் லியா திரியா

ஹில்டன் லியா திரியாவின் முதல் குழுவின் முதல் பட்டமளிப்பு விழா கொழும்பு ஹில்டனில் ஹில்டன் இலங்கைக்கான பிரதேச பொது முகாமையாளரான மனேஷ் பெர்னாண்டோ, ஹில்டன் கொழும்புக்கான பொது முகாமையாளர் மற்றும் இலங்கையிலுள்ள ஏனைய ஹில்டன் சொத்துக்களின் பொது முகாமையாளர்கள் மற்றும் அவர்களின் மனித வளப் பணிப்பாளர்கள்.. முகாமையாளர்கள் மற்றும் ஹில்டன் கொழும்பு தலைமைக் குழு ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது. பட்டமளிப்பு விழா பட்டதாரிகளின் பயணத்தை சித்தரிக்கும் காணொளி காட்சியுடன் தொடங்கியது, அதைத் தொடர்ந்து மனேஷ் பெர்னாண்டோ உரையாற்றினார். நிகழ்ச்சியின் துவக்கத்தில் எட்டு உறுப்பினர் குழுவில் இருந்து நான்கு குழு உறுப்பினர்கள் பட்டம் பெறும் வாய்ப்பைப் பெற்றனர். ஹில்டன் கொழும்பைச் சேர்ந்த சஞ்சுனி சங்கல்பனி, ஷெனாரா பெரேரா மற்றும் தக்ஷிலா பெரேரா ஆகியோருக்கும், டபுள் ட்ரீயைச் சேர்ந்த சயூரி ஜயதிலகா ஆகியோருக்கும் ஹில்டன் வீரவில ராஜவர்ண ரிசார்ட் மூலம் நிறைவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

உலக சுற்றுலா தினம்

Traversa பசுமைப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த உலக சுற்றுலா தின கொண்டாட்டமான ட்ரவெர்சா (NSBM Green

நிலைத்தன்மை அறிக்கை

University) 2022 ஆனது 2022 ஒக்தோபர் 7 ஆம் திகதி ஹில்டன் இலங்கையின் அனுசரணையில் நடைபெற்றது. இலங்கையின் (ஹில்டன்) பகுதி பொது முகாமையாளர் மனேஷ் பெர்னாண்டோ, ட்ரவெர்சா 2022 நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டதுடன், பல்கலைக்கழகத்தின் அடுத்த தலைமுறை சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் இளங்கலை பட்டதாரிகளை ஊக்குவிப்பதற்காக விருந்தோம்பல் துறையில் தனது புகழ்பெற்ற தொழிலில் தனது விலைமதிப்பற்ற அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

ட்ரவெர்சா 2022, NSBM பசுமைப் பல்கலைக்கழகத்தின் பிரதி உபவேந்தர் பேராசிரியர் சமிந்த ரத்நாயக்க, கல்வி அபிவிருத்தி மற்றும் தர உறுதிப்பாட்டு பிரிவின் தலைவர் பேராசிரியர் பாரத தொடன்கொடுவ மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதி திருமதி தில்னி டி சில்வா ஆகியோரால் சிறப்பிக்கப்பட்டது. சஞ்சித உடுவவிதான – மனித வளங்கள் பணிப்பாளர் (ஹில்டன்), திலும் எதிரிவீர – மனித வள முகாமையாளர் (ஹில்டன்), தாமர கூங்கொல்ல - உதவி கற்றல் மற்றும் அபிவிருத்தி முகாமையாளர் (ஹில்டன்), ஜோர்ஜ் பவுல் - SLAITO இளைஞர்கள் இன் தலைவர், மக்சிம் விக்ரமசிங்க - SLAITO இளைஞர்கள் இன் முன்னாள் தலைவர் மற்றும் நாமினி ஜெயரத்ன - டிஜிட்டல் உள்ளடக்க உருவாக்குநர் மற்றும் NSBM பசுமை பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர் உட்பட உள்ளூர் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல புகழ்பெற்ற பிரமுகர்கள் முன்னிலையில் நிகழ்வின் மதிப்பு மேலும் அதிகரித்தது.

தொழில்முறை பயிற்சி

கொழும்பு தாதியர் பாடசாலை மாணவர்களுக்கான 'உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்' பயிற்சி

கொழும்பு மாவட்டத்தின் முன்னணி சுகாதார வைத்திய அதிகாரியான டாக்டர் பாதும் கொடிகார தலைமையில் 'உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்' தொடர்பான நிகழ்ச்சிக்காக கொழும்பு தாதியர் பாடசாலை மாணவர்கள் கொழும்பு ஹில்டனில் விருந்தளித்தனர். உணவு சுகாதாரம் எவ்வாறு பராமரிக்கப்படுகிறது என்பதை மாணவர்களுக்கு காட்டுவதற்கு ஹோட்டலின் சமையலறைகள் வழியாகவும் அழைத்துச் செல்லப்பட்டனர். ஹில்டன் கொழும்பு சுகாதார முகாமையாளர் சஹான் தேஜக இந்த நிகழ்வை சாத்தியப்படுத்தினார்.

ஹோட்டல் முகாமைத்துவ மாணவர்களுக்கான தொழில் நிகழ்ச்சித்திட்டங்கள்

ஹில்டன் கொழும்பில், வளர்ந்து வரும் திறமைத் தேவைகளுக்கு பதிலளித்து வணிகங்களிற்கு உதவுவதற்காக உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்தருநர்களுக்கு இடையிலான பங்குடமைகள் விலைமதிப்பற்றதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். இதைக் கருத்தில் கொண்டு, ஹில்டன் கொழும்பு 2023 நவம்பர் 23 இல் கண்டியில் உள்ள இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கு விஜயம் செய்தார். இத்தகைய நிகழ்வுகள் வலுவான உறவுகளை உருவாக்குவதற்கு உதவுகின்றன.

வில்லியம் அங்கிலிஸ் நிறுவனம் - முதல் தொழில் நாள் காலை உணவு கூட்ட செயலமர்வு

அனைத்து 4 ஹில்டன் ஹோட்டல்களும் ஒரு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்றன, இதில் வில்லியம் அங்கிலிஸ் நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஹில்டன் வியாபார நாமம் மற்றும் விருந்தோம்பல் வர்த்தகத்தில் இளைஞர்களை வளர்ப்பதற்கான பல வாய்ப்புக்களைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர்.

NSBM பசுமைப் பல்கலைக்கழகத்துடன் இலங்கையில் உள்ள ஹில்டன் ஹோட்டல்கள் மற்றும் ரிசார்ட்ஸ் பேனா புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஹில்டன் மற்றும் NSBM இடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கைச்சாத்திடுதல் 2022 ஆகஸ்ட் 24 இல் NSBM பசுமை பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. ஹில்டன் ஹோட்டல் மற்றும் ரிசார்ட்ஸின் கீழ் ஹில்டன் கொழும்பு, ஹில்டன் கொழும்பு குடியிருப்புக்கள், ஹில்டன் யால ரிசார்ட், ஹில்டன் வீரவிலவின் டபிள் ட்ரீ ஆகிய நான்கு ஹோட்டல் சொத்துக்களுடன் NSBM பங்குடமைகளை செய்துகொண்டனர். ஹில்டன் ஹோட்டல்ஸ் ரூ ரிசார்ட்ஸ் முழு சேவை ஹோட்டல்கள் மற்றும் ரிசார்ட்ஸ்ஸின் உலகளாவிய வியாபார நாமம் மற்றும் அமெரிக்க பன்னாட்டு விருந்தோம்பல் கம்பனியான ஹில்டனின் முதன்மை வியாபார நாமமாகும். சாராம்சத்தில், பரஸ்பர நன்மை பயக்கும் இந்த ஒத்துழைப்பின் மூலம் இரு நிறுவனங்களும் எதிர்காலத்தில் பல்வேறு துறைகளில் இளங்கலை தொழில்துறை பயிற்சிக்கான வாய்ப்புக்களை அதிகரிக்கவும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான தகவல்களை சேகரிக்கவும் மற்றும் ஹில்டன் ஊழியர்கள் NSBM இல் முதுகலை நிகழ்ச்சித்திட்டங்களைப் பின்பற்றவும் எதிர்காலத்தில் ஒரு பயனுள்ள முயற்சியை எதிர்பார்க்கின்றன.

விருந்தோம்பல் மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்தின் கொரியா லங்கா பாடசாலையுடனான பங்குடமை

விருந்தோம்பல் மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்தின் கொரியா லங்கா பாடசாலை (KLSHH) மற்றும் ஹில்டன் யால ரிசார்ட்டுக்கும் இடையே 2022 சனவரி 27 இல் பாடசாலை வளாகத்தில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் KLSHH இன் பணிப்பாளர் நாயகம் பிரபோத் குலதுங்க மற்றும் ஹில்டன் யாலா ரிசார்ட்டின் பொது முகாமையாளர் கீதாஞ்சலி சக்ரவர்த்தி ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்த பரஸ்பர நன்மை பயக்கும் பங்குடமையின் பிரகாரம் தாழ்த்தப்பட்ட குடும்பங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், முன்னுரிமை யால பகுதியில், முடுளுர்ர் இல் பதிவு செய்யப்படுவார்கள், அங்கே அவர்கள் தெரிவுசெய்யப்பட்ட செயற்பாட்டு பகுதியில் ஐந்து மாத கற்கைநெறியை இலவசமாகப் படித்து ஆறு மாத தொழில்துறை பயிற்சிக்காக விடுவிக்கப்படுவார்கள். விண்ணப்பதாரர்கள் தங்கள் தொழில்துறை பயிற்சியின் முடிவில் பட்டம் பெறுவார்கள், இது ஹில்டனுடனான நீண்ட கால தொழிலுக்கான கதவுகளைத் திறக்கும்!

வெற்றிப்பதக்க அனுசரணைகள்

SLIIT இன் வில்லியம் அங்கிலிஸ் விருந்தோம்பல் பாடசாலையின் பட்டமளிப்பு விழா சமீபத்தில் நடைபெற்றது, மேலும் ஹில்டன் செயற்பாட்டு சிறப்புக்கான விருதிற்கு மீண்டும் அனுசரணையளித்தது! ஹில்டன் இலங்கையானது இலங்கையில் வேலைவாய்ப்பிற்காக மிகவும் விரும்பப்படும் விருந்தோம்பல் வர்த்தக நாமமாகும், மேலும் வில்லியம் அங்கிலிஸ் இலங்கைக்கான பல்கலைக்கழக நாட்காட்டியின் மிகவும் மதிப்புமிக்க நிகழ்வின் ஒரு பகுதியாக இருப்பது பெருமைக்குரியதாகும்.

தொழிற்பயிற்சிகள்

தொழில்துறையில் இளைஞர்களை ஈர்ப்பதிலும் தக்கவைத்துக் கொள்வதிலும் கவனம் செலுத்தும் நிகழ்ச்சிகளை ஹோட்டல் நடாத்துகிறது. இந்த முன்முயற்சிகளில் முன்னணி விருந்தோம்பல் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட வேலைவாய்ப்பு, தொழில்துறை பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சி வாய்ப்புக்கள் என்பன உள்ளடங்குகின்றன. தற்போது, ஹில்டன் கொழும்பு ஹோட்டலில் வெவ்வேறு துறைகளில் ஐந்து தொழில்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைப் பேணுகிறது தேசிய தொழில்பயிற்சி மற்றும் தொழில்துறை பயிற்சி அதிகாரசபையுடன் (யுஜவுயு) நெருக்கமான ஒத்துழைப்புடன் பணிபுரிதல் திறமையான வேலைகளில் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு அரசாங்க அமைப்பாகும். தற்போது செயலில் உள்ள தொழில்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பின்வருவன உள்ளடங்குகின்றன:

- சமையலறை தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (காலம் : 30 மாதங்கள்)
- பொறியியல் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (காலம்: 24 மாதங்கள்)
- வீட்டுப் பராமரிப்பு தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (காலம் : 12 மாதங்கள்)
- உணவு மற்றும் பான தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (காலம்: 18 மாதங்கள்)
- சமையலறை பொறுப்பாளர் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (காலம் : 12 மாதங்கள்).

எமது மக்கள்

விருந்தோம்பல் வர்த்தகம் என்பது மக்கள் மற்றும் இடங்களுடனான அனுபவ தொடர்புகளைப் பற்றியதாகும், மேலும் எமது மதிப்புமிக்க விருந்தினர்களுக்கு எங்கள் வியாபாரக் குறி வாக்குறுதியை வழங்குவதில் எமது குழு முக்கிய பங்கு வகிக்கிறது. மீளாய்வாண்டில் "வேலைக்கான சிறந்த இடம்" என சான்றளிக்கப்பட்ட நிறுவனம், அதன் ஊழியர்களுக்கு சம வாய்ப்பு மற்றும் நியாயத்தன்மையின் மூலம் அடிக்கோடிட்டுக் காட்டப்படும் முற்போக்கான மற்றும் ஆற்றல்மிக்க பணி கலாச்சாரத்தை வழங்குகிறது. நாட்டிலேயே மிகவும் உத்வேகம் பெற்ற விருந்தோம்பல் குழுவாக, ஹில்டன் குழு அதன் செயற்பாடுகள் முழுவதும் பல்வேறு முயற்சிகள் மூலம் வளர்க்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறது.

ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

விருந்தினர்கள் மற்றும் குழு உறுப்பினர்கள் இருவரின் ஆரோக்கியத்தையும் ஒரே மாதிரியாக உறுதி செய்வதற்காக, சாத்தியமான மிக உயர்ந்த பாதுகாப்பு நியமங்களுக்கு ஹோட்டல் கடுமையான முக்கியத்துவம் கொடுக்கிறது. உலகளாவிய ஹில்டன் உலகளாவிய நியமங்களின் பிரகாரம் ஹோட்டலில் உள்ள முழு உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்களை கண்காணித்து முகாமை செய்வதற்கு ஹில்டன் கொழும்பு உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைக் கொண்டுள்ளது.

அதன் பிரகாரம், அனைத்து உணவு பதப்படுத்துதல்∴ சேமிப்பு உபகரணங்களும் உகந்த அளவில் செயற்படுவதை உறுதி செய்வதற்காக தடுப்பு பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்து திட்டமிடப்பட்டு, மிக உயர்ந்த தரத்தில் நடாத்தப்படுகின்றன.

அதேநேரம், விருந்தினர் விருப்பத்தேர்வுகள் மற்றும் தேவைப்பாடுகள் எல்லா நேரங்களிலும் முழுமையாக திருப்தி அடைவதை உறுதிப்படுத்துவதற்காக சமையலறை குழுக்கள் உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மற்றும் உணவு ஒவ்வாமை பயிற்சிக்காக தொடர்ந்து கல்வி கற்பிக்கப்பட்டு மற்றும் கண்காணிக்கப்படுகின்றன. குடிநீர், நீச்சல் குள நீர், குளிரூட்டும் கோபுர நீர், விருந்தினர் அறை நீர் மற்றும் உணவு பதப்படுத்தும் நீர் ஆகியவற்றின் வழக்கமான நுண்ணுயிரியல் மற்றும் இரசாயன பகுப்பாய்வு பாதுகாப்பு நிலைகள் மற்றும் தேவைப்பாடுகளை கண்காணிப்பதற்கு தராதர அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூடத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், அறைகள் மற்றும் ஹோட்டலில் உள்ள காற்றின் தரம் உட்புற காற்றின் தரம் (IAQ) தொடர்பான அளவுருக்களுக்காக தொடர்ந்து பரிசோதிக்கப்படுகிறது.

தீ அபாயத்தைக் குறைப்பதற்கு ஹோட்டலின் மேற்தள இல்ல மட்டத்தில் ஒரு புதிய தெளிப்பான் முறைமை வைக்கப்பட்டுள்ளது. இரைச்சல் அளவைக் குறைப்பதன் மூலம் புதுப்பித்தலின் போது விருந்தினர்களுக்கு ஏற்படும் சிரமத்தை நாங்கள் வெற்றிகரமாகக் குறைத்துள்ளோம்.

நோக்கத்துடன் பயணம் செய்தல்

ஹில்டன் கொழும்பு மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக உள்ளூர் சமூகத்தில் இயங்கி வருகின்றதுடன், ஹோட்டலின் நிலையான அணுகுமுறையை உணர்ந்து அதன் ஆதரவை விரிவுபடுத்திய சமூகத்தின் ஆதரவும் நன்மதிப்பும் அதன் நீடித்த வெற்றிக்குக் காரணமாகும். ஹோட்டல் குழு உறுப்பினர்கள் 'புளு எனர்ஜி சமூகக் குழு' என்ற குடையின் கீழ் தன்னார்வத் தொண்டு செய்வதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்த அறக்கட்டளை அதன் அனைத்து செயற்திட்டங்களிலும் தன்னார்வ தொண்டிற்காக ஹோட்டல் குழுவின் ஆர்வத்தின் உதவியுடன் செயற்படுகிறது. ஹில்டன் கொழும்பு தன்னார்வத் தொண்டு வலையமைப்பு குழு உறுப்பினர்களுக்கு அவர்களின் அன்றாட வேலைகளுக்கு அப்பால் அடைந்துகொள்வதற்கு சமூகம் மற்றும் சுற்றாடலிற்கு பங்களிப்பதற்கு உதவுகிறது. நீண்ட கால வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை ஆதரிப்பதை இலக்காகக் கொண்ட இலக்கு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் இலங்கை சமூகங்களை வலுவூட்டுவதற்காக இந்த பன்முக முயற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

2022/23 இல் குழு உறுப்பினர் செயற்பாடுகள்

நிகழ்வு	செயற்பாடு
வெகுமதி மற்றும் அங்கீகாரம்	■ டவுன் ஹோல் கூட்டத்தில் மாதந்தம் நடைபெறும் நீல ஆற்றல் (டீடரந நுநெசபல) விருதுகள். ■ ஒவ்வொரு பிரிவுக்குமான அங்கீகார வாரம் அவர்கள் எவ்வளவு பாராட்டப்படுகிறார்கள் மற்றும் மதிக்கப்படுகிறார்கள் என்பதைக் காட்டுவதற்கு ஒவ்வொரு மாதமும் பயணங்கள், விருந்தினர் உரைகள், நினைவுப் பரிசுகள், கேக் வெட்டுதல் மற்றும் விசேட உணவு உள்ளிட்ட வேடிக்கையான நிகழ்ச்சி தொடர்களுடன் இடம்பெறுகின்றன. ■ பல செயற்பாடுகளைக் கொண்ட குழு உறுப்பினர் பாராட்டு வாரம
பதவியணியினர் உடல்நலம் மற்றும் ஆரோக்கியம	■ கண் மற்றும் தலசீமியா பரிசோதனைக்காக சுகாதார முகாம்கள் நடாத்தப்பட்டன ■ குழுவிற்காக ஸ்பா மற்றும் ஓய்வு அறை தொடங்கப்பட்டது. ■ பதவியணியினரிற்கான மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்
குழு உறுப்பினர்களுக்கான பொழுதுபோக்கு	■ புத்தாண்டு கொண்டாட்டங்கள்: விசேட காலை உணவு அல்லது மதிய உணவு மற்றும் பல மத விழாக்கள். ■ குழு பங்குபற்றிய ஆடை அலங்கார அணிவகுப்புடன் சேர்ந்த குழு விருந்து ■ விசேட மதிய உணவுடன் கூடிய ஹலோவீன் மதிய உணவு ர்சு ஆல் மிகவும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ■ அனைத்து பெண் ஊழியர்களுக்கும் ரோஜாக்கள் பரிசுடன் காதலர் தினத்தை கொண்டாடுதல் ■ அனைத்து குழு உறுப்பினர்களுக்கும் விசேட கிறிஸ்துமஸ் மதிய உணவு ■ துறைகளுக்கிடையேயான பந்துவீச்சு போட்டி ■ சர்வதேச மகளிர் தினத்தை சிறப்பு உயர் தேநீர் அமர்வு மற்றும் ஆலோசகர் அமா திஸ்ஸசேகரவின் விருந்தினர் உரையுடன் கொண்டாடப்பட்டது.

கம்பனியின் விவகாரங்கள் தொடர்பான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிட்டட்டின் பணிப்பாளர்கள் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அவர்களது அறிக்கை மற்றும் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை முன்வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

1. முதன்மை செயற்பாடு

ஹோட்டல்களின் உரிமையாளர்கள் மற்றும் செயற்படுத்துநர்களின் வணிகத்தை மேற்கொள்வதும், அத்தகைய நோக்கத்திற்காக ஏதேனும் காணிகள், கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை நிர்மாணித்தல், குத்தகைக்கு கொள்வனவு செய்தல் அல்லது சுவீகரித்தல் மற்றும் அவற்றை மேம்படுத்துதல், நிறுவுதல் மற்றும் வழங்குதல் கம்பனியின் முதன்மை செயற்பாடு ஆகும்.

அதன் பிரகாரம், மீளாய்வாண்டில், கம்பனி ஹில்டன் கொழும்பு ஹோட்டலைச் சொந்தமாகக் கொண்டு விருந்தோம்பல் வர்த்தகத்தில் ஈடுபட்டது.

2. நிதிக்கூற்றுக்கள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் பக்கம் 29 முதல் 53 வரை கொடுக்கப்பட்டுள்ளன.

3. தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

எதிர்காலத்தில் கம்பனி அதன் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு போதுமான வளங்களை கொண்டிருக்கின்றதென பணிப்பாளர்கள் திருப்தி அடைந்துள்ளனர். அதன் பிரகாரம, கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

4. கணக்காய்வாளரின் அறிக்கை

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கை பக்கங்கள் 25 முதல் 27 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

5. கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பு 03 இல் கொடுக்கப்பட்டுள்ளன, மேலும் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டதை விட மீளாய்வாண்டில் அந்தக் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை.

6. வரிவிதிப்பு

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 10 இல் கொடுக்கப்பட்டுள்ள விகிதங்களில் வரிவிதிப்புக்கான ஏற்பாடு கணிக்கப்பட்டிருந்தது.

7. பங்கிலாபங்கள்

2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சாதாரண பங்குகள் மீதான பங்கிலாபத்தை பணிப்பாளர்கள் பரிந்துரைக்கவில்லை.

8. பணிப்பாளர் சபை மற்றும் அவர்களின் பங்குரிமை

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் பணிப்பாளர்கள் பின்வருமாறு:

திரு. பி ஏ ஐ எஸ் பெரேரா	[2023.2.15 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்]
திரு. வி கனகசபாபதி	
திரு. பி எச் பி தெனியாய	[2023.4.6 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி முடிவுறுத்தப்பட்டது]
திரு. எல் ஆர் எஸ் வீரசிங்க	
திரு. பி ஏ எஸ் ஏ குமார	[2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி முடிவுறுத்தப்பட்டது]
கலாநிதி எம் கே சீ சேனநாயக்க	[2023.3.21 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி முடிவுறுத்தப்பட்டது]

மீளாய்வாண்டில் பின்வரும் பணிப்பாளர்கள் பதவி விலகினர்.˙. பதவியை முடிவுறுத்தினர

திரு. ஐ பி தண்டநாராயணா	[2022.7.12 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்]
செல்வி எம் ரீ ஐ வி அமரசேகரே	[2022.3.24 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி முடிவுறுத்தப்பட்டது]

அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் பின்வரும் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்:

திரு யூ ஜீ தர்மதாச
திரு கே எஸ் வீரசிங்க
திரு பி ஏ ஜெயகாந்த
திரு கே ஏ ஆர் ஜே பெர்னாண்டோ
கலாநிதி ஏ ஐ கங்கணம்கே
திரு எம் எஸ் வத்தேகம
திரு ஆர் சூரியாராச்சிகே
மேற்படி பணிப்பாளர்கள் எவரும் கம்பனியில் பங்குகளை வைத்திருக்கவில்லை.

ஓய்வுபெறுதல்கள் ∴ மீள்நியமனங்கள்

70 வயதுக்கு மேற்பட்ட திரு. யூ ஜீ தர்மதாச, கம்பனிகள் சட்டத்தின் 211வது பிரிவின் பிரகராம் பணிப்பாளராக மீண்டும் நியமிக்கப்படுவதற்காக பரிந்துரைக்கப்பட்டார். ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்டு 70 வயது எல்லை குறித்த பணிப்பாளருக்குப் பொருந்தாது என்று அறிவித்து, கம்பனியின் சபைக்கு திரு. யூ ஜீ தர்மதாச மீண்டும் நியமிக்கப்பட்டமை வரவிருக்கும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் ஒரே பங்குதாரரின் முன் வைக்கப்படும்.

9. வட்டி பதிவேடு

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 192(2) ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளவாறு பணிப்பாளர்கள் பொதுவான வெளிப்படுத்தல்களை செய்துள்ளனர். இதிலிருந்து எழும், அவர்கள் ஆர்வத்தை கொண்டுள்ள ஒப்பந்தங்களின் விபரங்கள் ஏதேனும் இருந்தால், அவை நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 37.1 இல் வெளியிடப்பட்டுள்ளன.

10 பணிப்பாளர்களின் ஊதியம

கணக்கீட்டுக் காலப்பகுதியில் பணிப்பாளர்களர்களின் ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள் பின்வருமாறுள்ளன்

பணிப்பாளர்களின் ஊதியம் ரூபா 3,575,000/- (2021 - ரூபா 3,725,000/-)

11. பணிப்பாளர்களின் ஆர்வங்கள் ∴ தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள்

மேற்படி விபரங்கள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 37 இல் உள்ளன. வெளிப்படுத்தப்பட்டவை தவிர வேறு எந்த ஒப்பந்தங்களிலும் அல்லது கம்பனியுடனான முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்களிலும் பணிப்பாளர்களுக்கு நேரடியான அல்லது மறைமுகமான ஆர்வம் காணப்படவில்லை.

12 கணக்காய்வாளர்கள

அரசியலமைப்பின் 154 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அரசியலமைப்பின் 19வது மற்றும் 20வது திருத்தங்களின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி கம்பனியின் கணக்காய்வாளராக தொடர்ந்திருக்கிறார்.

கணக்காய்வுக் கட்டணங்களை மாத்திரம் உள்ளடக்கி மீளாய்வாண்டிற்காக ரூபா 3,218,000.˙- தொகை கணக்காய்வாளருக்கு செலுத்தப்பட வேண்டும். (2021 - ரூபா 2,515,079.˙-)

13. நன்கொடைகள்

2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் கம்பனி எந்த நன்கொடைகளையும் வழங்கியிருக்கவில்லை.

14. கணக்காய்வுக் குழு

மீளாய்வாண்டின் போது கணக்காய்வுக் குழுவின் தொகுப்பு பின்வருமாறுள்ளது

பணிப்பாளர்களின் பெயர்கள்

திரு. வி கனகசபாபதி	[தலைவர் 2023.4.6 வரை]
திரு. பி ஏ எஸ் ஏ குமார	உறுப்பினர்
திரு. பி எச் பி தெனியாய	உறுப்பினர்

குழு 2023 யூன் 28 முதல் அமுலுக்கு வரும் வகையில் பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது

திரு. பி ஏ எஸ் ஏ குமார	தலைவர் [2023.06.28 முதல் அமுலுக்கு வரும் வகையில்]
திரு. பி எச் பி தெனியாய	உறுப்பினர்
திரு எம் எஸ் வத்தேகம	உறுப்பினர்

கம்பனி எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் சபையின் அழைப்பின் பேரில் திரு. கனகசபாபதி கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்வார்.

15. ஊதியக் குழு

ஊதியக் குழுவின் தொகுப்பு பின்வருமாறுள்ளது:

யேஅநள ழக வாந னுசைநஉவழசள

திரு யூ ஜீ தர்மதாச	தலைவர் [2023.4.20 முதல் அமுலுக்கு வரும் வகையில்]
திரு. பி எச் பி தெனியாய	உறுப்பினர் [2023.4.20 முதல் அமுலுக்கு வரும் வகையில்]
திரு ஆர் சூரியாராச்சிகே	உறுப்பினர் [2023.4.20 முதல் அமுலுக்கு வரும் வகையில்]
திரு. பி ஏ ஐ எஸ் பெரேரா	தலைவர் [2023.2.15 வரை]
திரு. வி கனகசபாபதி	உறுப்பினர் [2023.4.6 வரை]
திரு. இஷான் தண்டநாராயணா	உறுப்பினர் [2022.7.12 வரை]

16. தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் மீளாய்வுக் குழு

மீளாய்வாண்டில் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் மீளாய்வுக் குழுவின் அமைப்பு பின்வருமாறுள்ளது:

பணிப்பாளர்களின் பெயர்கள்

திரு. வி கனகசபாபதி	தலைவர் [2023.4.6 வரை]
திருமதி. டி எஸ் அமரசேகர	உறுப்பினர்

17. மூலதனச் செலவினம

பொருள் மூலதன கடப்பாடுகளின் விபரங்கள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 34 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

18. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பற்றிய விபரங்கள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 12 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

19. கூறப்பட்ட மூலதனம

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 20,466,456,858/- ஆக இருந்ததுடன. இது 2,046,645,686 சாதாரண பங்குகளால் குறிப்பிடப்படுகிறது.

20. நிதி அறிக்கையிடலிற்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள

கம்பனியின் விவகாரங்களின் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவது பணிப்பாளர்களின் பொறுப்பாகும். இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். இதன் பிரகாரம் இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் விவகார நிலைமை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நட்டம் தொடர்பாக உண்மையானதும் நியாயமானதுமான தன்மையை வழங்குகிறதென பணிப்பாளர்கள் திருப்தியடைகின்றனர்.

21. நியதிச்சட்டக் கொடுப்பனவுகள

பணிப்பாளர்கள் தமது சிறந்த அறிவு மற்றும் நம்பிக்கையின் படி அரசாங்கத்திற்கும் கம்பனியின் ஊழியர்களுக்கும் செலுத்த வேண்டிய அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் இன்றுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளன என திருப்தி அடைகின்றனர்.

22. அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் எந்தவொரு நிகழ்வும் நிகழ்ந்திருக்கவில்லை, நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 33 இல் கொடுக்கப்பட்டுள்ளதைத் தவிர கணக்குகளில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்துதல் தேவைப்படும்.

23. வருடாந்த பொதுக் கூட்டம

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 144 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டத்திற்குப் பதிலாக, கம்பனியின் வருடாந்த பொதுக் கூட்டம் ஒரே பங்குதாரரின் எழுத்துமூல தீர்மானத்தின் மூலம் நடைபெறும்.

சபைக் கட்டளையின் மூலம்
ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிட்டட

திரு. யூ ஜீ தர்மதாச
தலைவர்

திரு. பி ஏ எஸ் ஏ குமார
gzpg;ghsH

பி டபிள்யூ கோப்பரேட் செக்ரட்டரியல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் செயலாளர்கள

கொழும்பு
2023 யூன் 28

கணக்காய்வுக் குழு அறிக்கை

கணக்காய்வுக் குழு சாசனம்

கணக்காய்வுக் குழுவானது கம்பனியின் நிதி விவகாரங்கள் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் பரீடசிப்பதற்கும் நிதி அறிக்கையிடலை மதிப்பாய்வு செய்து கண்காணிப்பதற்கும் கணக்காய்வுக் குழு சாசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகளின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் உப குழுவொன்றாக செயற்படுகிறது.

கணக்காய்வுக் குழுவின் வகிபங்கு

கணக்காய்வுக் குழுவானது இடர் முகாமைத்துவ செயன்முறை மற்றும் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்ற நிதி அறிக்கையிடலின் தரம் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கான தீர்மானமெடுத்தல் மற்றும் செயற்பாடுகள் இரண்டையும் முன்வைப்பதில் உள்ள சரியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபைக்கு அவர்களின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் உதவுவதற்கு ஒரு செயற்திறனான மன்றமாக செயற்படுகிறது.

- கம்பனியின் நிதிக்கூற்றின் நேர்மை மற்றும் கம்பனியின் உள்ளக கணக்காய்வு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு முறைமை.
- உள்ளக கணக்காய்வாளர்களின் செயலாற்றல்.
- கம்பனியின் நிதிக்கூற்றின் வருடாந்த சுயாதீன கணக்காய்வு.
- உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வு அறிக்கைகளின் பாரபட்சமற்ற மதிப்பாய்வு மற்றும் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை கருத்தில் கொள்ளுதல்.
- நியதிச்சட்ட தேவைப்பாடுகளுடனான கம்பனியின் இணக்கம்.
- பங்குச் சந்தைக்கு வெளியிடப்படும் கணக்காய்வு செய்யப்படாத காலாண்டு கணக்குகளின் மதிப்பாய்வு
- பணிப்பாளர் சபையின் தீர்மானங்களுடன் இணங்குதல்.

கணக்காய்வுக் குழுவின் அமைப்பு

கணக்காய்வுக் குழு மூன்று நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருந்ததுடன் அமைப்பு பின்வருமாறுள்ளது:

திரு. வி கனகசபாபதி - தலைவர் (2023.04.06 வரை)
(சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது)

திரு. பி ஏ எஸ் ஏ குமார - உறுப்பினர்
(சுயாதீனமற்ற நிறைவேற்றுத் தரமல்லாதது)

திரு. பிரியந்த தெனியாயே - உறுப்பினர்
(சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாதது)

குழுவானது 2023 யூன் 28 முதல் அமுலுக்கு வரும் வகையில் பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டது:

திரு. பி ஏ எஸ் ஏ குமார - தலைவர் (2023.06.28 முதல் அமுலுக்கு வரும் வகையில்)

திரு. பி எச் பி தெனியாய - உறுப்பினர்

திரு. எம் எஸ் வத்தேகம் - உறுப்பினர்

திரு. கனகசபாபதி, பொதுத் திறைசேரியின் பொதுமுயற்சிகள் பணிப்பாளர் நாயகமாக இருந்து ஓய்வு பெற்றவர், பொதுத் துறையில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக சேவை செய்து, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் நிதி முகாமைத்துவ சீர்திருத்த ஒருங்கிணைப்பாளராகவும் இருந்தார். ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றிருந்ததுடன் லண்டனில் பட்டய பொது நிதிக் கணக்காளராக உள்ளார். அவர் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம், இலங்கையின் பொது நிதிக் கணக்காளர்கள் சங்கம் மற்றும் இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் ஆகியவற்றின் சக உறுப்பினராகவும் உள்ளார்.

திரு. பிரியநாத தெனியாய 2000 ஆம் ஆண்டு முதல் கொழும்பு மேல் நீதிமன்ற குற்றவியல் தனியார் சட்டத்தரணிகள் சங்கத்தில் சட்டத்தரணியாகவும் குற்றவியல் ஆலோசகராகவும் கடமையாற்றி வருகிறார், பாதுகாப்பு ஆலோசனையில் நிபுணத்துவம் பெற்றவராவார்.

திரு. பி.ஏ.எஸ். குமார 1991 ஆம் ஆண்டு பொதுச் சேவையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தில் கணக்காய்வுப் பரீட்சகராக சேர்ந்தார். மேலும் 2007 ஆம் ஆண்டு நிதியமைச்சின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் இணைந்தார். தற்போது அவர் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக உள்ளார். இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் டீ.ளுஉ முகாமைத்துவம் (பொது நிர்வாகம்) (சிறப்பு) பட்டம் பெற்றவராவார். மேலும் 2015 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகக் கற்கைகளில் முதுகலைப் பட்டத்தைப் பெற்றார். இவர் இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு 1 உத்தியோகத்தராகவும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் பட்டய பொது கணக்காளர்களின் உறுப்பினராகவும் உள்ளார்.

திரு. மாதவ வத்தேகம அவர்கள் அரசாங்க அலுவல்கள், சர்வதேச உறவுகள் மற்றும் கணனிக் கற்கைகள் ஆகியவற்றில் பல்வேறு பின்னணியைக் கொண்ட ஒரு உயர் திறமையான நிபுணராவார். தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சரின் செயலாளராகப் பணியாற்றி வரும் அவர், அரச மற்றும் தனியார் துறைகளில் செல்வாக்குமிக்க பதவிகளை வகித்துள்ளார். இன்டிபென்டன்ஸ் ஹோல்டிங்ஸ், சில்வர்பேர்ட் இன்டர்நேஷனல் மற்றும் ட்ரானிக் என்டர்டெயின்மென்ட் ஆகியவற்றின் தலைவராக அவர் செயற்பட்டுள்ளார், அங்கு இந்த நிறுவனங்களின் வெற்றிக்கு உந்துதலில் மிகச்சிறந்த தலைமைத்துவத்தையும் மூலோபாய தூரநோக்கையும் வெளிப்படுத்தியுள்ளார்.

கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்

2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில், கணக்காய்வுக் குழு 5 கூட்டங்களை நடாத்தியது. பிரதம செயற்பாட்டு அதிகாரி, பிரதம நிதி அதிகாரி, ர்னுடு இன் கணக்காளர், ஹில்டன் கொழும்பின் பொது முகாமையாளர் மற்றும் நிதிப் பணிப்பாளர், எர்ன்ஸ்ட் ரூ யங் (நு ரூ லு) உள்ளகக் கணக்காய்வாளர்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதிகள் மற்றும் ஹில்டன் கொழும்பின் முகாமைத்துவக் கணக்காய்வாளர்கள் ஆகியோர் அழைப்பின் பேரில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

வெளியக கணக்காய்வாளர்கள்

அரசியலமைப்பின் 19வது மற்றும் 20வது திருத்தம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் ஆகியவற்றின் மூலம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி கம்பனியின் வெளியக கணக்காய்வாளராக தொடர்கிறார். அதன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று, கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்பட்டது.

உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் மதிப்பாய்வு

கம்பனியின் உள்ளகக் கணக்காய்வாளர்களான நு ரூ லு கணக்காய்வுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தின் அடிப்படையில் ஹோட்டல் செயற்பாடுகளின் விரிவான கணக்காய்வுகளை மேற்கொள்கின்றனர். உள்ளகக் கணக்காய்வு முகாமைத்துவத்தால் நிறுவப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் சுயாதீன மதிப்பாய்வைச் செய்கிறது. மேலும் இடர் முகாமைத்துவ செயன்முறையை நிவர்த்தி செய்யும் செயற்பாட்டிற்கு பொறுப்பான பதவியணியினரால் கட்டுப்பாடுகளை கடைபிடிக்கும் அளவை தீர்மானிக்கிறது. உள்ளக கணக்காய்வாளர் அறிக்கைகளின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் உள்ளடக்கங்கள் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடப்பட்டு சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகள் மற்றும் அத்தகைய அறிக்கைகள் கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

காலாண்டு நிதிக்கூற்றுக்களின் மதிப்பாய்வு

கம்பனியின் காலாண்டு நிதிக்கூற்றுக்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அங்கீகாரத்திற்காக கணக்காய்வுக் குழுவால் சபைக்கு பரிந்துரைக்கப்பட்டது.

IFRS/ SLFRS ஐ கடைப்பிடித்தல்

கம்பனி அதனது நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, இதுநாள் வரையிலான அனைத்துக் காலப்பகுதிகளுக்கும் பொருந்தும் வகையில் தயாரித்துள்ளது.

இணக்கக் கூற்றுக்களின் மதிப்பாய்வு

கம்பனி அனைத்து நியதிச்சட்ட தேவைப்பாடுகளுடன் இணங்குவதை உறுதி செய்வதற்காக குழு இணக்க கூற்றுக்களை மதிப்பாய்வு செய்தது. மேலும், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தை கம்பனி கடைப்பிடிக்கிறது என குழு திருப்தி அடைந்துள்ளது.

2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு நிதிக்கூற்றின் மதிப்பாய்வு

கம்பனி தொடர்பான 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு நிதிக்கூற்றுக்கள், கணக்காய்வுக் குழுவால் ஹோட்டல் ஹில்டன் கொழும்பின் வெளியக கணக்காய்வாளர்கள், உள்ளக கணக்காய்வாளர்கள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வாளர்களுடன் சேர்ந்து மதிப்பாய்வு செய்யப்பட்டது. பிரதம நிதி உத்தியோகத்தரால் கணக்காய்வுக் குழுவுக்குத் தேவையான உறுதிப்படுத்தல்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் வழங்கப்பட்டன. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் மூலம் வேண்டப்படும் தகவல்களிற்கு இணங்க குறித்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கு கணக்காய்வுக் குழு மீளாய்வு உதவியதுடன் அத் திகதியில் உள்ளவாறான கம்பனியின் விவகாரங்கள் மற்றும் மீளாய்வாண்டின் போதான கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை வழங்கியது

முடிவுரை

கணக்காய்வுக் குழு, கம்பனியின் சொத்துக்கள் மற்றும் நிதி நிலைமையைப் பாதுகாப்பதற்குப் போதுமான கட்டுப்பாடுகள் உள்ளன என்றும், கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்ட பெறுபேறுகள் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டவை என்றும் கருதுகிறது.



பி ஏ எஸ் ஏ குமார
தலைவர்
கணக்காய்வுக் குழு

2023 யூன் 28

நிதிக்கூற்றுக்கள

சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No.
எனது இல.: ரீஜபி.்.சீ.்.எச்டிஎல்.்.
எவ்ஏ.்.2022.்.01

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
31 ஆயல 2023

தலைவர்

ஹோட்டல் டெவலப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டட்

ஹோட்டல் டெவலப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டட்டின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

ஹோட்டல் டெவலப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டட்டின் ("கம்பனி") 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAuSs) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 கம்பனியின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

கம்பனியின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்களை ஏனைய தகவல்கள் உள்ளடக்குகின்ற போதிலும் இக் கணக்காய்வாளர் அறிக்கை திகதியின் பின்னர் எனக்கு கிடைக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் அவை தொடர்பான எனது கணக்காய்வாளர் அறிக்கையை உள்ளடக்கவில்லை. ஏனைய தகவல்களிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்குவதில்லை. அத்துடன் அவை தொடர்பாக எந்தவொரு உறுதிப்பாட்டு முடிவையும் நான் தெரிவிக்கவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள் கிடைக்கும் போது அதனை வாசிப்பது எனது பொறுப்பாகும். அவ்வாறு மேற்கொள்வதன் மூலம் ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வில் பெறப்பட்ட எனது அறிவுடன் பொருண்மையாக பொருந்தாது உள்ளதா அல்லது இல்லாவிடின் பொருண்மையாக தவறானதாக தோன்றுகின்றதா என்பது கருத்தில் கொள்ளப்படுகின்றது.

கம்பனியின் 2022 ஆண்டறிக்கையை நான் வாசிக்கும் போது அதில் பொருண்மையான தவறான கூற்றுக்கள் காணப்படுவதாக நான் முடிவுசெய்தால் அவ் விடயத்தை சீர்செய்வதற்காக அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களிற்கு நான் தெரிவிக்க வேண்டும். மேலும் பொருண்மையான திருத்தம் செய்யப்படாத தவறான கூற்றுக்கள் காணப்பட்டால் அவை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

2.1.1 கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(1)(ஈ) பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

2.1.2 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(கை) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(கை) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.


2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே கம்பனியால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் கம்பனியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் கம்பனி இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனி அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல்.



டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

விரிவான வருமானக் கூற்று

2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 12 மாதங்களிற்கானது	குறிப்புக்கள்	12 மாதங்கள் 31.12.2022 ரூபா. '000	12 மாதங்கள் 31.12.2021 ரூபா. '000
வருமானம்	05	2,887,267	1,178,381
விற்பனைக் கிரயம்		(1,825,497)	(922,695)
மொத்தலாபம்		1,061,770	255,686
ஏனைய இலாபங்கள் மற்றும் நட்டங்கள	06	206,589	31,191
நிர்வாகச் செலவினங்கள்		(855,887)	(585,498)
ஏனைய செலவினங்கள		(302,759)	(167,921)
பெறுமானத்தேய்விற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்		109,713	(466,542)
பெறுமானத்தேய்வு		(371,065)	(386,618)
பெறுமானத்தேய்விற்கு பின்னரான செயற்பாட்டு இலாபம்		(261,352)	(853,160)
நிதி வருமானம்	07	18,162	11,222
நிதிக் கட்டணங்கள்	08	(389,574)	(134,477)
வரிவிதிப்புக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)	09	(632,764)	(976,415)
வருமான வரி செலவினம்	10	(252,358)	19,190
காலப்பகுதிக்கான வரிவிதிப்புக்கு பின்னரான இலாபம்/(நட்டம்)		(885,123)	(957,225)
ஏனைய விரிவான வருமானம்			
ஊழியர் நலன் கடப்பாடுகள் மீதான உண்மையான ஆதாயம்/ (நட்டம்)		2,970	22,630
காலப்பகுதிக்கான மொத்த விரிவான வருமானம்/ (செலவினம்)		(882,153)	(934,595)
பங்கொன்றிற்கான உழைப்பு - அடிப்படை (ரூபா.)	11	(0.43)	(0.46)

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 1 முதல் 38 வரையிலான குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

நிதி நிலைமைக் கூற்று

As at 31st December 2022	குறிப்புக்கள்	31.12.2022 ரூபா. '000	31.12.2021 ரூபா. '000
சொத்துக்கள்			
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	12	6,929,402	8,722,182
குத்தகை காணி	13	6,261,798	6,337,966
மூலதன நடைமுறைவேலை		2,600,378	766,764
மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்		15,791,578	15,826,912
நடைமுறைச் சொத்து			
சரக்கிருப்புக்கள்	14	132,604	53,034
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்	15	141,894	74,740
தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெற வேண்டிய தொகை	16	8,988	2,242
ஏனைய சொத்துக்கள்	17	828,764	578,988
நடைமுறை நிதிச் சொத்துக்கள்	18	26,296	110,111
காசு மற்றும் வங்கி மீதிகள்	19	299,651	122,354
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		1,438,197	941,469
மொத்த சொத்துக்கள்		17,229,775	16,768,381
உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்			
பங்குதாரர்களின் உரிமை மூலதனம்			
கூறப்பட்ட மூலதனம்	20	20,466,456	20,466,456
மீள்மதிப்பீட்டு மிகை		1,452,978	1,452,978
ஒதுக்கங்கள்	21	178,228	53,801
திரண்ட நட்டம்		(9,814,896)	(8,808,317)
மொத்த உரிமை மூலதனம்		12,282,767	13,164,918
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்			
வட்டி தாங்கும் கடன்கள் மற்றும் கடன் பெறுதல்கள்	22	2,000,000	1,098,372
ஓய்வூதிய நலன் கடப்பாடுகள்	23	77,467	97,982
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு	24	633,891	396,138
பயன்படுத்துவதற்கான உரிமை - குத்தகை காணி பொறுப்பு	13	-	4,806
மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்		2,711,359	1,597,298
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்	25	744,285	418,936
தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகை	26	100,808	26,475
ஒப்பந்த பொறுப்புக்கள்	27	179,444	158,114
வட்டி தாங்கும் கடன்கள் மற்றும் கடன் பெறுதல்கள்	22	-	16,600
பயன்படுத்துவதற்கான உரிமை - குத்தகை காணி பொறுப்பு	13	4,806	5,458
நிறுத்திவைத்தல் கட்டணங்கள் - புதுப்பித்தல் செயற்திட்டம்		57,559	48,252
வங்கி மேலதிகப்பற்று		1,148,746	1,332,328
மொத்த நடைமுறைப் பொறுப்பு		2,235,648	2,006,163
மொத்த பொறுப்புக்கள்		4,947,007	3,603,461
மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்		17,229,775	16,768,381
பங்கொன்றிற்கான தேறிய சொத்துகள் - (ரூபா.)	28	6.00	6.43

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

ஜூட் விக்ரமரத்ன
நிதித் தலைவர்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்து வழங்குதல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். 2023 மே 24 இல் சபைக்காகவும் அதன் சார்பாகவும் கையொப்பமிடப்பட்டது.

திரு. பி ஏ எஸ் ஏ குமார
பணிப்பாளர்

திரு. உபுல் தர்மதாச
தலைவர

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 1 முதல் 38 வரையிலான குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று

2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 12 மாதங்களிற்கானது	கூறப்பட்ட மூலதனம்	மீள்மதிப்பீட்டு மிகை	தளபாடம், பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள் பிரதியீட்டு ஒதுக்கங்கள்	திரண்ட நட்டம்	மொத்தம
	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000
12 மாத காலப்பகுதிக்கான இலாபம்/ (நட்டம்).	20,466,456	1,452,978	1,649	(7,821,569)	14,099,514
ஊழியர் மீதான உண்மையான ஆதாயம்/ (நட்டம்).	-	-	-	(957,225)	(957,225)
நலன் கடப்பாடுகள், வரிகளின் தேறிய – நட்டம்					
தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள்	-	-	-	22,630	22,630
தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள் ஒதுக்கீட்டு மாற்றங்கள்	-	-	(16,477)	16,477	-
2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	-	-	68,629	(68,629)	-
டீயடயஎந யள யவ 31ளவ ஹுநஉநஅடிநச 2021	20,466,456	1,452,978	53,801	(8,808,317)	13,164,918
12 மாத காலப்பகுதிக்கான இலாபம்/ (நட்டம்)	-	-	-	(885,123)	(885,123)
ஊழியர் மீதான உண்மையான ஆதாயம்/ (நட்டம்). நலன் கடப்பாடுகள், வரிகளின் தேறிய – நட்டம்	-	-	-	2,970	2,970
தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் உபகரணங்களின் பிரதியீடு	-	-	148,687	(148,687)	-
மற்றும் உபகரணங்கள் ஒதுக்கீட்டு மாற்றங்கள்	-	-	(24,262)	24,262	-
2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	20,466,456	1,452,978	178,228	(9,814,896)	12,282,767

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 1 முதல் 38 வரையிலான குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

பண புழக்கங்களின் அறிக்கை

2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 12 மாதங்களிற்கானது		31.12.2022 ரூபா. '000	31.12.2021 ரூபா. '000
வரிவிதிப்புக்கு முன்னரான இலாபம் ∴ (நட்டம்).		(632,764)	(976,414)
சீராக்கங்கள்			
பெறுமானத்தேய்வு	12	294,897	303,511
காணியின் காலக்கழிவு	13	76,168	76,907
கடன்பட்டோரின் நட்டக்கழிவில் மாற்றங்கள்	15	649	(4,457)
வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களுக்கான ஏற்பாடு	23	20,135	5,991
முறிவுகளுக்கான ஏற்பாடு	25	6,868	2,094
வட்டி செலவினங்கள்	8	389,574	134,476
தேறாத நாணயமாற்று (ஆதாயம்)/ நட்டம்		(7,745)	358
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனையின் இலாபம்	7	(19,083)	(12,560)
வட்டி வருமானம்	6	(18,162)	(11,222)
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்		110,537	(481,316)
சரக்கிருப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு	14	(79,570)	(5,193)
பெறவேண்டியவைகளில் (அதிகரிப்பு)/ குறைவு	15	(67,803)	(42,470)
தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெற வேண்டிய தொகையில் அதிகரிப்பு/ குறைவு	16/26	67,587	24,642
காணிக் குத்தகையைப் பயன்படுத்துவதற்கான உரிமையில் அதிகரிப்பு/ குறைவு	13	(5,458)	6,200
ஏனைய சொத்துகளில் (அதிகரிப்பு)/ குறைவு	17	(566)	(11,703)
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு/ (குறைவு)	25	344,561	86,776
ஒப்பந்த பொறுப்புக்களில் அதிகரிப்பு/ (குறைவு)	27	21,330	98,222
செயற்பாடுகளில் இருந்து உருவாக்கப்பட்ட காசு		390,617	(324,842)
ஓய்வூதிய நலன்களின் கொடுப்பனவு	23	(37,680)	(33,577)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு		352,937	(358,419)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	12	(5,231)	(999)
மூலதன நடைமுறைவேலையில் முதலீடு		(618,663)	(796,973)
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்தான பெறுவனவுகள்		24,117	31,029
பெற்ற வட்டி வருமானம்	8	18,162	11,222
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு		(581,614)	(755,721)
நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்			
வட்டி தாங்கும் கடன்கள் மற்றும் கடன் பெறுதல்களின் மீள்கொடுப்பனவு	22	(16,600)	(234,036)
புதிய வட்டி தாங்கும் கடன்கள் மற்றும் கடன் பெறுதல்கள்	22	901,628	1,098,372
நிதி கிரயம்	8	(387,031)	(101,739)
நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு		497,997	762,597
காசு மற்றும் காசிற்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு/(குறைவு).		269,320	(351,542)
ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்கு சமமானவை (குறிப்பு 30)		(1,099,864)	(747,964)
ஐ.அ.டொலர் சேமிப்பு வைப்புகளில் தேறாத நாணயமாற்று இலாபம்/நட்டம்		7,745	(358)
காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறான காசு மற்றும் காசிற்கு சமமானவை		(822,799)	(1,099,864)

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 1 முதல் 38 வரையிலான குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள

31 டிசம்பர் 2022 இல் முடிந்த பன்னிரண்டு மாதங்கள்

1. நிறுவன தகவல்

1.1 பொது

ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிட்டட்டானது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு குடியிருக்கும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் பிரதான வணிக இடம் என்பன இல. 02, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை, கொழும்பு 2 இல் அமைந்துள்ளன.

1.2 முக்கிய செயற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிட்டட், ஹில்டன் கொழும்பு ஹோட்டலுக்குச் சொந்தமான விருந்தோம்பல் வியாபார வணிகத்தில் ஈடுபட்டுள்ளது.

1.3 வெளியீட்டிற்கான அங்கீகார திகதி

நிதிக்கூற்றுக்கள் 2023 மே 24 இல் பணிப்பாளர் சபையால் வெளியிடப்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்டது

2. தயாரிப்பின் அடிப்படை

2.1 இணக்கக் கூற்று

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் (கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் சேர்த்து நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வெளியிடப்பட்ட பொதுவாக ளுடுகுசுளு என குறிப்பிடப்படுகிற இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மூலமும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளிற்கு இணங்கவும் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 அளவீட்டின் அடிப்படை

நிதி நிலைமை கூற்றில் பின்வரும் பொருண்மையான விடயத்தை தவிர, வரலாற்று கிரய அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன:

- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்ந்து நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டது.
- வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியில் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாட்டு பொறுப்பு இனங்காணப்பட்டுள்ளது.

2.3 செயற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயம்

நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாயில் சமர்ப்பிக்கப்படுகின்றன, இது கம்பனியின் செயற்பாட்டு நாணயமாகவும் காட்சிப்படுத்தல் நாணயமாகவும் உள்ளது. இலங்கை ரூபாயில் வழங்கப்பட்ட அனைத்து நிதித் தகவல்களும் வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால், அருகிலுள்ள ரூபாய்க்கு மட்டந்தட்டப்படும்.

2.4 ஒப்பீட்டுத் தகவல்

டுமுயுளு 01 – நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தலின் பிரகாரம் கணக்கீட்டுக் கொள்கைகள் கம்பனியால் முன்னைய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

2.5 பொருண்மை மற்றும் ஒன்றுசேர்த்தல்

நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான டுமுயுளு 01 இற்கு இணங்க, நிதிக்கூற்றுக்களில் ஒரே மாதிரியான உருப்படிகளின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் தனித்தனியாக வழங்கப்படுகின்றன. நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமம் - டுமுயுளு 1 மற்றும் 2020 சனவரி 01 முதல் அமுலுக்கு வந்த டுமுயுளு 1 இற்கான திருத்தங்கள் மூலம் அனுமதிக்கப்பட்டவாறு வேறுபட்ட இயல்புகள் அல்லது செயற்பாடுகளின் உருப்படிகள் பொருண்மையாக இருந்தால் அவை தனித்தனியாக வழங்கப்படுகின்றன.

2.6 எதிரீடு செய்தல்

ஒரு தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கு அல்லது சொத்துக்கள் தேறும் அதே நேரத்தில் பொறுப்பைத் தீர்ப்பதற்கான எண்ணம் இருந்தால் இனங்காணப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கு சட்டப்பூர்வமாக அமலாக்கக்கூடிய உரிமை இருக்கும் போது மாத்திரமே நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்பட்டு, தேறிய தொகை நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படுகிறது, எந்தவொரு கணக்கீட்டு நியமம் அல்லது விளக்கத்தால் தேவைப்படாவிட்டால் அல்லது அனுமதிக்கப்படாவிட்டால், மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டால் விரிவான வருமான கூற்றில் வருமானம் மற்றும் செலவினங்கள் எதிரீடு செய்யப்படுவதில்லை.

3. கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டுக் கொள்கைகள் கம்பனியால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன, மேலும் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்களைத் தவிர முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் ஒத்திருக்கின்றன.

ஒப்பீட்டுத் தகவல்

சிறந்த விளக்கக்காட்சிக்கு பொருத்தமாகவும் நடைமுறை ஆண்டுடன் ஒப்பிடத்தக்கதாகவும் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் விளக்கக்காட்சி மற்றும் வகைப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளது,.

நிதிக்கூற்றுக்களில் முன்னைய காலப்பகுதிக்குரிய தொடர்புடைய அளவு, விபரிப்பு மற்றும் விளக்கமான தகவல்கள் உள்ளிட்ட ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், கணக்கீட்டுக் கொள்கையின் பின்னோக்கிய பயன்பாடு, பின்னோக்கி மறுபரிசீலனை செய்தல் அல்லது நிதிக்கூற்றுக்களில் உள்ள உருப்படிகளின் மறுவகைப்படுத்தல் என்பன காணப்படும் போது முன்னைய காலப்பகுதியின் தொடக்கத்தில், கம்பனி மேலதிக நிதி நிலைமைக் கூற்றை முன்வைக்கிறது.

3.1 கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல்களில் மாற்றங்கள்

புதிய மற்றும் திருத்தப்பட்ட நியமங்கள் மற்றும் விளக்கங்கள்

SLFRS 16 குத்தகைகள்

ளுடுகுசுளு 16 தனி குத்தகைதாரர் கணக்கீட்டு மாதிரியை வழங்குகிறது, குத்தகை காலம் 12 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவாக இருந்தால் அல்லது குத்தகைதாரர் கணக்கீடு தற்போதைய நடைமுறையைப் போலவே இருந்தாலும், அடிப்படைச் சொத்தின் பெறுமதி குறைவாக இருக்கும் வரை அனைத்து குத்தகைகளுக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை இனங்காண்பதற்கு குத்தகைகள் தேவைப்படுகின்றன. இது டுமுயுளு 17 குத்தகைகள், ஐகுசுஐஊ 4 ஒரு ஏற்பாட்டில் ஒரு குத்தகை உள்ளடங்குகிறதா என்பதை தீர்மானித்தல், ளுஐஊ 15 செயற்பாட்டு குத்தகைகள்-ஊக்குவிப்புக்கள் மற்றும் ளுஐஊ 27 குத்தகையின் சட்ட வடிவத்தை உள்ளடக்கிய கொடுக்கல்வாங்கல்களின் பொருளை மதிப்பீடு செய்தல் என்பவற்றை மாற்றியமைக்கிறது. ளுடுகுசுளு 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானத்தை பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு முன்னைய பயன்பாடு அனுமதிக்கப்படுகிறது.

ளுடுகுசுளு 16 ஆனது 2019 ஜனவரி 1 இல் அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிகளுக்கு செயற்பாட்டில் உள்ளது.

ஹில்டன் கொழும்பின் ருனுயு கார் தரிப்பிடத்தின் காணி குத்தகை உரிமைகள் 2019 சனவரி 1 முதல் அமலுக்கு வரும் வகையில் ளுடுகுசுளு 16 ஐ ஏற்றுக்கொள்ளும் போது தாக்கத்தை கொண்டிருக்கும்.

3.2 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுத் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு எதிர்காலம் தொடர்பான சில முக்கியமான கணக்கீட்டு எடுகோள்களைப் பயன்படுத்த வேண்டும். மேலும், அறிக்கையிடப்பட்ட காலப்பகுதியின் இறுதியில், வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் ஆகியவற்றைப் பாதிக்கும் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை கம்பனியின் முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டும்.

எனினும், இந்த எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமற்ற தன்மை எதிர்கால காலப்பகுதிகளில் சொத்து அல்லது பொறுப்பின் கொண்டுசெல்லும் தொகைக்கு பொருண்மையான சீராக்கம் தேவைப்படும் விளைவுகளை ஏற்படுத்தலாம். ஆகையால் அனுபவமும் முடிவுகளும் இந்தத் தீர்ப்புக்கள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தும் செயன்முறையின் போது முகாமைத்துவம் பின்வரும் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை செய்துள்ளது, அவை நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகளில் மிகவும் குறிப்பிடத்தக்க விளைவைக் கொண்டுள்ளன:

(அ) வரிவிதிப்பு

கம்பனி வருமான வரிகள் மற்றும் பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி உள்ளிட்ட ஏனைய வரிகளுக்கு உட்படுத்தப்படுகிறது. தற்போதைய, பிற்போடப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஏற்பாட்டைத் தீர்மானிப்பதற்கு, நிதிக்கூற்றுக்களில் ளுடுகுசுளு ஐ ஏற்றுக்கொள்ளும் நடைமுறை பற்றிய வரி வழிகாட்டல்களின் நிலுவை விடயம் மற்றும் வரிகளை விதிக்கும் நோக்கத்திற்காக வரி விதிக்கக்கூடிய இலாபம் ஆகியவை தொடர்பாக நியாயமான தீர்ப்புக்கள் தேவைப்படுகின்றன. இந்நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் நேரத்தில், வரிச் சட்டங்களின் பொருந்தக்கூடிய தன்மையின் விளக்கம் தொடர்பாக நிச்சயமற்ற நிலைமைகள் உள்ளன.

தற்போதைய, பிற்போடப்பட்டட மற்றும் ஏனைய வரிகளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மேலதிக வரிகள் செலுத்தப்படுமா என்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் கம்பனி இனங்கண்டுள்ளது, இறுதி வரி விளைவு ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்ட தொகையிலிருந்து வேறுபட்டால், அத்தகைய வேறுபாடுகள் தீர்மானிக்கப்படும் காலத்தில் வருமானம், பிற்போடப்பட்ட மற்றும் வரித் தொகைகளை பாதிக்கும்.

(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு

கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நியாயமான பெறுமதியில் பிரதிபலிக்கப்படுகின்றன. இதே போன்ற சொத்துக்களின் தற்போதைய சந்தை விலைகள் கிடைக்கும் போது, இந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதிகளை மதிப்பிடுவதில் இத்தகைய சான்றுகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. அத்தகைய தகவல்கள் இல்லாத போது கம்பனி ஒரு சுயாதீனமான தொழில்முறை மதிப்பீட்டாளரின் உதவியுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான பெறுமதி மதிப்பீடுகளுக்குள், நியாயமான பெறுமதிகளாகக் பங்களிக்கக்கூடிய தொகைகளை தீர்மானிக்கிறது.

(இ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம்

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் இற்றை பெறுமதிகள், பயன்தரு ஆயுட்காலம் மற்றும் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு முறைகளை கம்பனி மதிப்பாய்வு செய்கிறது. இந்த பெறுமதிகள், விகிதங்கள், முறைகள் ஆகியவற்றின் மதிப்பீட்டில் முகாமைத்துவ தீர்ப்பு செயற்படுத்தப்படுகிறது, எனவே அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவை.

(ஈ) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

பணிப்பாளர்கள், கம்பனி தொடர்ந்து செயற்படும் திறனை மதிப்பிட்டுள்ளனர், மேலும் எதிர்காலத்தில் வணிகத்தில் தொடர்வதற்கான வளமூலங்கள் தம்மிடம் இருப்பதாக திருப்தி அடைந்துள்ளனர். மேலும், கம்பனியின் செயற்பாட்டில் தொடர்ந்து ஈடுபடும் திறன் குறித்து குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் சபை அறிந்திருக்கவில்லை, மேலும் அவர்கள் கம்பனியின் செயற்பாடுகளை கலைக்கவோ அல்லது நிறுத்தவோ விரும்பவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்ந்து தயாரிக்கப்படுகின்றன.

(உ) நிதிச் சொத்துக்களில் நட்டக்கழிவு இழப்புக்கள்

நட்டக்கழிவு இழப்பு விரிவான வருமானக் கூற்றில் பதிவு செய்யப்பட வேண்டுமா என்பதற்கு புறநிலை ஆதாரம் உள்ளதா என்பதை தீர்மானிப்பதற்கு கம்பனி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அல்லது அடிக்கடி மதிப்பீடுகளை செய்கிறது.

(ஊ) வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களின் கிரயம், உண்மையான மதிப்பீடுகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகிறது. ஒரு உண்மையான மதிப்பீடு என்பது பல்வேறு எடுகோள்களை உருவாக்குவதை உள்ளடக்குகிறது, இது எதிர்காலத்தில் உண்மையான முன்னேற்றங்களிலிருந்து வேறுபடலாம். கழிவு விகிதம், எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள், இறப்பு விகிதங்கள் போன்றவற்றை நிர்ணயம் செய்வது இதில் உள்ளடங்குகிறது. மதிப்பீட்டின் சிக்கலான தன்மை, அடிப்படை எடுகோள்கள் மற்றும் அவற்றின் நீண்ட கால இயல்பு ஆகியவற்றின் காரணமாக, இந்த எடுகோள்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடு மிகவும் உணர்திறன் கொண்டது. ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அனைத்து எடுகோள்களும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

பொருத்தமான கழிவு விகிதத்தை நிர்ணயிக்கும் போது வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் எதிர்பார்க்கப்படும் காலப்பகுதியுடன் தொடர்புடைய கூடுதல் முதிர்வுகளுடன் கூடிய இலங்கை அரசாங்கப் பிணைமுறிகளின் வருமானத்தை முகாமைத்துவம் கருத்தில் கொள்கிறது. இறப்பு விகிதம் பொதுவில் கிடைக்கும் இறப்பு அட்டவணையை அடிப்படையாகக் கொண்டது. எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள் எதிர்பார்க்கப்படும் எதிர்கால பணவீக்க விகிதங்கள் மற்றும் கம்பனியின் எதிர்பார்க்கப்படும் எதிர்கால சம்பள அதிகரிப்பு விகிதத்தை அடிப்படையாகக் கொண்டது.

4. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

கம்பனி அதன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் பயன்படுத்திய குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் கீழே சேர்க்கப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள், வேறு

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள

31 டிசம்பர் 2022 இல் முடிந்த பன்னிரண்டு மாதங்கள்

வகையில் குறிப்பிடாவிட்டால் இந்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து காலப்பகுதிகளுக்கும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகிறது.

4.1 வருமானத்தை இனங்காணுதல்

(i) வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களின் வருமானம்

ஹோட்டலானது விருந்தோம்பல் மற்றும் ஓய்வுநேர சேவைகளை வழங்கும் வணிகத்தில் உள்ளது.

இந்த பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு ஈடாக ஹோட்டல் எதிர்பார்க்கும் கருத்தில்கொள்வதை பிரதிபலிக்கும் ஒரு தொகையில் பொருட்கள் அல்லது சேவைகளின் கட்டுப்பாடு வாடிக்கையாளருக்கு மாற்றப்படும் போது வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களின் வருமானம் இனங்காணப்படுகிறது.

ஹோட்டல் பொதுவாக அதன் வருமான ஏற்பாடுகளில் முதன்மையானது என்பதை முடிவு செய்துள்ளது, ஏனெனில் இது பொதுவாக பொருட்களை அல்லது சேவைகளை வாடிக்கையாளருக்கு மாற்றுவதற்கு முன்னர் கட்டுப்படுத்துகிறது.

முகாமைத்துவம் ளுடுகுசுளு 15 ஐப் பயன்படுத்துவதன் தாக்கத்தை கீழே வெளிப்படுத்தியவாறு மதிப்பீடு செய்துள்ளது:

(அ) சேவைகளை வழங்குதல்

சில நேரங்களில் செயலாற்றல் கடப்பாடுகள் திருப்திப்படுத்தப்படும் போது சேவைகளை வழங்குவதிலிருந்தான வருமானம் இனங்காணப்படுகின்றது.

நாளாந்தம் குடியிருக்கப்படும் அறைகளில் அறை வருமானம் இனங்காணப்படுகிறதுடன் விற்பனையின் போது உணவு மற்றும் பான வருமானம் கணக்கீடு செய்யப்படுகிறது. (அதாவது, செயலாற்றல் கடப்பாடு திருப்திப்படுத்தப்படும் போது). அத்தகைய சேவை வழங்கப்படும் போது ஏனைய ஹோட்டல் தொடர்பான வருமானம் கணக்கீடு செய்யப்படுகிறது.

(ii) வட்டி

அனைத்து நிதிக் கருவிகளும் காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்டு விற்பனைக்குக் கிடைக்கும் என வகைப்படுத்தப்பட்ட வட்டி-தாங்கும் நிதிச் சொத்துக்கள், வட்டி வருமானம் அல்லது செலவினம் பயனுள்ள வட்டி விகிதத்தை (நுஐசு) பயன்படுத்தி பதிவு செய்யப்படுகிறது. இது நிதிக் கருவியின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் அல்லது குறுகிய காலத்தின் மூலம் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசு கொடுப்பனவுகள் அல்லது பெறுவனவுகளை, நிதிச் சொத்து அல்லது பொறுப்பின் தேறிய கொண்டுசெல்லும் தொகைக்கு, பொருத்தமான பட்சத்தில், சரியாகக் கழிவிடும் விகிதமாகும். நிதியல்லாத சொத்துக்களின் மீதான வட்டி வருமானம் குகுரூநு ஒதுக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஏனைய அனைத்து வட்டி வருமானங்களும் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகிறது.

(iii) கடை வாடகை வருமானம்

கடை வாடகை வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படுகிறது.

புரள்வு அடிப்படையிலான வரிகள்

புரள்வு அடிப்படையிலான வரிகளில் பெறுமதி சேர் வரி, சுற்றுலா அபிவிருத்தி வரி மற்றும் சமூக பாதுகாப்பு வரி என்பன உள்ளடங்குகிறது. உரிய சட்டங்களின் மூலம் ஹோட்டலின் வரிகள் காணப்படுகின்றன.

ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படுகிறது.

4.2 செலவினத்தை இனங்காணுதல்

செலவினங்கள் ஏற்பட்ட கிரயம் மற்றும் குறிப்பிட்ட வருமான உருப்படிகளை ஈட்டுதல் ஆகியவற்றுக்கு இடையேயான நேரடி தொடர்பின் அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன. வணிகத்தை நடாத்துவதற்கும், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை திறமையான நிலையில் பராமரிப்பதற்கும் ஏற்படும் அனைத்து செலவினங்களும் விரிவான வருமான கூற்றிற்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன.

விரிவான வருமானக் கூற்றை வழங்குவதற்காக "செலவினங்களின் செயற்பாடு" முறை கம்பனியின் செயலாற்றல் கூறுகளை நியாயமான முறையில் முன்வைக்கிறது என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது,

வருமான வரிச் செலவினம் தற்போதைய மற்றும் பிற்போடப்பட்ட வரியை உள்ளடக்கியது. வருமான வரிச் செலவினம் விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படுகிறது.

4.3 வரிவிதிப்பு

4.3.1 தற்போதைய வரி

தற்போதைய வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களானது நடைமுறை ஆண்டு தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடம் இருந்து அறவிடப்படும் அல்லது செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் தொகைகள் மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய வரியில் உள்ள ஏதேனும் சீராக்கங்கள் என்பவற்றை உள்ளடங்குகிறது. தொகையைக் கணிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் வரி விகிதங்கள் மற்றும் வரிச் சட்டங்கள் அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு இயற்றப்பட்ட அல்லது கணிசமாக இயற்றப்பட்டவையாகும்.

4.3.2 பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரியானது, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகள் மற்றும் நிதி அறிக்கையிடல் நோக்கத்திற்காக அவற்றின் கொண்டுசெல்லும் தொகைகள் ஆகியவற்றுக்கு இடையே அறிக்கையிடல் கால திகதியில் உள்ள தற்காலிக வேறுபாடுகள் மீதான பொறுப்பு முறையைப் பயன்படுத்தி வழங்கப்படுகிறது.

அனைத்து கழிக்கக்கூடிய வேறுபாடுகளுக்கும் பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் இனங்காணப்படுகின்றன. பயன்படுத்தப்படாத வரிச் சலுகைகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளை வரி விதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைக்கக்கூடிய அளவிற்கு முன்னோக்கி எடுத்துச் செல்லுதல் அதற்கு எதிராக கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி சலுகைகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புக்களை முன்கொண்டு செல்லுதல் பயன்படுத்தப்படலாம்.

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் பிற்போடப்பட்ட வரிச் சொத்தின் கொண்டு செல்லும் தொகை மதிப்பாய்வு செய்யப்பட்டு, பிற்போடப்பட்ட வரிச் சொத்தின் அனைத்தையும் அல்லது பகுதியையும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்க போதுமான வரி விதிக்கக்கூடிய இலாபம் கிடைக்க வாய்ப்பில்லாத அளவிற்கு குறைக்கப்படுகிறது.

இனங்காணப்படாத பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றன, மேலும் எதிர்காலத்தில் வரி விதிக்கக்கூடிய இலாபம் பிற்போடப்பட்ட வரிச் சொத்தை அறவிடுவதற்கு அனுமதிக்கும் அளவிற்கு இனங்காணப்படுகிறது.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வரி விகிதங்கள் மற்றும் அறிக்கையிடல் திகதியில் இயற்றப்பட்ட அல்லது தொடர்ந்து இயற்றப்பட்ட வரிச் சட்டங்களின் அடிப்படையில், சொத்துக்கள் காசாக்கப்படும் அல்லது பொறுப்புக்கள் தீர்க்கப்படும் போது ஆண்டில் பொருந்தும் என்று எதிர்பார்க்கப்படும் வரி விகிதத்தில் அளவிடப்படுகிறது.

4.4 நிதியல்லாத சொத்து

4.4.1 அதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

(அ) இனங்காணல் மற்றும் அளவீடு

ஆரம்ப இனங்காணலில்

சொத்துடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்குப் பாயும் வாய்ப்பு இருந்தால், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் இனங்காணப்படுகிறது. மேலும் சொத்தின் கிரயம் டுமுயுளு 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பிரகாரம் நம்பகத்தன்மையுடன் அளவிடப்படும். ஆரம்பத்தில் ஆதனம் மற்றும் உபகரணங்கள், திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட நட்டக்கழிவு இழப்புக்கள் ஏதேனும் இருந்தால், அவற்றின் தேறிய கிரயத்தில் அளவிடப்படுகிறது. அத்தகைய கிரயத்தில் இனங்காணல் அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்பட்டால் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றுவதற்கான கிரயம் மற்றும் நீண்டகால நிர்மாண செயற்திட்டங்களுக்கான கடன் கிரயங்கள் என்பன உள்ளடங்குகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் குறிப்பிடத்தக்க பகுதிகள் இடைவெளியில் மாற்றப்பட வேண்டியிருக்கும் போது குறிப்பிட்ட பயன்தரு ஆயுட்காலம் கொண்ட தனிப்பட்ட சொத்துக்களாக அத்தகைய பகுதிகளை கம்பனி இனங்கண்டு அதற்கேற்ப பெறுமானத்தேய்வுகளை செய்கிறது. அதேபோல், ஒரு பெரிய புதுப்பித்தல் செய்யப்படும் போது, இனங்காணல் அளவுகோல்கள் திருப்திகரமாக இருந்தால், அதற்கு மாற்றாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டுசெல்லும் தொகையில் அதன் கிரயம் இனங்காணப்படுகிறது. ஏனைய அனைத்து பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு கிரயங்களும் ஏற்பட்டவாறு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

தொடர்ச்சியான அளவீட்டில்

அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்ந்து நியாயமான பெறுமதியிலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு அளவிடப்படுகிறதுடன் அத்தகைய மதிப்பீடு வெளிப்புற சுயாதீன மதிப்பீட்டாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நியாயமான பெறுமதி கொண்டுசெல்லும் தொகையிலிருந்து அது பொருண்மையாக வேறுபடாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு போதுமான அதிர்வெண்ணுடன் மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன.

மீள்மதிப்பீட்டு மிகை ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காணப்பட்டு உரிமை மூலதனத்தில் மீள்மதிப்பீட்டு மிகைக்கு செலவு வைக்கப்படுகிறது. எனினும், வருமான கூற்றில் முன்னர் இனங்காணப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு பற்றாக்குறையை இது மாற்றியமைக்கும் அளவிற்கு, இந்த அதிகரிப்பு வருமானக் கூற்றில் இனங்காணப்படுகிறது. மீள்மதிப்பீட்டு பற்றாக்குறையானது, சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் இனங்காணப்பட்ட அதே சொத்து தொடர்பாக ஏற்கனவேயுள்ள மிகையை ஈடுசெய்யும் அளவிற்கு தவிர, இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகிறது. கைதவிர்ப்பு செய்தல் அல்லது அங்கீகாரம் நீக்கப்பட்டதும், விற்கப்படும் குறிப்பிட்ட சொத்து தொடர்பான எந்த மீள்மதிப்பீட்டு ஒதுக்கமும் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களிற்கு மாற்றப்படுகிறது.

சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் இருந்து நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களிற்கான வருடாந்த மாற்றமானது, சொத்துக்களின் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட கொண்டுசெல்லும் தொகையின் அடிப்படையிலான பெறுமானத்தேய்வுக்கும் சொத்துக்களின் ஆரம்ப கிரயத்தின் அடிப்படையிலான பெறுமானத்தேய்வுக்கும் இடையிலான வேறுபாட்டிற்காக செய்யப்படுகிறது.

தொடர்ச்சியான கிரயம்

வணிகத்தைப் பயன்படுத்துவதற்கு அல்லது வணிகத்தின் வருமானமீட்டும் திறனை அதிகரிப்பதன் மூலம் நிரந்தர இயல்புடைய சொத்துக்களைப் பெறுதல், நீடித்தல் அல்லது மேம்படுத்துதல் ஆகியவற்றின் நோக்கத்திற்காகச் செய்யப்படும் தொடர்ச்சியான செலவினங்கள் மூலதனச் செலவாகக் கருதப்படுகிறதுடன் ஒரு சொத்தின் கொண்டுசெல்லும் தொகையில் அத்தகைய செலவினங்கள் இனங்காணப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தினசரி சேவையுடன் தொடர்புடைய கிரயங்கள் ஏற்படும் போது விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

பெறுமானத்தேய்வு

ஆதனம் மற்றும் உபகரணங்களின் கிரயத்தை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் எஞ்சிய பெறுமதிகளுக்கு பதிவழிப்பதற்கு நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுகிறது. கொள்வனவு செய்த திகதியில் இருந்து அகற்றும் திகதி வரை சார்பு விகித அடிப்படையில் பெறுமானத்தேய்வு அறவிடப்படுகிறது. மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்ட பெறுமானத்தேய்வு விகிதங்கள் பின்வருமாறுள்ளன:

சொத்தின் வகை	%
கட்டிடங்கள்	1.82
பொறி மற்றும் இயந்திரங்கள்	7.50
குளிர்சாதன பெட்டிகள் மற்றும் சமையலறை உபகரணங்கள்	7.50
கணனிகள் மற்றும் தொலைக்காட்சிகள்	20.00
மோட்டார் வாகனங்கள்	25.00
தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள்	10.00
செயற்பாட்டு உபகரணங்கள்	33.00

ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும், சொத்தின் இற்றை பெறுமதிகள், பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத்தேய்வு முறைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, பொருத்தமானதாக இருந்தால் சீர்செய்யப்படும்.

இனங்காணப்படாமை

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அகற்றப்படும் போது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாத போது இனங்காணப்படுவதில்லை. சொத்தை இனங்காணாத போது ஏற்படும் ஏதேனும் ஆதாயம் அல்லது நட்டம் (தேறிய அகற்றல் பெறுவனவுகளிற்கும் சொத்தின் கொண்டுசெல்லும் தொகைக்கும் இடையே உள்ள வேறுபாடாக கணிப்பிடப்படுகிறது) சொத்து இனங்காணப்படாத ஆண்டில் விரிவான வருமானக் கூற்றில் "ஏனைய செயற்பாட்டு வருமானத்தில்" இனங்காணப்படுகிறது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படி தொடர்பாக உரிமை மூலதனத்தில் சேர்க்கப்பட்டுள்ள மீள்மதிப்பீட்டு மிகையானது, சொத்துக்கள் இனங்காணப்படாத போது நேரடியாக உரிமை மூலதனத்திற்கு மாற்றப்படுகிறது.

கடன் பெறுதல் கிரயங்கள்

ஒரு சொத்தானது அதன் நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்கு அல்லது விற்பனைக்கு தயாராக இருப்பதற்கு கணிசமான காலப்பகுதியை எடுக்கின்ற அதன் கையகப்படுத்தல், நிர்மாணம் அல்லது உற்பத்திக்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய கடன் பெறுதல் கிரயங்கள் உரிய சொத்தின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்படுகிறது. ஏனைய அனைத்து கடன் பெறுதல் கிரயங்களும் அவை நிகழும் காலப்பகுதியில் செலவிடப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள

31 டிசம்பர் 2022 இல் முடிந்த பன்னிரண்டு மாதங்கள்

4.4.2 நிதியல்லாத சொத்துகளின் நட்டக்கழிவு

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், ஒரு சொத்து நட்டக்கழிவிடக்கூடும் என்பதற்கான அறிகுறி உள்ளதா என்பதை கம்பனி மதிப்பிடுகிறது. ஏதேனும் அறிகுறி இருந்தால், அல்லது ஒரு சொத்திற்கு வருடாந்த நட்டக்கழிவு சோதனை தேவைப்படும் போது, கம்பனி சொத்தின் அறவிடக்கூடிய தொகையை மதிப்பிடுகிறது. ஒரு சொத்தின் அறவிடக்கூடிய தொகை என்பது சொத்துக்களை விட அதிகமாகும் அல்லது காசை உருவாக்கும் அலகின் நியாயமான பெறுமதியிலிருந்து விற்பனை கிரயங்களை கழித்த தொகை மற்றும் அதன் பயன்பாட்டில் உள்ள பெறுமதியாகும் அந்த சொத்து ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்து தொகுதியிலிருந்து பெரும்பாலும் சுயாதீனமான காசு உட்பாய்ச்சல்களை உருவாக்கவில்லை என்றால். தனிப்பட்ட சொத்தொன்றிற்காக தீர்மானிக்கப்படுகிறது, ஒரு சொத்தின் கொண்டு செல்லும் தொகை அதன் அறவிடப்படக்கூடிய தொகையை விட அதிகமாக இருந்தால், சொத்து நட்டக்கழிவிடப்பட்டு அதன் அறவிடப்படக்கூடிய தொகை வரை பதிவழிக்கப்பட்டு கருத்தில் கொள்ளப்படுகிறது. பயன்பாட்டில் உள்ள பெறுமதியை மதிப்பிடுவதில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் வரிக்கு முன்னரான கழிவு விகிதத்தை பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிவிடப்படுகின்றன. தற்போதைய பணப் பெறுமதியின் நேர மதிப்பு மற்றும் சொத்துக்கான குறிப்பிட்ட அபாயங்களின் தற்போதைய சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கிறது. விற்பனை செய்வதற்கான நியாயமான பெறுமதி மற்றும் குறைந்த கிரயத்தை நிர்ணயிப்பதில் பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கணிப்பீடுகள் மதிப்பீட்டு மடங்குகள் அல்லது கிடைக்கக்கூடிய ஏனைய நியாயமான பெறுமதிக் குறிகாட்டிகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன.

மீள்மதிப்பீடு உரிமை மூலதனத்திற்கு எடுக்கப்பட்ட போது முன்பு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துகளைத் தவிர நட்டக்கழிவிடப்பட்ட சொத்தின் செயற்பாட்டோடு ஒத்துப்போகும் செலவின வகைகளில் வருமான கூற்றில் இனங்காணப்படுகின்றன. இந்த விடயத்தில், நட்டக்கழிவு முன்னைய மீள்மதிப்பீட்டின் தொகை வரை உரிமை மூலதனத்தில் இனங்காணப்படுப்படுகிறது.

சொத்துக்களைப் பொறுத்தவரை, ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், முன்னர் இனங்காணப்பட்ட நட்டக்கழிவு இழப்புக்கள் இனி இருக்காது அல்லது குறைந்திருக்கலாம் என்பதற்கான ஏதேனும் அறிகுறி உள்ளதா என மதிப்பீடு செய்யப்படுகிறது. அத்தகைய அறிகுறி இருந்தால், கம்பனி அறவிடப்படக்கூடிய தொகையை மதிப்பீடு செய்கிறது. முன்னைய நட்டக்கழிவு இழப்பு இனங்காணப்பட்டதிலிருந்து, சொத்தின் அறவிடப்படக்கூடிய தொகையைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே, முன்னர் இனங்காணப்பட்ட நட்டக்கழிவு இழப்பு தலைகீழாக பதிவுசெய்யப்படுகிறது. அப்படியானால், சொத்தின் கொண்டுசெல்லும் தொகை அதன் அறவிடப்படக்கூடிய தொகை வரை அதிகரிக்கப்படும். முன்னைய ஆண்டுகளில் சொத்துக்காக இனங்காணப்பட்ட நட்டக்கழிவு இழப்பு எதுவும் காணப்படாவிட்டால், பெறுமானத்தேய்வின் நிகரமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கொண்டுசெல்லும் தொகையை அந்த அதிகரித்த தொகை மீற முடியாது. மீள்மதிப்பீட்டு அதிகரிப்பாக கருதப்படுகிற தலைகீழ் பதிவின் விடயத்தில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் சொத்து கொண்டு செல்லப்பட்டாலன்றி, அத்தகைய மாற்றம் வருமான கூற்றில் இனங்காணப்படுகிறது.

4.4.3 நியாயமான பெறுமதி அளவீடு

கம்பனி அனைத்து அதனம், பொறி மற்றும் உபகரணங்களை நியாயமான பெறுமதியில் அளவிடுகிறது. நியாயமான பெறுமதி என்பது ஒரு சொத்தை விற்பதற்கு பெறப்படும் அல்லது சந்தை பங்கேற்பாளர்களிடையே அளவீட்டு திகதியில் ஒரு ஒழுங்கான கொடுக்கல்வாங்கலின் பொறுப்பை மாற்றுவதற்கு செலுத்தப்படும் விலையாகும். நியாயமான பெறுமதி அளவீடு என்பது சொத்தை விற்பது அல்லது இடம்பெறும் பொறுப்பை மாற்றுவது போன்ற அனுமானத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது.

- சொத்து அல்லது பொறுப்புக்கான முதன்மை சந்தையில் அல்லது
- முதன்மை சந்தை இல்லாத நிலையில், சொத்து அல்லது பொறுப்புக்கு மிகவும் சாதகமான சந்தையில்

முதன்மையான அல்லது மிகவும் சாதகமான சந்தையை கம்பனி அணுகக்கூடியதாக இருக்க வேண்டும்.

ஒரு சொத்து அல்லது பொறுப்பின் நியாயமான பெறுமதி, சந்தைப் பங்கேற்பாளர்கள் தங்கள் பொருளாதார நலனுக்காகச் செயற்படுவதாகக் கருதி, சொத்து அல்லது பொறுப்புக்கு விலை நிர்ணயம் செய்யும் போது சந்தைப் பங்கேற்பாளர்கள் பயன்படுத்தும் அனுமானங்களைப் பயன்படுத்தி அளவிடப்படுகிறது.

நியாயமான பெறுமதியை அளவிடுவதற்கு போதுமான தரவுகள் உள்ள சூழ்நிலைகளில் பொருத்தமான மதிப்பீட்டு நுட்பங்களை கம்பனி பயன்படுத்துகிறது, தொடர்புடைய கவனிக்கக்கூடிய உள்ளீடுகளின் பயன்பாட்டை அதிகப்படுத்துகிறதுடன் கவனிக்க முடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டைக் குறைக்கிறது.

நிதிக்கூற்றுக்களில் நியாயமான பெறுமதி அளவிடப்படும் அல்லது வெளிப்படுத்தப்படும் அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நியாயமான பெறுமதி படிநிலைக்குள் வகைப்படுத்தப்படுகின்றன, அவை ஒட்டுமொத்தமாக நியாயமான பெறுமதி மதிப்பீட்டிற்கு குறிப்பிடத்தக்கதாக இருக்கும் குறைந்த அளவிலான உள்ளீட்டின் அடிப்படையில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன:

நிலை 1 — ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புகளிற்கான செயலில் உள்ள சந்தைகளில் கூறப்பட்ட (சீராக்கம் செய்யப்படாதது) சந்தை விலைகள்

நிலை 2 — நியாயமான பெறுமதி அளவீட்டிற்கு மிகக் குறைந்த அளவிலான உள்ளீடு குறிப்பிடத்தக்கதாக இருக்கும் மதிப்பீட்டு நுட்பங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கவனிக்கத்தக்கதாகும்.

நிலை 3 — நியாயமான பெறுமதி அளவீட்டிற்கு மிகக் குறைந்த அளவிலான உள்ளீடு குறிப்பிடத்தக்கதாக இருக்கும் மதிப்பீட்டு நுட்பங்கள் கவனிக்க முடியாததாகும்.

தொடர்ச்சியான அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கு, ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலும் வகைப்படுத்தலை மீள்மதிப்பீடு செய்வதன் மூலம் படிநிலையில் உள்ள நிலைகளுக்கு இடையே இடமாற்றங்கள் நடந்துள்ளதா என்பதை கம்பனி தீர்மானிக்கிறது. (ஒட்டுமொத்தமாக நியாயமான பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதாக உள்ள குறைந்த அளவிலான உள்ளீட்டின் அடிப்படையில்)

தொடர்ச்சியான நியாயமான பெறுமதி மதிப்பீட்டிற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை கம்பனியின் முகாமைத்துவம் தீர்மானிக்கிறது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்பீட்டில் வெளிப்புற மதிப்பீட்டாளர்கள் ஈடுபட்டுள்ளனர். வெளிப்பற மதிப்பீட்டாளர்களின் ஈடுபாடு, கம்பனியின் கணக்காய்வு குழுவுடன் கலந்துரையாடி அங்கீகாரம் அளித்த பின்னர் முகாமைத்துவத்தால் தீர்மானம் எடுக்கப்படுகிறது. தெரிவு அளவுகோல்களில் சந்தை அறிவு, நற்பெயர், சுயாதீனம் மற்றும் தொழில்முறை நியமங்கள் பேணப்படுகிறதா என்பன உள்ளடங்குகிறது.

4.5 முற்செலுத்திய குத்தகை வாடகை

குத்தகை காணிகள் குத்தகைக் காலப்பகுதியில் சமமான வருடாந்த அடிப்படையில் காலக்கழிவிடப்படுகிறதுடன் குத்தகைக் காலப்பகுதியில் நேர்கோட்டு அடிப்படையில் வருமான கூற்றிற்கு சாட்டுதல் செய்யப்படுகின்றன.

4.6 சரக்கிருப்புக்கள்

காலாவதியான மற்றும் மெதுவாக நகரும் பொருட்களுக்கு உரிய கொடுப்பனவுகளைச் செய்த பின்னர் சரக்கிருப்புக்கள் குறைந்த கிரயத்திலும் மதிப்பிடப்பட்ட தேறக்கூடிய நிகர பெறுமதியிலும் மதிப்பிடப்படுகின்றன. தேறக்கூடிய நிகர பெறுமதி என்பது அவற்றின் தற்போதைய நிலையில் இருந்து விற்பனை செய்யக்கூடிய நிலைக்கு மாற்றுவதற்கான தேறக்கூடிய கிரயம் மற்றும்.'. அல்லது கிரயத்தை அனுமதித்த பின்னர் வணிகத்தின் இயல்பான போக்கில் சரக்குகளை விற்கக்கூடிய விலையாகும்.

ஒவ்வொரு வகை சரக்குகளின் கிரயமும் நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

4.7 நிதிச் சொத்துக்கள் - இனங்காணல் மற்றும் அளவீடு

நிதிக் கருவி என்பது ஒரு நிறுவனத்தின் நிதிச் சொத்து மற்றும் மற்றொரு நிறுவனத்தின் நிதிப் பொறுப்பு அல்லது மூலதன கருவி ஆகியவற்றை உருவாக்கும் எதேனும் ஒப்பந்தமாகும்.

நிதி சொத்துக்கள்

(அ) ஆரம்ப இனங்காணல் மற்றும் அளவீடு

நிதிச் சொத்துக்கள் ஆரம்ப இனங்காணலில் வகைப்படுத்தப்படுகின்றன, அதன் பின்னர் காலக்கழிவிடப்பட்ட கிரயம், ஏனைய விரிவான வருமானம் (ழுஊஐ) மூலம் நியாயமான பெறுமதி மற்றும் இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகிறது.

ஆரம்ப இனங்காணலில் நிதிச் சொத்துக்களின் வகைப்பாடு, நிதிச் சொத்தின் ஒப்பந்த காசுப்பாய்ச்சல் பண்புகள் மற்றும் அவற்றை நிர்வகிப்பதற்கான ஹோட்டலின் வணிக மாதிரியில் தங்கியுள்ளது. ஹோட்டல் நடைமுறைச் சலுகையைப் பயன்படுத்திய குறிப்பிடத்தக்க நிதியுதவி கூறுகளைக் கொண்டிருக்காத வியாபார பெறவேண்டியவைகள் தவிர, இலாபம் அல்லது நட்டம், கொடுக்கல்வாங்கல் கிரயங்கள் மூலம் நியாயமான பெறுமதி இல்லாத நிதிச் சொத்தின் விடயத்தில் ஹோட்டல் ஆரம்பத்தில் நிதிச் சொத்தை அதன் நியாயமான பெறுமதியில் அளவிடுகிறது, ளுடுகுசுளு 15 இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் விலையில் ஹோட்டல் நடைமுறைச் சலுகையைப் பயன்படுத்திய குறிப்பிடத்தக்க நிதிக் கூறுகளைக் கொண்டிருக்காத வியாபார பெறவேண்டியவைகள் அளவிடப்படுகிறது.

ஒரு நிதிச் சொத்தை ழுஊஐ மூலம் காலக்கழிவிடப்பட்ட கிரயம் அல்லது நியாயமான பெறுமதியில் வகைப்படுத்தி அளவிடுவதற்கு, அது நிலுவையாக உள்ள அசல் தொகையில் "முழுமையான அசல் மற்றும் வட்டிகளின் கொடுப்பனவுகள்" காசுப்பாய்ச்சல்களை உருவாக்க வேண்டும்.

நிதிச் சொத்தை ழுஊஐ மூலம் காலக்கழிவிடப்பட்ட கிரயம் அல்லது நியாயமான பெறுமதியில் வகைப்படுத்தி அளவிடப்படுவதற்கு, அது நிலுவையாக உள்ள அசல் தொகையில் "முழுமையான அசல் மற்றும் வட்டி கொடுப்பனவுகள் (ளுநீஐ)" காசுப்பாய்ச்சல்களை உருவாக்க வேண்டும்.

நிதிச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கான ஹோட்டலின் வணிக மாதிரியானது காசுப்பாய்ச்சல்களை உருவாக்குவதற்காக நிதிச் சொத்துக்களை எவ்வாறு நிர்வகிக்கிறது என்பதைக் குறிக்கிறது. வணிக மாதிரியானது, நிதிச் சொத்துக்களை அல்லது இரண்டையும் விற்கும் ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களைச் சேகரிப்பதன் மூலம் காசுப்பாய்ச்சல்கள் ஏற்படுமா என்பதை தீர்மானிக்கிறது.

சந்தையில் ஒழுங்குமுறை அல்லது மாநாட்டின் மூலம் நிறுவப்பட்ட ஒரு காலக்கெடுவிற்குள் நிதிச் சொத்துக்களை வழங்க வேண்டிய நிதிச் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனைகள் வியாபார திகதியில் இனங்காணப்படுகின்றன, அதாவது, சொத்தை கொள்வவனவு செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு ஹோட்டல் உறுதியளிக்கும் திகதியாகும்.

(ஆ) தொடர்ச்சியான அளவீடு

தொடர்ச்சியான அளவீட்டு நோக்கங்களுக்காக, நிதிச் சொத்துக்கள் நான்கு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன:

ை. காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)

ளை. ஒட்டுமொத்த ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் (கடன் கருவிகள்) மறுசுழற்சி மூலம் ழுஊஐ மூலம் நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்

ளைை. இனங்காணப்படாததன் மூலம் ஒட்டுமொத்த ஆதாயங்கள் மற்றும் நட்டங்களை மறுசுழற்சி செய்யாமல் ழுஊஐ மூலம் நியாயமான பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள், (மூலதன கருவிகள்)

ளை. இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்

காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)

இந்த வகை ஹோட்டலுக்கு மிகவும் பொருத்தமானதாகும். பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டால், ஹோட்டல் நிதிச் சொத்துக்களை காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் அளவிடுகிறது:

- நிதிச் சொத்தானது ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களைச் சேகரிப்பதற்காக நிதிச் சொத்துக்களை வைத்திருப்பதற்கு வணிக மாதிரியொன்றுக்குள் வைக்கப்படுகிறது. மற்றும்
- நிதிச் சொத்தின் ஒப்பந்த விதிமுறைகள் குறிப்பிட்ட திகதிகளில் அசல் மற்றும் நிலுவையாக உள்ள அசல் தொகைக்கான வட்டியை மாத்திரமே கொடுப்பனவு செய்யும் காசுப்பாய்ச்சல்களுக்கு வழிவகுக்கிறது.

காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் உள்ள நிதிச் சொத்துக்கள், பயனுள்ள வட்டி (நுஐசு) முறையைப் பயன்படுத்தி தொடர்ச்சியாக அளவிடப்படுகின்றதுடன் அவை நட்டக்கழிவிற்கு உட்பட்டவையாகும். சொத்து இனங்காணப்படாத, மாற்றியமைக்கப்பட்ட அல்லது நட்டக்கழிவிடப்பட்ட போது மிகைகள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் ஹோட்டலின் நிதிச் சொத்துக்களில் காசு மற்றும் வங்கி மீதிகள், குறுகிய கால முதலீடுகள், தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெறவேண்டிய தொகை, வியாபார பெறவேண்டியவைகள் மற்றும் நடைமுறையல்லாத முதலீடுகள் ஆகியன உள்ளடங்குகின்றன.

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள

31 டிசம்பர் 2022 இல் முடிந்த பன்னிரண்டு மாதங்கள்

ஹோட்டல் நிதிச் சொத்துக்களை ழுஊஐ (கடன் கருவிகள்) மூலம் நியாயமான பெறுமதியிலும் நிதிச் சொத்துக்களை ழுஊஐ (மூலதன கருவிகள்) மூலம் நியாயமான பெறுமதியிலும் நிதிச் சொத்துக்களை இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான பெறுமதியிலும் வகைப்படுத்துவதில்லை.

(இ) இனங்காணப்படாமை

நிதிச் சொத்து (அல்லது, பொருந்தக்கூடிய இடங்களில், நிதிச் சொத்தின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிச் சொத்துக்களின் தொகுதியின் ஒரு பகுதி) முதன்மையாக இனங்காணப்படாத போது:

- சொத்திலிருந்து காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமைகள் காலாவதியாகிவிட்டன அல்லது
- ஹோட்டல் சொத்திலிருந்து காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கான அதன் உரிமைகளை மாற்றியுள்ளது அல்லது பெறப்பட்ட காசுப்பாய்ச்சல்களை "யௌள-வாசழரபா' ஏற்பாட்டின் கீழ் மூன்றாம் தரப்பினருக்கு பொருண்மையான தாமதமின்றி முழுமையாக செலுத்துவதற்கான கடப்பாட்டை ஏற்றுக்கொண்டது மற்றும் இது அல்லது அது

(அ) ஹோட்டல் சொத்தின் அனைத்து அபாயங்களையும் வெகுமதிகளையும் கணிசமாக மாற்றியுள்ளது, அல்லது

(ஆ) ஹோட்டல் சொத்தின் அனைத்து அபாயங்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமாக மாற்றவோ அல்லது தக்கவைத்துக் கொள்ளவோ இல்லை, ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றியுள்ளது

ஹோட்டல் ஒரு சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்கான அதன் உரிமைகளை மாற்றும் போது அல்லது "யௌள- வாசழரபா ஏற்பாட்டிற்குள் நுழையும் போது அது உரிமையின் அபாயங்கள் மற்றும் வெகுமதிகளைத் தக்கவைத்துள்ளதா, எந்த அளவிற்கு என அது மதிப்பிடுகிறது. சொத்தின் அபாயங்கள் மற்றும் வெகுமதிகள் அனைத்தையும் மாற்றவோ அல்லது தக்கவைக்கவோ அல்லது சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றவோ இல்லை என்றால், ஹோட்டல் அதன் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு மாற்றப்பட்ட சொத்தை தொடர்ந்து அங்கீகரிக்கிறது. அந்த சந்தர்ப்பத்தில் ஹோட்டல் தொடர்புடைய பொறுப்பையும் இனங்காணுகிறது. மாற்றப்பட்ட சொத்து மற்றும் தொடர்புடைய பொறுப்பு ஆகியன ஹோட்டல் தக்கவைத்துள்ள உரிமைகள் மற்றும் கடமைகளை பிரதிபலிக்கும் அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

மாற்றப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதத்தின் வடிவத்தை எடுக்கும் தொடர்ச்சியான ஈடுபாடு, சொத்தின் அசல் கொண்டுசெல்லும் தொகையின் குறைந்த அளவிலும், ஹோட்டல் திருப்பிச் செலுத்த வேண்டிய அதிகபட்சத் தொகையிலும் அளவிடப்படுகிறது.

(ஈ) நட்டக்கழிவு

இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான பெறுமதியில் வைத்திருக்காத அனைத்து கடன் கருவிகளுக்கும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான (நுஊடுள) கொடுப்பனவை ஹோட்டல் இனங்காணுகிறது. நுஊடுள ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களுக்கும் ஹோட்டல் பெற எதிர்பார்க்கும் அனைத்து காசப்பாய்ச்சல்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டவை, அசல் பயனுள்ள வட்டி விகிதத்தில் அண்ணளவாக கழிவிடப்படுகிறது. எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சல்களில் ஒப்பந்த விதிமுறைகளுடன் ஒருங்கிணைந்த பிணைய விற்பனை அல்லது ஏனைய கடன் மேம்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள் உள்ளடங்கும்.

வியாபார பெறவேண்டியவைகளுக்கு ஹோட்டல் நுஊடுள ஐ கணிப்பிடுவதில் எளிமையான அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. எனவே, ஹோட்டல் கடன் அபாயத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணிப்பதில்லை, ஆனால் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் வாழ்நாள் நுஊடுள இன் அடிப்படையில் ஒரு இழப்பு கொடுப்பனவை இனங்காணுகிறது. ஹோட்டல் அதன் வரலாற்றுக் கடன் இழப்பு அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிதியேற்பாட்டு மெட்ரிக்ஸை நிறுவியுள்ளது, கடன்பட்டோர் மற்றும் பொருளாதாரச் சூழலுக்கு குறிப்பிட்ட முன்னோக்கிக் காரணிகளுக்காக சீர்செய்யப்பட்டது.

நிதி பொறுப்புக்கள்

(அ) ஆரம்ப இனங்காணல் மற்றும் அளவீடு

நிதிப் பொறுப்புகள், ஆரம்ப இனங்காணலில், இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் கடன்பெறுதல்கள், செலுத்த வேண்டியவை அல்லது பொருத்தமான ஹெட்ஜிங் கருவிகளாக நியமிக்கப்பட்ட வழித்தோன்றல்கள் மூலம் நியாயமான பெறுமதியில் நிதிப் பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

அனைத்து நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் இனங்காணப்படுகின்றன, மேலும் கடன்கள் மற்றும் கடன்பெறுதல்கள் மற்றும் செலுத்த வேண்டியவைகளில், நேரடியாகக் பங்களிக்கக்கூடிய கொடுக்கல்வாங்கல் கிரயங்களின் நிகரமாகும்.

